
ஆகஸ்டு 2014

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்
இறக்கை: 3 இறகு : 8
₹.25

## ஜெயகாந்தன் 80



க. பஞ்சாங்கம் ■ இன்குலாப் ■ சு. இராமசுப்பிரமணியன் ■ ஜோ டி குருஸ்
ஏகன் ■ ஈரோடு தமிழன்பன் ■ [illegible] ஆனந்தன் ■ ஆ. சிவசுப்பிரமணியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையாரம்மன்

குமரி மாவட்டம் என்று பொதுவாகச் சொல்வதைவிட தோவாளை, அகஸ்தீஸ்வரம் வட்டங்களை உள்ளடக்கிய நாஞ்சில் நாட்டுப் பகுதியில் தான் ஔவை வழிபாடு பெரிதும் காணப்படுகிறது. ஒன்றிற்கு மேற்பட்ட ஔவையாரம்மன் கோயில்களும் இப்பகுதியில் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

இறக்கை 3 இறகு 8

திருவள்ளுவராண்டு 2045
ஆடி - ஆவணி
ஆகஸ்டு 2014

வெளியிடுபவர்
ஆசிரியர்
வி. முத்தையா

ஆசிரியர் குழு
இரா. எட்வின்
நெற்கோ
சித்தன்

நெறியாளர்கள்
கி.பி. அரவிந்தன்
ஓவியர் வீர. சந்தானம்
டிராட்ஸ்கி மருது

புலம்பெயர் நாடுகளுக்கான தொடர்புக்கு :

கனடா :
வி. மகேந்திரன்
V. Mahenthiran
Mahenthiran_v@hotmail.com

ஐரோப்பா :
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail.com



காக்கையில் வெளியாகும்
கதை, கவிதை மற்றும்
கட்டுரைகளின் கருத்துகள்,
கட்டுரையாளர்களின் கருத்தாகும்.
காக்கையின் கருத்தாகாது.


## அரசை வழி நடத்துவது யார்?

இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்தும், போர்க் குற்றங்கள் குறித்தும் இந்தியாவில் விசாரணை நடத்தத் திட்டமிட்டிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேசக் குழுவினர், இந்தியாவுக்குள் வர விசா மறுக்கப்பட்டிருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

இலங்கை அரசு நடத்திய உள்நாட்டுப் போரில் இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழ்மக்களைக் கூட்டம் கூட்டமாய்ப் படுகொலை செய்து, கொத்துக் கொத்தாய்க் குழித்தோண்டிப் புதைத்த கொடூரங்களையும், புலிகளுக்கெதிரான போர்க் குற்றங்களையும் இலங்கை மண்ணில் விசாரிக்க இலங்கை அரசு மறுத்ததையடுத்து, இந்தியாவில் வந்து விசாரிக்க அனுமதி கோரிய சர்வதேசக் குழுவிற்கு, இந்திய அரசு, விசா வழங்கவே மறுத்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

சகிப்புத் தன்மையையும் சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் கொண்டாடும் பண்பாட்டுக்குச் சொந்தமான இந்திய மக்களை வழிநடத்தும் அரசு, இவ்வாறான முடிவெடுத்திருப்பது துரதிர்ஷ்டவசமானது. தமிழ் மக்களுக்கு எதிரான போரில் நம்பிக்கை மோசடியையும் துரோகத்தையும் இழைத்ததாக முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின்மீது வைக்கப்பட்டக் குற்றச்சாட்டின் ஈரம் இன்னும் அப்படியே இருக்கையில் தமிழ்நாட்டுத் தமிழ்மக்களாலும் இலங்கைத் தமிழ் மக்களாலும் சர்வதேசத் தமிழ் மக்களாலும் கூடப் பெரிதும் நம்பிக்கையுடன் எதிர்கொண்ட, மோதி தலைமையிலான புதிய அரசும் அதையே செய்கிறது என்றால் உண்மையில் இந்த அரசாங்கத்தை வழி நடத்துவது யார்? என்ற கேள்வி, ஒவ்வொரு சாமானியனிடத்திலும் எழவே செய்கிறது.

ராஜபக்சவுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கும் நீதிமன்றத் தளமாக இந்தியாவைப் பயன்படுத்திக் கொள்வதற்காக ஐநா குழு இந்தியா வரவில்லை, இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல், போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை செய்வதற்காகத்தான் வருகிறது. விசாரணை செய்ய வருவதற்கே விசா மறுக்கப்படுகிறது என்றால், இலங்கையில் நடந்த இனப்படுகொலையில் இந்தியாவின் பங்கு என்ன? என்ற கேள்வியும் இந்தியாவை நோக்கி எழுப்பப்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கிறது.

‘ஊடகங்களில் வந்துள்ள செய்திகள் உண்மையாக இருக்குமானால் அது தமிழ் மக்களுக்குப் பெருத்த ஏமாற்றமாகவே இருக்கும்’ என்று தமிழக முதலமைச்சர், அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியிருப்பதை இந்திய அரசு தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், சொந்த நலனுக்காக எதையும் இழக்கும் நாடு இந்தியா என்றும், சகோதரத்துவம், சமத்துவம், மனிதாபிமானம் என்பதெல்லாம் வெள்ளைத்தாளில் எழுதப்பட்டு, விழாக் காலங்களில் வீராவேசம் காட்டும் வெற்று முழக்கம் என்றும் எதிரிநாடுகள் பேசுவதை நேசநாடுகள் மட்டுமல்ல, உலக நாடுகளும் பேசும்; கைகொட்டிச் சிரிக்கும். ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி
உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும் 29 அல்லது 30 ஆம் தேதியில் 'காக்கைச் சிறகினிலே' அஞ்சல் செய்யப்படுகிறது. 5ஆம் தேதிக்குள் இதழ் கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய செல்பேசி எண்: 98414 57503.

---

**உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| தனி இதழ் விலை | ரூ. 25 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 275 |
| இரண்டு ஆண்டு | ரூ. 500 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ. 1250 |
| மாணவர் சந்தா | ரூ. 200 |

(மாணவர்கள். கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றிதழோடு விண்ணப்பிக்க வேண்டும்)

---

**வெளிநாட்டு உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் (வெளிநாடு) | $ 30 |

காசோலைகள், வங்கி வரைவோலைகள். அனைத்தும் KAAKKAI, (A/c No. 60111010005660, SYNDICATE BANK, Triplicane, Chennai - 5. IFSC: Synb0006011) என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும். பணவிடை (மணியாடர்) மூலமும் சந்தா செலுத்தலாம்.

---



தொடர்பு முகவரி :

**காக்கை**

288, டாக்டர் நடேசன் சாலை,

திருவல்லிக்கேணி, சென்னை-600005.

செல்பேசி: 98414 57503

மின்னஞ்சல் : kaakkaicirakinile@gmail.com

https://www.facebook.com/kakkai.cirakinile



---

இதழ் வடிவமைப்பு:

கீழ்வேளூர் பா. ராமநாதன்


# சிறகுக்குள்ளே...





18






32






52





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்தங்கரை

“அப்பா, கதவை நல்லா பூட்டிட்டீங்களா?” என்ற தன் மகளின் வினாவிற்கு பத்தாவது முறையாக தலையாட்டி இருந்தார் சுரேந்திரன். அவள் பயப்படுவதிலும் நியாயம் இருப்பதை உணர்ந்தார்.

பத்துவருடங்களுக்கு முன் இப்படி எல்லாம் பயந்தது கிடையாது. வீடு அப்படியே திறந்து கிடக்கும், வைத்த பொருள் வைத்த வண்ணம் அப்படியே இருக்கும். குழந்தைகள் வீட்டை திறந்து வைத்தே பிரதான சாலையிலுள்ள கடைகளில் தேவையான சார்ட், பேப்பர், ஸ்கெட்ச், போனா என வாங்கச் சென்று விடுவார்கள். வீட்டைத் திறந்து போட்டுப் போவதற்காக, எத்தனை முறை சத்தம் போட்டாலும் “நம்ம ரைஸ் மில்லில் வேலைப் பார்க்கிறவங்க சுத்தி இருக்கிறப்ப எதுக்குப்பா பயப்படணும்” என்று வாயடைத்து விடுவார்கள் குழந்தைகள். இன்று எல்லாம் தலைகீழாக மாறிப் போய்விட்டது.


“என்னப்பா அமைதியா வர்றீங்க...? பழசு ஞாபகம் வந்திருச்சா...?”

“அட நீ வேற... கவனமா டிரைன்ல ஏறணும். நிறை மாதம்... டியூ டேட் அடுத்த வாரம்ன்னு சொல்ற... மதுரையிலேயே பிரசவம் பார்கலாம்ன்னு சொன்னா விடமாட்டீங்கிற. சென்னையிலதான் ஏற்கனவே கன்சல்ட் பண்ணின டாக்டர் இருக்கார்... அவர்கிட்டதான் பார்க்கணும்ன்னு பிடிவாதம் பிடிக்கிற...”

அவள் எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் அலைப்பேசியில் பாட்டு கேட்க ஆரம்பித்திருந்தாள். அவளின் பிடிவாதம் அவருக்குத் தெரியும். அவரும் தன் பழைய நினைவுகளில் மூழ்கிப்போனார்.

அவரின் மூளைக்குள் பதிந்திருந்த அவரின் பழைய வீடு. அந்த ஆத்தோரம், ரைஸ் மில் என நினைவுகள் அவரைச் சுழற்றி அடிக்க, மதுரை ரயில்வே ஜங்சனை அடையும் வரை, அந்த ஆட்டோ, பயணத்தில் கொஞ்சம் கொஞ்சமாக குலுக்கிக் கொண்டிருந்தன.

வைகை ஆற்றின் இருபுறமும் ஆயிரக் கணக்கான குடியிருப்புகள் இருந்தன. எப்போதாவது பெய்யும் மழைக்கு எப்போதாவது புகும் நீரினால் சில வீடுகள் பாதிக்கப்படும். அப்போதெல்லாம் பட்டா இல்லா புறம்போக்கு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிலத்தில் கட்டிய வீடுகளை இடிக்கப் போவதாக மாநகராட்சி அலுவலர்கள் பயமுறுத்திச் செல்வார்கள். அதேவேளையில் பல கட்சியை சேர்ந்த பிரமுகர்கள் வீடு இடிப்படாது என ஆறுதல் கூறி, அவர்களின் அனுதாபத்தின் மூலம் அவர்களின் அச்சத்தை ஓட்டாக மாற்றுவதற்குத் தவறுவதில்லை. சிக்கல் இடியாப்பமாகி இடிப்படுவது உறுதி எனும் போது, பட்டா வாங்கித் தருகின்றோம் என பைசா பார்க்கும் வேலையும் நடைப்பெறும். உழைச்சதில் நாலு காசு சேர்த்து வைத்ததையும் பட்டாவுக்கு ஆசைப்பட்டு பலர் விரயமாக்கி இருந்தனர், அந்த ஆத்தோரத்து புரம்போக்கு ஜனங்கள்.

மதுரைக்கு முதல்வர் வந்தபோது நிர்மலா பள்ளி எதிரே இருக்கும் ஆற்றோரப் பகுதியான என்.எம்.ஆர்.எஸ் புரம் திரண்டு வந்து வழிமறித்து அவரிடம் பட்டா கேட்டு மனுக்கொடுத்தது. மகராசன் போன இரண்டாவது நாள் உயர் அதிகாரிகள் கூட்டமா வந்து, சர்வே என அளந்து சென்றார்கள். ஏதோ பணிகள் நடக்க நிம்மதியானார்கள்.

புறம்போக்கு நிலம் என்பதற்காக எதுவும் இல்லை என்று அர்த்தம் அல்ல. கரண்டு உண்டு. வீட்டுவரி ரசீது உண்டு. ரேசன் கார்டு உண்டு. எலெக்சனுக்கு ஓட்டுப்போட ஓட்டர் சிலிப் வருவதுண்டு. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு உண்டு. எல்லாம் கிடைப்பதால் அவர்களும் இந்த ஆத்தோரத்தையே விரும்பினர். ஏதோ ஒரு வசதிக்காகவும், நிம்மதிக்காவும், வேலைக்காகவும் என்று வசித்து வந்தனர்.

முதல்வரிடம் மனுக்கொடுத்தவுடன் அவர்களின் பதட்டம் கொஞ்சம் தணிந்திருந்தது.

வீடு இடிபடுதல் பயம் நீங்கி நிம்மதியாக வேலை வெட்டிக்குப் போக ஆரம்பித்தனர். அடுத்த பெருமழை வராத வரை எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆற்றில் வெள்ளம் வரும் போது மட்டுமே ஆற்றோடு வீடு காவிப்பண்ணும் பிரச்சனையும் வரும். ஆகவே, மழையை விட வெயிலையே அதிகம் விரும்பினர் என்று கூடச் சொல்லலாம்.

"அண்ணாச்சி... நாங்க இருக்கோம். உங்க வீட்டு பக்கம் ஒருபயல விடுவோம்மா.. எங்களை நம்பி நீங்க மில்லுக்கு போங்க... அவுக உங்க புள்ளைக இல்ல... எங்க மகளுக மாதிரி..."

"டேய் நீங்களும் என் மகன் மகள் மாதிரி தாம்ப... ராத்திரிக்கு பத்து பேரு வேலைக்கு வேணும்... உங்கள நம்பித் தாண்டா என் ரெண்டு பொட்டப்புள்ளைகளையும் விட்டுட்டு மில்லுக்கு போறேன். அது கெடக்கட்டும்... இன்னைக்கு நெல் ஊறல் போட்டிருக்கு... ஆளுகள வேலைக்கு கூட்டிட்டு வந்திடுங்க..."

" என்னப்பா... உங்க சட்டை, பேண்ட் எல்லாம் எடுத்து வச்சிட்டீங்களா... மாத்திரை மருந்தெல்லாம் எடுத்துகிட்டீங்களா?" என அவரின் நினைவுகளுக்கு தடைப் போட்டாள் பாபுவின் மகள் கயல்விழி.

"நான் என்ன சின்ன பிள்ளையாம்மா... எனக்கு வேண்டியதெல்லாம் எடுத்து வச்சுகிட்டேன்..."

ஆட்டோ மதுரை இரயில்வே நிலையத்தினுள் இருவரையும் இறக்கி விட்டது. உருளும் அந்த சூட்கேசை ஒற்றைக் கையில் பிடித்து இழுத்துகொண்டும், மறு கையில் ஒரு பெரிய பேக்கை தூக்கியும் வந்த சுரேந்திரனுக்கு வயது ஐம்பத்தைந்து நெருங்கி கொண்டிருந்தது. ரைஸ் மில் வியபாரம் செய்தவருக்கு வேலைக்கு ஆள் கிடைக்க வில்லை என்பதால் மில்லை விற்று விட்டார். தற்போது வீட்டில் அரிசி வாங்கி போட்டு, கிலோ கணக்கில் கடன் கொடுத்து வியாபாரம் செய்கின்றார்.

"அப்பா மெதுவா போங்க... அவசரம் இல்லை... இன்னும் மணி இருக்கு" என்றாள். அவர் அவளுக்காக மிகவும் மெதுவாகவே சென்றார் என்பது தான் உண்மை. ஒருவழியாக ரயில் பெட்டியை வந்தடைந்தனர்.

இரயில் மெல்ல நகர்ந்தது. சுரேந்திரன் ஜன்னல் திரையை விலக்கி பார்க்கிறார். வைகை சாக்கடையை தன்னில் தேக்கி வைத்து குட்டையாக காட்சியளித்தது. வைகை கரை இருபுறமும் தார் சாலைகள் நீண்டு சென்றன. அவர் கண்களுக்கு வைகை தன் தலையை விரித்து போட்டிருப்பது போல காட்சியளித்தது. வைகை தன் தலையை விரித்து அவிழ்த்து விட்ட முடிச்சில் ஏராளமான வீடுகள், குடும்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்து கொத்தாக காணமால் போகி இருந்தன. கண்ணகி முடியை அவிழ்த்து நீதிக்காக ஆடிய ஆட்டத்தில் அழிந்த மதுரையை விட மோசமாக அழிவை நோக்கிச் சென்றிருந்தது. வீடுகள் இன்றி, வருமானம் இன்றி தங்கள் அரசாங்கத்தாலே அந்நியப்படுத்தப்பட்டு இருந்தனர்.

ஆற்றங்கரையில் இருந்த பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களுக்கான வாழ்விடம் தேடி குடிபெயரத் தொடங்கி இருந்தனர். அதன் தொடர்ச்சியாக குழந்தைகள் கல்வி இன்றித் தவித்தனர். பெரியவர்கள் பட்டினியால் பிச்சை எடுத்தனர். இளைஞர்கள் வேலை யின்றி பெரிய வீடுகளில் திருடத் தொடங்கி இருந்தனர்.

குடிசைகள் அற்ற ,ஆத்தோர பெரிய வீடுகளில் பயம் தொற்றிக் கொண்டு இருந்தது. எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என பயந்தே வீடுகளைப் பூட்டியே வைத்திருந்தனர். பெண்கள் தனித்துச் செல்ல முடியவில்லை. கொலைகள் பெருகி கொண்டிருந்தன. வழிப்பறிகள் பகல் பொழுதிலும் சர்வ சாதாரணமாக நடந்தன.

அன்று வேலை முடிந்து பத்தாயிரம் ரூபாய் பணத்தை மஞ்சள் பையில் சுருட்டி எடுத்து வந்துகொண்டிருந்த சுரேந்திரனை நோக்கி நான்கைந்து இளைஞர்கள் ஓடி வந்தனர். அதில் ஒருவான், டேய் நம்ம அண்ணாச்சிடா... ஓடுங்கடா... என்றான். அவன் குரல் அவருக்கு மிகவும் பரிச்சியமானதாக இருந்தது.

மறுநாள், தன்னிடம் வேலைப்பார்த்த சரஸ்வதியை அழைத்து கையில் ஐந்தாயிரம் கொடுத்து, "இந்த ரூபாயை அட்வான்சா வைச்சு முதல்ல ஒரு வீடு பிடி.... அப்புறம் தெரிஞ்ச வேலைக்கு போ. உன் புருசன இரவு நேரத்தில வெளிய சுத்த விடாதே" என்று மட்டும் சொல்லி அனுப்பி வைத்தார். அதற்கடுத்த நாள் கண்ணீர் மல்க... இனி இந்த மாதிரி தப்ப பண்ணமாட்டேன் அண்ணாச்சி... என்ன மன்னிச்சுடுங்க... என்று ஒப்பாரி வைத்தான் சரஸ்வதியின் புருசன் ராமு.

"முதலாளி... மன்னிச்சுட்டேன்னு ஒரு வார்த்தை சொல்லுங்க. பட்டினி ஒருபக்கம் ... பணக்கார நாய்ககளுக்கு எங்கள மாதிரி குடிசைக பக்கத்தில இருக்கிறது பிடிக்காம, அரசாங்கத்துக்கு சாதகமா... ரோடு கொண்டு வந்தாங்கன்ற. கோபம்." என்றவனை வேறெந்தப் பேச்சும் போசாதவாறு சிரித்தப்படியே... "உழைக்கிற காசே நிலைக்கிறது இல்ல. நல்ல வேலையை தேடி, பிள்ள குட்டிய காப்பாத்துற வழியை பாரு..." என அனுப்பி வைத்தார்.

அந்த ஏழை ஜனங்க நினைத்தப்படியே தினமணி பேப்பர் கம்பெனி விரகனூர் கொண்டு செல்லப்பட்டது. அந்த இடம் பிளாட்டுகள் ஆக்கப்பட்டன. ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க், மல்டி காம்பக்ஸ் பில்டிங்க்ஸ், தனித் தனி வீடுகள், அப்பார்ட்மெண்ட் வீடுகள் என நகைக்கடை வைத்திருக்கும் மேல்ஜாதிக்காரர்கள் குடியேறி பங்கஜம் காலனி நவீன நகரமாக உருமாறி இருந்தது. இவருக்கு இப்போதும் அந்த நவீன மாளிகைகளைப் பார்க்கும் போது சரஸ்வதியின் புருசன் ராமு கூறியது நினைவிற்கு வந்து செல்லும்.

"அப்பா... ஆத்த பார்த்தாலே மகளை மறந்திடுவீங்களே... சாப்பிடுங்க".

"ஆறு என்ன பாவம் செய்தது. இப்படி இந்த மக்களின் வாழ்வு போலவே வறண்டு கிடக்கு.. சாலை விரிவாக்கத்தில் எத்தனை பேர் இப்படி வீட்டை இழந்து..பொழப்பு தேடி.. வருமானம் இல்லாம அலைஞ் சுக்கிட்டு இருந்திருப்பாங்க. மனசு பதறுது ..எல்லாம் கண்மூடி கண் திறக்குறதுக்குள்ள முடிஞ்சு போகுது...."

"அப்பா புலம்பாம்ம, சாப்பிடுங்க..."

"இருவரும் சாப்பிட்டு முடித்தனர். சுரேந்திரன் கைகழுவ சென்றார். அப்போது அவர்கள் கம்பார்ட்மெண்டில் அப்பர் பெர்த்க்கு ஒரு ஆசாமியை அமர வைத்து டிடிஆர் சென்றார்.

சுரேந்திரன் மெதுவாக பெண்ணை அழைத்து கைகழுவி வரச் சொன்னார். அவள் வரும் வரை சுரேந்திரன் அப்பர் பெர்த் புது ஆசாமியை நோட்டமிட்டார். மிக உயரமான உருவம். எங்கோ பார்த்த மாதிரி இருந்தது. யோசித்தார். நினைவுக்கு வரவில்லை. தடிமனான அவரின் உருவத்தை பார்த்து தன் கைப்பையை பத்திரப்படுத்தி கொண்டார். ரவுடியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குமோ? அப்போது அந்த மனிதன் தன் கைதுப்பாக்கியை தலைமாட்டுக்கடியில் வைத்தார். சுரேந்திரனின் மனசு புலம்ப ஆரம்பித்தது. பாவி... துப்பாக்கி வேற வச்சுருக்கான். பார்க்க வேற ரவுடியா இருக்கான். இருந்தாலும் அவனுக்கு காக்கி உடையணிந்து அழகு பார்த்தார். பொருந்தவில்லை. கள்ளக்கடத்தல் கும்பலை சேர்ந்தவனாக இருப்பானோ!

மெல்ல அந்த கம்பார்டுமெண்டிலுள்ள அனைவரும் உறங்கிப் போனார்கள். சுரேந்திரன் மட்டும் அவ்வப்போது கீழே மகளை பார்த்த வண்ணம் படுத்திருந்தார். அவளும் அவ்வப்போது தந்தை உறங்கி விட்டாரா என பார்த்துக்கொண்டாள். விடியலில் 5 மணிக்கு வேகமாக எழுந்திருந்தவர். கை துப்பாக்கி கீழே விழுந்து கிடப்பதை கண்டு திகைத்தவர். வேகமாக உறங்கியவரை எழுப்பி உங்கள்... என வாய் குளறி அதைச் சுட்டிக்காட்டி பதறினார். அவர் நிதானமாக கை துப்பாக்கியை எடுத்து தலையணைக்கு உள்ளே துப்பாக்கியை வைத்துக்கொண்டார்.

“சார்... சூடா காப்பி சொல்லட்டா. ரெம்ப பதறிட்டீங்களோ. என்ன திருடன் மாதிரி பார்த்துகிட்டே இருந்தீங்க.”

”அதெல்லாம் இல்லை சார். எதுக்கு துப்பாக்கி வச்சு இருக்கீங்க.”

“நான் தூத்துக்குடி எம்.பி. மதுரையில் ஒரு வேலையா வந்துட்டு... டெல்லி கிளம்புறேன். பாதுகாப்புக்கு கொடுத்தாங்க. எப்பவும் அத தலைக்கடியில வச்சு தூங்கலைன்னா... தூக்கம் வரமாட்டீங்குது...”

“தப்புந் தவறுமா... பாடாத இடத்திலே பட்டு வெடிச்சுட்டா என்ன செய்வீங்க. என் பிள்ளை மேல வெடிச்சுடுமோன்னு பயந்து பயந்துதான் தூங்கினேன்.”

“சார் உங்க மக டெலிவரிக்கு போறீங்க போல இருக்கு. உங்கள உங்க மக கவனிக்கிறதும். நீங்க உங்க மகள கவனிக்கிறதும்... பார்த்து புல்லரிச்சு போயிட்டேன். என் மக ஞாபகம் வந்திடுச்சு. முதல் பிரசவத்துக்கு அப்புறம் அனுப்பி வச்சது தான். அவள அதுக்கப்புறம் பார்க்க முடியல. மூன்று வருசம் ஆச்சு. நானும் எம்.பி. ஆகி மூன்று வருசம் ஆக போறது. உங்க தந்தை மக பாசம். என் மனசை கரைய வச்சுடுச்சு. எப்பவும் சென்னைக்கு வந்தா எக்மோர் இம்பாலாவிலதான் ரூம் போட்டு குளிச்சுகிட்டு மீனம்பாக்கம் கிளம்பி டெல்லி போவேன். மனசு உறுத்திருச்சு. சார்... மகள் கிட்ட கௌரவம் பார்க்கிறதா. உங்க மகளாட்டம் என் மேலே உசிர வச்சுருக்கா. (கண் கலங்கியபடி பேசிய எம்.பி.) நேரா மக வீட்டுக்குதான் போறேன்.” என்ற போது கண்களில் கண்ணீர் தேங்கியிருந்தது.

“மகள நேசிக்கிற... மகளை விட உங்க மண்ணையும் அந்த மக்களையும் நேசிக்கிறத உங்க பேச்சில் இருந்து அறிஞ்சுகிட்டேன். அதான் சார்... உங்களுக்கு உங்க வைகை ஆத்தோர ஜனங்க உங்கள விட்டு பிரிஞ்சு போனது கூடா இன்னும் அழியாம மனசுல இருக்கு.”

“சார்... எனக்கு சோறு போட்டவனுங்க சார். என் குடும்பம் நல்ல நிலையில் இருக்கிறதுக்கு பாடுபட்டவனுக. அண்ணாச்சி அண்ணாச்சின்னு உருகுவானுங்க. எல்லாம் ஒரே நாளில் காணாமல் போயிடுச்சு.என் மக இரண்டு பேரும் படிச்சு. இன்னிக்கு பேங்க்ல வேலை பார்க்கிறாங்கன்னா. அதுக்கு அவுங்க உழைப்புமொரு காரணம் சார். வீடில்லாம தவிச்சப்பா. நான் அழுதுருக்கேன்.”

“அப்பா திரும்பவும் ஆரம்பிச்சுட்டீங்களா. மூஞ்சி கழுவிட்டு, டீ சாப்பிடுங்க” என்றாள்.

அவர் சிரித்துக் கொண்டே, “சரி உங்க பொண்ணு இனி உங்கள கவனிக்க ஆரம்பிச்சுடுவாங்க. இந்தாங்க என் விசிட்டிங் கார்டு. எதுவும் உதவி தேவைன்னா, ஒரு போன் போடுங்க. நீங்க போட மாட்டீங்க. உங்க நம்பர தாங்க” என சுரேந்திரனின் விசிட்டிங் கார்டை பெற்றுக்கொண்டார்.

வண்டி மெதுவாக சென்னை எழும்பூரை அடைந்தது. சக்கரங்கள் தண்டவாளத்தில் உரசி நிற்க... இரும்பு துகளின் வாடை இரயில் பயணத்தை அடையாளப்படுத்தி ஆத்தங்கரையோர மக்களைப்போல் அவர்களின் உடலில் ஒட்டிக்கொண்டு இருந்தது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### கன்னியாகுமரி மாவட்டத்தில்

# ஔவை வழிபாடும், ஔவையாரம்மன் கோயில்களும்

"உப்புக்கும் பாடி, புளிக்கும் ஒரு கவிதை ஒப்பிக்கும்
எந்தன் உள்ளம்"
– ஔவையார்

தொண்டமான் இளந்திரையனைப் புகழ்ந்து பாடி, பெரும் பொருளைப் பரிசாகப் பெற்றுத் திரும்பும் பெரும்பாணன் (சிறிய யாழ், பேரியாழ் என யாழ் இரு வகைப்படும். சிறிய யாழை மீட்டுபவன் சிறு பாணன், பேரியாழை மீட்டுபவன் பெரும் பாணன்), வழியில் ஒரு ஏழைப் பாணனைச் சந்திக்கிறான். இளந்திரையனின் பெருமை, அவனது நாட்டு வளம், அவனது நாட்டை அடைவதற்கான வழி ஆகியவற்றைப் பற்றி விரிவாகச் சொல்லி, அந்த ஏழைப் பாணனை, இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்ததுதான், 'பெரும்பாணாற்றுப்படை' என்கிற சங்க இலக்கியம்.

இப்படி, சங்க இலக்கியத்திலும் சரி, அதற்குப் பிந்தைய காலங்களிலும் சரி, அரசர்கள், குறுநில மன்னர்கள், நிலக் கிழார்கள், என செல்வப் பெருந்தகைகளை மட்டுமே புகழ்ந்துபாடி, பெரும் பொருளைப் பரிசாகப் பெற்று வந்தத் தமிழ்ப்புலவர்கள் மத்தியில், அரசர்களைப் பாடிய அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயால், ஏழை மக்களை, அவர்கள் தரும் உப்பில்லா கூழுக்காகவும் பாடியவர், பெண்பாற்புலவரான ஔவையார் ஒருவர் மட்டுமே.

எனவேதான், ஔவையார் மட்டுமே, மக்கள் கவிஞர் என்கிற தனிச் சிறப்புக்கு உரியவராகிறார். அதன் பொருட்டே, தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும், அனைத்து மக்களிடமும், பரவலாக அறியப்பட்ட தமிழ்ப் புலவர்களில், ஔவையார் முதன்மையானவராகத் திகழ்கிறார். முழு நிலவு நாள் அன்று, குழந்தைக்கு சோறூட்டும் தாய்க்கு, அந்த நிலவில், தன் கைத்தடியுடன் ஔவையார் காட்சி தருவதும்கூட, அப்படிப்பட்ட மனநெருக்கம் ஏற்படுத்தியதுதானே.

சங்ககாலம் தொடங்கி, வெவ்வேறு காலக்கட்டங்களில், ஒன்றிற்கு மேற்பட்ட ஔவையார்கள் வாழ்ந்திருக்கக்கூடும் என்கிறார்கள் தமிழ் ஆய்வாளர்கள். அவர்களில் ஒரு ஔவை, இன்றைய குமரி மாவட்டம் அமைந்திருக்கும் நிலப்பரப்பில், பிறந்தோ அல்லது இங்கு வந்தோ நீண்டகாலம் வாழ்ந்திருக்க வேண்டும். காரணம், இப்பகுதியில் மட்டுமே ஔவை தெய்வமாக்கப்பட்டு, 'ஔவையாரம்மன்' என்ற பெயரில் நீண்டகாலமாக மக்களால் வழிபடப்பட்டு வருகிறார் என்பதாகும்.

குமரி மாவட்டம் என்று பொதுவாகச் சொன்னபோதும், தோவாளை, அகஸ்தீஸ்வரம் வட்டங்களை உள்ளடக்கிய நாஞ்சில் நாட்டுப் பகுதியில்தான், ஔவை வழிபாடு பெரிதும் காணப்படுகிறது. ஒன்றிற்கு மேற்பட்ட ஔவையாரம்மன் கோயில்களும் இப்பகுதியில்தான் அமைந்துள்ளன.

குமரி மாவட்டத்தில், ஔவையாரம்மன் கோயில் எனப்பொதுவாக அறியப்படும் கோயில், நெடுமங்காடு நெடுஞ்சாலையில், ஆரல்வாய்மொழிக்கும், பூதப்பாண்டிக்கும் இடையே அமைந்துள்ள கோயிலே ஆகும். மலைகளும் தென்னந்தோப்புகளும் சூழ்ந்த நிலப்பரப்பில், இக்கோயில் அமைந்துள்ளது. கோயிலின் பின்புறம், தோவாளைக் கால்வாய் ஓடுகிறது.

இந்தக் கோயில், முந்நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது எனவும், அருகில் உள்ள, தாழக்குடி என்னும் ஊரைச் சேர்ந்த வெள்ளாளர் சமுதாயத்தால் பராமரிக்கப்படுகிறது எனவும் சொல்லப் படுகிறது. முகப்பில் உள்ள வாயில் கதவு தவிர, கோவிலின் கட்டமைப்பில் எவ்வித மாற்றமும் செய்யப்படாமல், பழமையானத் தோற்றத்தைத் தக்க வைத்திருப்பது, ஒரு சிறப்பு எனச்சொல்லலாம்.

ஔவை வழிபாடு பெண்களுக்கானது. அதனால், ஆடி மாத செவ்வாய்க்கிழமை களில், ஆயிரக்கணக்கில் பெண்கள் இந்த ஔவையாரம்மன் கோயிலில் கூடுகிறார்கள். ஆடி மூன்றாம் செவ்வாய்க்கிழமை சிறப்பானதாகச் சொல்லப்படுகிறது. அன்று பெண்கள் கூட்டமும், மற்ற நாட்களைவிட கூடுதலாகக் காணப்படுகிறது.

ஔவை எப்படி எளிமையாக வாழ்ந்தாரோ, அப்படித்தான் ஔவையாரம்மன் வழிபாடும் மிக எளிமையானது. பச்சரிசி மாவில், கொழுக்கட்டைகளை மட்டுமே, பல வடிவங்களில் பிடித்து, அவித்து, அவற்றை ஔவைக்குப் படையலிட்டு வழிபடுகிறார்கள். காலையில் கோயிலுக்குக் குழந்தைகளோடு வரும் பெண்கள், வழிபாடு முடிந்து, மாலையில்தான் வீடு திரும்புகிறார்கள்.

மற்றுமொரு ஔவையாரம்மன் கோயில், நாகர்கோயில் _ திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையில், முப்பந்தல் என்னும் இடத்தில் உள்ளது. முப்பந்தல் இசக்கியம்மன், குமரி மாவட்டத்தில் மிகவும் பெருமைக்குரிய பெண் தெய்வம். இசக்கியம்மன் கோயில் வளாகத்தை ஒட்டி, கிழக்குப் புறமாக, ஔவையாரம்மன் கோயில் அமைந்துள்ளது.

கோயிலின் நுழைவு வாயிலில், மூவேந்தர் மடம் ஔவையாரம்மன் கோயில் என எழுதப்பட்டுள்ளது. அது கோயிலின் வரலாற்றை சுருக்கமாகக் கூறுகிறது.

பாரியைப் போரில் வென்ற மூவேந்தர்கள், பாரியின் மகளிர் இருவரையும் சிறையெடுத்துச் சென்றனர். இதனை அறிந்த ஔவையார், மூவேந்தர்களைச் சந்தித்து, முறையீடு செய்து, அம்மகளிர் இருவரையும் மீட்டு, அவர்கள் விருப்பப்படியே திருமணமும் செய்து வைத்தார் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனைவரும் அறிந்த செய்தி. அப்படி ஔவையார் பாரி மகளிர் திருமணத்தை நடத்தி வைத்ததாகச் சொல்லப்படும் இடம், இந்த முப்பந்தல் என்பது பலர் அறியாதது.

சேர, சோழ, பாண்டிய மன்னர்களுக்குத் தனித்தனியாக மூன்று பந்தல்கள் அமைத்து, அவற்றின்கீழ் அம்மூவேந்தர்கள் வீற்றிருக்க, அவர்கள் முன்னிலையில், பாரி மகளிர் திருமணம் நடைபெற்றதன் காரணமாகவே, இந்த இடம் முப்பந்தல் என அழைக்கப்பட்டு வருகிறது என்பதாக வாய்மொழி வரலாறு கூறுகிறது.

ஔவை எளிய மக்களோடு கலந்து வாழ்ந்தவர் என்றபோதும், மூவேந்தர்களிடமும்கூட நியாயம் கேட்கும் துணிச்சலைப் பெற்றிருந்தார் என அறியும்போது, தமிழர் வரலாற்றில், அவரே முதல் பெண் போராளி எனவும் அடையாளம் காணப்படுகிறார். மக்கள் குறைகளை, மன்னர்களிடமும் எடுத்துச் சொல்லி வந்ததைப் பார்க்கும்போது, ஔவை மக்களுக்கும், மன்னர்களுக்கும் இடையே ஒரு பாலம் போல செயல்பட்டு வந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

குமரி மாவட்டத்திற்கென்று சில தனிச்சிறப்புகள் உள்ளன. மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல், பாலை என்கிற அய்ந்து நிலப்பரப்புகளும் நெருக்கமாக அமைந்து, திணை மயக்கத்தினை ஏற்படுத்தி நிற்கின்றன. மேற்கே அரபிக்கடல், கிழக்கே வங்கக்கடல், தெற்கே இந்துப் பெருங்கடல் என்கிற இந்திய நாட்டின் அதே கடல் எல்லைகள், குமரி மாவட்டத்திற்கும் அப்படியே பொருந்திப் போவது, இந்தியாவில் வேறு எந்த மாவட்டத்திற்கும் இல்லாத தனிச்சிறப்பு ஆகும்.

நிமிர்ந்து நிற்கும் இமயத்தை விடவும், வயதில் மூத்த, முதிர்ந்த, மேற்குத் தொடர்ச்சிமலை, குமரி மாவட்டம் முழுவதுமே பரவி, விரவி நிற்கின்றது. அதன் காரணமாக, தோவாளை, மருங்கூர், வெள்ளிமலை, குமாரகோயில் போன்ற ஊர்களில், குன்றுகளின்மீது தமிழ்க்கடவுள் முருகனுக்குக் கோயில்கள் அமைந்துள்ளன. "சிதறால்" மலைப்பகுதியில், அற்புதமான சமணப் படுக்கை உள்ளது. மாவட்டத்தில் சில குடவரைக் கோயில்களும் உள்ளன.

அப்படி ஒரு குடவரைக் கோயில், ஔவைக்கும் உள்ளது. நெடுமங்காடு நெடுஞ்சாலையில் இருந்து கடுக்கரைக்கு விலகிச் செல்லும் சாலையில், முதலாவதாக அமைந்துள்ளது 'குறத்தியறை' என்கிற அழகிய கிராமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொரு காலத்தில், இப்பகுதியில் மலைக்குறவர்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள். அதன் காரணமாகவே குறத்தியறை என்கிற பெயர் வாக்கு ஏற்பட்டுள்ளது. அதற்கு ஆதாரமாக, இப்பகுதியில் இருந்த ஏராளமான குறவர் சிலைகளைக் கூறலாம். அவையாவும், தலைகள் துண்டிக்கப்ப்டட நிலையில், மண்ணில் புதைந்துள்ளதாக இப்பகுதி மக்கள் கூறுகிறார்கள். எனக்கு வழித்துணையாக வந்த, குறத்தியரை ஊராட்சி மன்ற உறுப்பினர் சிவசுப்பிரமணியத்தின் உதவியால், அப்படி ஒரு தலையில்லா குறவர் சிலையைக் காணும் வாய்ப்பு எனக்கும் கிட்டியது.

ஒரு மிகப்பெரிய கருங்கல் குன்றில், பாறையைக் குடைந்து, ஏறத்தாழ ஆறடி நீளம், ஆறடி அகலம், எட்டடி உயரம் கொண்ட குகை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதன் உட்புறம், பாறையில், ஔவையின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. மற்ற கோயில்களில் காணப்படுவது போல், கலை நேர்த்தியுடன் உருவாக்கப்பட்ட சிலையாக இது இல்லை.

இன்று, எளிதில் மக்கள் சென்றுவரக் கூடியதாக இந்த ஔவையாரம்மன் கோயில் இல்லை. ஆடிமாத செவ்வாய்க்கிழமைகளில் மட்டுமே, குறத்தியரை ஊரைச் சேர்ந்த பெண்கள் இங்கே வந்து கொழுக்கட்டை அவித்து வழிபடுகிறார்கள். இப்படி ஒரு குடவரை ஔவைக் கோயில் இருப்பது பற்றி, குமரி மாவட்டத்திலேயே பெரும்பகுதி மக்கள் அறிந்து வைத்திருக்கவில்லை என்பதும் உண்மை. பராமரிப்பு இல்லை யென்றாலும் கூட, இன்றுவரை, ஔவை சிலை சேதமில்லாமல் இருப்பதே பெரிய ஆறுதல்.

குடவரைக்குள் சென்று, ஔவையின் உருவத்தை அருகில் பார்த்தபோது, வியப்பாக இருந்தது. ஔவை என்றாலே, கூன் போட்ட உடலுடன், கையில் தடி ஊன்றி நடக்கும் அந்த பாட்டி உருவம்தான் நாம் எல்லோருக்கும் நினைவிற்கு வரும். அப்படித்தான் மற்ற இரு ஔவையாரம்மன் கோயில்களிலும் உள்ளன.

ஆனால், இந்த குடவரை ஔவை, மூதாட்டி அல்ல. மாறாக, நல்ல உடல் கட்டுடன் இளம் வயது ஔவையாக, 'தீர்க்கமான' தோற்றத்துடன் காட்சியளிக்கிறார். கன்னிப் பருவத்திலேயே, முதுமைப் பருவத்தை வரமாகக் கேட்டு வாங்கியவர் ஔவை என்கிற 'ஔவையார்' திரைப்படக் காட்சியும், நம் அனைவர் பொதுப் புத்தியிலும் உறைந்துபோய் இருக்கிறதும் ஆகிய, ஔவையின் மூதாட்டி பற்றிய கருத்துருவை, இந்த குடவரை ஔவையின் உருவம் உடைத்தெறிகிறது.

எல்லோரையும் போல, கன்னிப் பருவத்தையும், நடுவயது பருவத்தையும் வாழ்ந்து, கடந்துதான் ஔவை, முதுமையை அடைந்திருக்க வேண்டும் என்கிற அவதானிப்பையும் கூட இந்த ஔவை சிலை ஏற்படுத்துகிறது. இது, ஔவை பற்றிய நம் சிந்தனையை, ஒரு புதிய தளத்திற்கு இட்டுச் செல்கிறது எனலாம்.

குடவரை ஔவை கோயிலுக்குச் செல்லும் வழியில், முன்புறம் பார்த்தால் பெருமாளும், பின்புறம் பார்த்தால், சிவனும் நிற்பது போலத் தோன்றும் விதத்தில் அமைந்த கருங்கற்சிலை நம் கவனத்தை ஈர்க்கிறது. வைணவத்தைத் தழுவிய ஏதோ ஒரு பாண்டிய மன்னன் ஆடசி செய்த காலத்தில், இச்சிலை நிறுவப்பட்டிருக்க வேண்டும். அருகாமையில் உள்ள அழகிய பாண்டியபுரம் என்கிற ஊர், அந்த கருத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

குமரி மாவட்டத்தை ஒட்டி அமைந்துள்ள நெல்லை மாவட்டத்திலும், மேற்குத் தொடர்ச்சிமலை அடிவாரத்தில் அமைந்துள்ள, பாபநாசம், குற்றாலம் பகுதிகளிலும், ஔவையாரம்மன் வழிபாடு பரவலாகக் காணப்படுகிறது. குற்றாலம், செண்பகாதேவி அருவிக் கரையிலும், ஔவைக்கு ஒரு கோயில் உள்ளது. இந்தக் கோயிலில், ஆண்டுதோறும் சித்திரை மாதம், முழுநிலவு நாள் அன்று சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

எங்கு சென்றாலும் ஔவை வழிபாடு பெண்களுக்கானது மட்டுமே. ஒருசில வீடுகளில், ஔவையாரம்மன் சிலைகளை வைத்து வழிபடும் வழக்கம் இருந்து வந்துள்ளது. அப்படிப்பட்ட ஒரு வீட்டில், ஆடிமாத செவ்வாய்க்கிழமை ஒன்றில், பெண்கள் கூடி, ஔவைக்கு இரவுநேர வழிபாடு செய்யும் வழக்கம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஆனால், இந்த குடவரை ஔவை, மூதாட்டி அல்ல. மாறாக, நல்ல உடல் கட்டுடன் இளம் வயது ஔவையாக, 'தீர்க்கமான' தோற்றத்துடன் காட்சியளிக்கிறார். கன்னிப் பருவத்திலேயே, முதுமைப் பருவத்தை வரமாகக் கேட்டு வாங்கியவர் ஔவை என்கிற 'ஔவையார்' திரைப்படக் காட்சியும், நம் அனைவர் பொதுப் புத்தியிலும் உறைந்துபோய் இருக்கிறதும் ஆகிய, ஔவையின் மூதாட்டி பற்றிய கருத்துருவை, இந்த குடவரை ஔவையின் உருவம் உடைத்தெறிகிறது.**

நாள் முழுதும் விரதம் இருந்து உடல், உள்ளத் தூய்மையோடு, ஔவை வழிபாட்டில் பெண்கள் கலந்து கொள்வார்கள். அம்மி, குழவி, உரல், உலக்கை போன்று பெண்கள் (முன்பு) பயன்படுத்தும் பொருட்களின் வடிவத்தில் கொழுக்கட்டைகள் பிடித்து, அவித்து, படைத்து, வழிபடுவார்கள். (பிள்ளை வரம் வேண்டும் பெண்கள், ஆண்குறி, பெண்குறி வடிவிலும் கொழுக்கட்டைகள் செய்து வழிபடுவார்கள் எனவும் சொல்லப்படுவதுண்டு).

மறுநாள் காலை, பெண்கள், அவர்களது சேலை மடிகளில், கொழுக்கட்டைகளை மறைத்து வைத்து, தேங்காய் சில்லுகளோடு சேர்த்து, ஆண்கள் கண்களில்படாமல் சாப்பிடுவார்கள். ஔவைமீது கொண்ட பக்தியாலும், பயத்தாலும், ஆண்களும் அதற்குக் கட்டுப்பட்டே இருப்பார்கள்.

ஔவையார் வாழ்ந்த காலத்தில், அவர் பெண்களுக்கு நெருக்கமான தோழியாக, பாடம் சொல்லும் புலவராக, பாதுகாப்பு அரணாக, வாழ்க்கை நெறியாளராக என பல வழிகளிலும், பெண்களின் அன்றாட வாழ்க்கையில் பின்னி, பிணைந்து வாழ்ந்ததன் காரணமாகவே குமரியிலும், நெல்லையிலும், பெண்கள், ஔவையைத் தெய்வமாக்கி, 'ஔவையாரம்மன்' என வழிபட்டிருக்க வேண்டும் என் அனுமானிக்கலாம்.

நான் தஞ்சையில் வசித்து வந்த காலத்தில், ஒரு சந்திப்பின்போது, டாக்டர் டி. எல். ஆபிரகாம் அவர்கள், ஹுஸ்டனில் (Houston) அமைந்திருக்கும், அமெரிக்க விண்வெளி ஆய்வுக்கூடத்தின் முகப்பில், "கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு" என்கிற ஔவையின் முதுமொழி பொறிக்கப்பட்டிருப்பதை நேரில் தான் பார்த்ததாகக் கூறிய ஓர்மை எனக்குள்ளது.

"இயற்கையின் முன் மனிதர்கள் மிகச் சாதாரணமானவர்கள்" என்கிற தத்துவத்தை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் முன்னிலை வகிக்கும் வல்லரசு நாடான அமெரிக்காவும்கூட, ஔவையின் முதுமொழி வழி புரிந்துகொண்டதன் அடிப்படையில்தான், அவ்வாறு ஔவையைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள் என நம்பலாம்.

இது, ஔவைக்கும், ஔவை பேசிய மொழியை நாமும் பேசுகிறோம், ஔவை வாழ்ந்த மண்ணில் வாழ்கிறோம் என்பதால் நமக்கும் பெருமையே. •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைமுறையை அழிக்கும் 'ஆட்டிசம்'

மூளை முடக்குவாதம், மூளை வளர்ச்சியின்மை, ஒன்றிற்கு மேற்பட்ட செயல்பாடுக் குறைபாடுகள் அதாவது 'AUTISM' போன்ற நோய்களால் பாதிக்கப்பெற்ற குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறையை, பணிபுரியும் அலுவலகங்களில் வழங்க வேண்டுமென கருநாடக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இத்தகைய உத்தரவு அலுவலகம், சிகிச்சையென இருவேறு இடங்களில் அல்லல்படும் தாய்மார்களுக்கு நற்செய்திதான். ஆனால், குடும்பத்தையும் வழிநடத்த வேண்டிய தலையாய கடமை உள்ளதே.விடுமுறை அறிவிப்புத் திட்டத்தால் குழந்தைகளின் பிறப்பில் ஏற்பட்ட நோயையும், மூளை வளர்ச்சியின்மையையும் குணப்படுத்த முடியுமா என்பது கேள்விக்குறி. குழந்தைகள் தங்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி, வாழ்வின் தொடர் ஓட்டத்தில் ஓடி வெற்றி பெற இயலுமா என்னும் கேள்விக்குப் பதில் எழுத சொல்ல இயலாது.

இந்தத் தருணத்தில் ஒவ்வொருவரும் குறிப்பாகப் பெண்கள் தங்கள் குழந்தையை தன்முனைப்புக் குறைபாடு (ஆட்டிசம்) நோய் தாக்காமல் இருக்க எவ்வாறெல்லாம் செயல்பட வேண்டும் என்பதை அறிந்திருத்தல் இன்றியமையாதது.

'ஆட்டிசம்' நோய் பாதிப்பு என்பது குழந்தைகள் தங்களின் இயல்பான நடவடிக்கை, வளர்ச்சி, அறிவியல் நோக்கு ஆகியவற்றைத் தொலைத்துவிட்டு, எதன்மீதும் ஈடுபாடு இல்லாமல் தனிமையை விரும்பும் ஒரு நோயாகும். பொது நிலையாக ஒரு குழந்தை 'ஆட்டிசம்' நோயால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை ஒன்பது மாதம் முதல் பதினெட்டு (18) மாதத்திற்குள்ளான நிலையில் கண்டறிய முடியும்.

## "ஆட்டிசம்" நோயின் அறிகுறி

சரி, பெற்றோர்கள் இந்த நோயைக் கண்டறிய வேண்டுமெனில், "ஆட்டிசம்" நோயின் அறிகுறிகளை அறிந்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை தனிமையை விரும்புதல், பிறரைப் பார்த்து சிரிக்காமல் இருப்பது, மற்ற குழந்தைகளைப் போன்று விளையாடாமல் இருத்தல் நண்பர்களைத் தவிர்ப்பது, பேச்சுக் குறைபாடு, ஒரே செய்கையை வித்தியாசமான முறையில் திரும்பத் திரும்பச் செய்துகொண்டே இருப்பது, அசையும் பொருள்கள் அல்லது வெளிச்சத்தை வெறித்துப் பார்ப்பது, கைவிரல்களை அசைத்துக் கொண்டே இருத்தல் முதலிய குறைபாடுகள் இருப்பது தெரியவந்தாலும் சந்தேகம் ஏற்பட்டாலும் காலந்தாழ்த்தாது மனநல மருத்துவர் அல்லது "ஆக்குபேசனல் தெரபிஸ்ட்" என்னும் தொழில்வழி மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை பெற வேண்டும். மரபணுவில் ஏற்படும் மாற்றங்களே இந்நோய்க்கான முதன்மைக் காரணமென்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

### நோய்க்கான காரணம்

உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு, மரபணு மாற்றப்பெற்ற கோழிக்கறி, முள்ளங்கி, தக்காளி, வாழை, பிற பழங்கள், காற்று, நீர், மண், ஒலிமாசுபாடு, இருபாலரும் மது அருந்துதல், புகைத்தல், போதைப் பொருள்களுக்கு ஆட்படுதல், தாமதமாகத் திருமணம் செய்து கொள்ளல், முதிர்ந்த வயதில் கருத்தரித்தல் என 'ஆட்டிசம்' நோய்க்கான காரணங்களாகக் கருதப்படுகின்றது.

அதுமட்டுமல்ல, தனிக்குடித்தன வாழ்க்கையால், தாய் தந்தையர் இருவரும் வேலைக்குச் செல்வதால், குழந்தைகளைக் காப்பகங்களிலும் பணியாளர்களிடமும் விட்டுவிடுதல், இதன் விளைவாக ஏற்படும் மன அழுத்தம், சோம்பேறித்தனம், குழந்தைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை, தொலைக்காட்சிப் பெட்டி, கணினி, ஸ்மார்ட்ஃபோன் போன்றவை போட்டி போட்டுக்கொண்டு உருவாக்கும் விளையாட்டுகள் முன் முழுநேரமும் உட்கார வைத்தல் போன்றவையும் முதன்மைக் காரணங்களாக அறியப்பட்டுள்ளன.

### 'ஆட்டிசம்' வராமல் தடுக்கும் வழி

'ஆட்டிசம்' நோய் வராமல் தடுக்க நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்:

நல்ல ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்கள், வீட்டில் சமைத்த உணவாய் இருப்பது நல்லது. நாட்டுக் கோழிக்கறி, வீட்டில் உருவாக்கிய கேழ்வரகு, சோளம், உளுந்துப் பலகாரங்கள், தேங்காய்ப் பால், இஞ்சி, பூண்டு விழுது, பால், தயிர், காய்கறிகள் என அனைத்துப் பொருள்களும் புதியதாக, பதப்படுத்தாத உணவாக இருத்தல் இன்றியமையாதது. இவை அனைத்தும் மரபணுக்களைக் கட்டாயம் காப்பாற்றும்.

ஒவ்வொருவரும் தாங்கள் பயன் படுத்திவரும் இருசக்கர வாகனம், மகிழ்உந்து, ஆட்டோ, பேருந்து, லாரி, ஆலைகளில் வெளியேறும் புகை, ஒலி ஆகியவற்றால் மாசு ஏற்படுத்தாத வகையில் கட்டுப்பாட்டுடன் வைத்திருந்தால், மரபணுக்கள் எதிர்கொள்ளும் மாற்றங் களைக் குறைக்கவும் தடுக்கவும் செய்யலாம்.

பெற்றோர்களில் 'தாய்' என்பவள் குழந்தை கருத்தரித்த எட்டாவது மாதம் முதல் 25 வயது வரை வீட்டில் இருந்து அவர்களுக்கு பாசம், பண்பு, உணவு, விளையாட்டு ஆகியவற்றை முறையாகக் கொடுத்து வளர்க்க வேண்டும். மேலும், சகிப்புத்தன்மை விட்டுக்கொடுத்து வாழும் மனப்பான்மைகளை வளர்த்துக் கொண்டு, கூட்டுக் குடும்பமாய் வாழ்வது குழந்தைக்குத் தேவையான சரியான தூண்டுதலை அளிக்க உதவும்.

தந்தையர் ஒவ்வொருவரும் குறைந்தளவு நாள் ஒன்றிற்கு முப்பது விநாடிகளாவது குழந்தைகளுடன் கொஞ்சிக் குலாவி அன்பைப் பொழியுங்கள். இந்த ஈர்ப்புள்ள அன்பு அங்காடிகளில் வாங்கக்கூடிய பொருள்கள் இல்லை.

தாத்தா, பாட்டிகளின் கடமை என்பது வரும் தலைமுறையினருக்கு வழிகாட்டுவதே. அவர்கள் சொல்லும் நயமிக்க கதைகள் பாட்டுகளுக்கு விலைமதிப்பே இல்லை எனலாம். இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரெல்லாம் ஆடு, அணில், மாடு, குருவி, காகம், நிலா, நாம் எனத் தம்மோடு பிணைந்திருந்த இயற்கைப் பொருள்களைக் காட்டிபாட்டி, அத்தை, தாய், சித்தி எனச் சூழ்ந்த உறவுகள் சோறு ஊட்டினார்கள். ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தனிக்குடித்தன வாழ்க்கையால், தாய் தந்தையர் இருவரும் வேலைக்குச் செல்வதால், குழந்தைகளைக் காப்பகங்களிலும் பணியாளர்களிடமும் விட்டுவிடுதல், இதன் விளைவாக ஏற்படும் மன அழுத்தம், சோம்பேறித்தனம், குழந்தைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை, தொலைக்காட்சிப் பெட்டி, கணினி, ஸ்மார்ட்ஃபோன் போன்றவை போட்டி போட்டுக்கொண்டு உருவாக்கும் விளையாட்டுகள் முன் முழுநேரமும் உட்கார வைத்தல் போன்றவையும் முதன்மைக் காரணங்களாக அறியப்பட்டுள்ளன.**

தற்போது இவர்கள் அனைவருக்கும் தொலைக்காட்சி தொடர்கள், நாடகங்கள், செய்திகள் சுகமாய்த் தெரிகின்றது. ஐம்பது (50) ஆண்டுகள் வாழ்ந்த, மனிதர்களுடன் உறவாடி, இன்பமாய் வாழ்ந்த வாழ்க்கையைப் பத்து (10) ஆண்டுகளில் மறக்கச் செய்துவிட்டன தொலைக்காட்சிகளின் ஓய்வில்லா ஒளிபரப்புகள்.

ஒலி ஒளி வழி நிகழ்ச்சிகளுக்கும் கணினிகளுக்கும் மூன்று வயதுக்குள்ளேயே உங்கள் மொட்டுகளை அடிமையாக்கினால், மனிதனின் பரிணாமங்களான அன்பு, பாசம், பேச்சு, விளையாட்டு, உலக முகவரி எப்படி இவர்களுக்கு இன்பமாய்க் காட்சியளிக்கும்? இன்றையக் குழந்தைகள் 'ஆட்டிசம்' எனும் கோரப்பிடியிலிருந்து தப்பித்தவறித் தேறினாலும் அவர்களின் தலைமுறைகள் அந்நோயில் சிக்கிக்கொள்ளாமல் இருக்கும் என்பதற்கு வாய்ப்பு மிகக் குறைவு என்கிறார்கள் மருத்துவ விஞ்ஞானிகள்.

ஒரு நொடிப் பொழுது நீங்களே உங்களை மதிப்பீடு செய்து கொள்ளுங்கள். நீங்கள் பயணிக்கும் உலக வாழ்க்கையில், ஒவ்வொரு நிலையிலும் உள்ள தமது உறவுகள் உடன் இருந்தால், உங்களுக்கு முதன்மையாய் இருந்தால், நீங்கள் நலவாழ்வு வட்டத்திற்குள் உள்ளீர்கள் என மகிழ்வடையலாம். அதைவிடுத்து கணினியோ, அலைபேசியோதான் வாழ்க்கை இன்பம் என்றால், உங்கள் தலைமுறையினரை எண்ணி, உங்களை நீங்களே மாற்றிக்கொள்ளும் நிலைமை உருவாகும்.

அந்த நாட்களைப்போல் ஞாயிறு ஒருநாள் மட்டும் நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சியிலோ, கணினியிலோ, லேப்டாப்பிலோ, வீட்டுத் திரையரங்கிலோ அனைவரும் குடும்பமாக அமர்ந்து பார்ப்பதால், தெருவிலிறங்கி குழந்தைகள் அன்றாடம் நண்பர்களோடு விளையாடுவதால், 'ஆட்டிசம்' நோயை வளரவிடாமல் தடுக்க முடியுமென்றால், அதைச் செய்வதற்கு அனைத்துக் குடும்பங்களும் உடனே தயாராய் இருத்தல் அவசியம்.

கட்டுரையாளர்:
சீனியர் ஆக்குபேஷனல் தெரபிஸ்ட், பெங்களூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் இருக்கும் வேர்கள்

கிளைகளில்
எந்தெந்தத் திசைப்பறவைகளோ
கூடுகள் கட்டியுள்ளன
இலைகளில் நரம்புகள்
கைம்மாறிவந்த ரேகைகள் ஆகப்
பூக்கள்
எழுத்து மாற்றி அச்சடிக்கப்பட்ட
புத்தகங்களாகிவிட்டன.
மணம் நிறம் குணம் எல்லாம்
புறத்தாக்கங்கள்
மண்ணியல் அறிவியல் பாடங்கள்
சோதனைக் குழாய்களில்;
வரும் வசந்தம்
வாசலில் திகைத்து நிற்கும்;
காற்றின் காதுகளில்
முன்பு விழுந்த குயில் கிளி குருவிக்
குரல்கள் இல்லை
கோடை,
வெயிலைத் தளர்த்துவதா
கூட்டுவதா என்று புரியாமல்
வானுக்குத் திரும்பும்.
மழையின் கையில் உள்ள
விதைகளின் பெயர்ப்பட்டியலில்
பிசகான களைகளின் பெயர்கள்.
மொத்தத்தில்
மரமே முகமற்ற ஏதோ ஒன்றின்
மொழிபெயர்ப்புச் சடலமாகி
மூலம் மறந்து நிற்க
பூமியின் ஆழம்மட்டும்
இன்னும் இற்றுப்போகாத வேர்களுக்கு
நம்பிக்கை ஊட்டிக்கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தித் திணிப்பு: எதிர்ப்பும் வெறுப்பும்



இந்தி எதிர்ப்பு இயக்கம் தமிழ்நாட்டில் தீவிரமாக இருந்தபோது நான் கொல்கத்தாவில் இருந்தேன். இடையில் ஒருமாத விடுப்பில் என் ஊரான புதுக்கோட்டைக்கு வந்திருந்தபோது அங்கு சுவரொட்டிகளில் "குலமகள் தமிழ் இருக்கும்போது இந்தி என்ற வேசி எதற்கு?" என்ற வாசகத்தைக் கண்டு அதிர்ச்சி அடைந்தேன். கோடிக் கணக்கான இந்திய மக்களின் தாய்மொழியான இந்தியை, தன் படைப்புகள் மூலம் இந்திய இலக்கியத்தை வளப்படுத்தியுள்ள ஒரு மொழியை இவ்வாறு வசைபாடத் தமிழர்களுக்கு எப்படி மனம் வந்தது? இத்தகைய விஷப் பிரச்சாரத்தை இந்தி எதிர்ப்பு இயக்கத்தைத் தீவிரமாக நடத்திய கல்லூரி மாணவர்களும், அவர்களை வழிநடத்திய தலைவர்களும் எப்படி ஆதரித்தார்கள்/அனுமதித்தார்கள்/பொறுத்துக் கொண்டார்கள்?

இந்தித் திணிப்பு எதிர்ப்பு அலை தமிழ்நாட்டில் இந்தி வெறுப்பு சுநாமியாக மாறியதன் விளைவு இந்தி அரசுப் பள்ளிகளிலிருந்து விரட்டப்பட்டதுதான். அதற்கு முன்பே 'ஆரிய மொழி' சமஸ்கிருதம் பாடத் திட்டத்திலிருந்து மறைந்துவிட்டது. புத்திசாலியான சில சமஸ்கிருத ஆசிரியர்கள் காற்று செல்லும் போக்கை முன்னதாகவே கனித்து இந்தி கற்று, இந்தி ஆசிரியர்கள் ஆகிவிட்டார்கள். இப்போது அந்த வேலைக்கும் வந்தது வேட்டு. பாரம்பரியப் பாடசாலைகளில் பயின்ற அவர்கள் பொதுக்கல்வி பெற்றிராததால் அவர்களது வேலை போயிற்று.

என் கேள்வி இந்தியைத் திணிக்க வேண்டாம். அதை ஒரு விருப்பப்பாடமாகவாவது பாடத்திட்டத்தில் வைத்திருக்கக்கூடாதா? விரும்பியவர் அதைப் படிக்க வாய்ப்பு அளிக்கக்கூடாதா? அதில் மாணவர் பெறும் மதிப்பெண்களைக்கூட வகுப்பின் தேர்வு மொத்த மதிப்பெண்களுடன் சேர்க்க வேண்டாமே!

தமிழகத்தில் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இந்தி கற்க வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால், அரசுப் பள்ளிகளில்தான் பெரும்பாலான மாணவர்கள் பயில்கிறார்கள். இவர்களில் இரண்டு தலைமுறைகள் இந்தி தெரியாமல் வளர்ந்துவிட்டன. நல்ல வேளை, தட்சிண பாரத் இந்தி பிரசார சபையின் வகுப்புகளில் தமிழர்கள் தாமாக முன்வந்து இந்தி கற்று வருகிறார்கள்.

ஒரு புதிய மொழியைக் கற்பவனின் ஆளுமை விரிகிறது, அவனுடைய நோக்கு பரந்துபடுகிறது. அந்த மொழி பேசுபவர்களுடன் தொடர்புகொண்டு அவர்களது வாழ்க்கை, பண்பாடு பற்றித் தெரிந்துகொள்ள முடிகிறது. மற்ற மொழிகளைவிட, இந்தி கற்றுக்கொள்வதில் ஒரு கூடுதல் வசதி உண்டு. இந்தி கற்றவன் மற்ற மாநில நகரங்களில் தன் இந்தி அறிவைக் கொண்டு எளிதில் அன்றாட வாழ்க்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்திக் கொள்ளலாம். தமிழகத்திலிருந்து வெளிமாநிலங்களுக்குப் போகும்போதுதான் தமிழர்களுக்கு இந்தியின் அருமை தெரிகிறது.

என் நீண்டகாலக் கொல்கத்தா வாழ்க்கையில் நான் சந்தித்த சில தமிழர்கள் என்னிடம் கூறியுள்ளனர், "நானும் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் தீவிரமாக இருந்தவன்தான். ஆனால், இப்போது புரிகிறது இந்தி கற்காதது எவ்வளவு தவறு என்று." கொல்கத்தா வரும் சில தமிழர்கள் என்னிடம் புகார் செய்கிறார்கள் "ஐயா, இந்த ஊரில் ரிக்ஷா, ஆட்டோ, டாக்சி ஓட்டுபவர்களுக்கு ஏன் ஆங்கிலம் புரிவதில்லை? நாங்கள் ஆங்கிலத்தில் பேசினால் அவர்களுக்குப் புரியவில்லையே!" நான் அவர்களைக் கேட்பேன், "ஏன், உங்கள் ஊரில் அவர்கள் ஆங்கிலத்தில் பேசினால் நீங்கள் புரிந்துகொள்கிறார்களா?" அவர்களது வாய் அடைத்துப்போகும்.

இந்தி தெரியாத என் நணபர் ஒருவர் தம் மும்பை அனுபவத்தைச் சொன்னார். அவர் ஒரு நண்பரின் வீட்டைத் தேடிக்கொண்டிருந்தார். வீட்டு முகவரியை ஆங்கிலத்தில் எழுதி வைத்துக்கொண்டு வீதியில் செல்பவர்களிடம் காட்டியிருக்கிறார். அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாதோ அல்லது தெரிந்திருந்தாலும் ஆங்கிலத்தில் பேச வராதா என்னவோ, அவர்கள் ஒன்றும் சொல்லாமல் போய்விட்டார்களாம். இறுதியில் என் நண்பர் அணுகிய ஒருவர், வீட்டுக்கு வழிகாட்டிவிட்டு நகர்ந்தார். நகர்ந்து சென்றவர் திரும்பி என் நண்பரைக் கூப்பிட்டு, "நீங்க மதராசியா?" என்று கேட்டார். நண்பர் "ஆமா" என்று சொன்னதும் அவர் கடுமையான குரலில், "நீங்க ஏன் இந்தியை வெறுக்கிறீங்க?, இந்தி கத்துக்கமாட்டேன்னு சொல்றீங்க?" என்று கேட்டுவிட்டுப் போனார்.

கொல்கத்தா பல்கலைத் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய அமரர் ரங்கநாயகி மகாபாத்ரா தமக்கு நேர்ந்த ஒரு வேடிக்கையான அனுபவத்தைக் கூறியிருக்கிறார். அவர் ஒரு ஒடியாக்காரரை மணந்துகொண்டு கொல்கத்தாவில் புதிதாகக் குடித்தனம் வந்தபோது நிகழ்ந்த நிகழ்ச்சி இது. அப்போது கொல்கத்தாவில் அடுப்பெரிக்க விறகு கிடைக்காது. பாறை பாறையாக விற்கப்படும் 'பத்தர்கொய்லா' என்ற நிலக்கரியை உடைத்து எரிபொருளாகப் பயன்படுத்த வேண்டும். Galvarised sheet- ல் செய்த வாளியைக் கும்மட்டி அடுப்பாக மாற்றிக்கொண்டு சமைக்க வேண்டும். அடுப்பில் நெருப்புப் பற்றிக்கொள்ள அதன்கீழே மண்ணெண்ணெய் தோய்த்த வறட்டித் துண்டில் தீ வைக்க வேண்டும்.

கொய்லாவை உடைத்தபின் சேரும் தூளும் வீணாவதில்லை. அதைக் களி மண்ணோடு கலந்து பிசைந்து உருட்டி, காய்ந்த உருண்டைகளை அடுப்பில் போடுவார்கள். இந்த அடுப்புப் பற்றிக்கொள்ள அரைமணி, முக்கால்மணிகூட ஆகும். ஆனால் பற்றிக் கொண்டபிறகு 3, 4 மணி நேரங்கூட நின்று எரியும். இதில் ஒரு பிரச்சனை, அடுப்பு நன்றாகப் பற்றிக்கொள்ளும்வரை அது அநியாயமாகப் புகையும். அப்போது அதை வீட்டுக்குள் வைத்திருக்க முடியாது. ஆகவே, காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் புகைக்கும் அடுப்புகளைப் பார்க்கலாம். நான் கொல்கத்தா சென்ற புதிதில் இதைப் பார்க்க அச்சானியமாகத் தோன்றும் எனக்கு. ஏனெனில் தமிழ்நாட்டில் இதற்கு வேறொரு பொருள் உண்டு.

ரங்கநாயகியின் வீட்டில் வறட்டியும் இல்லை, கொய்லா உருண்டையும் இல்லை. அவர் வேலைக்காரியைக் கூப்பிட்டு "கோபர் கா சப்பாத்தி (சாணத்தால் செய்த சப்பாத்தி)யும் கொய்லா கா லட்டு (கொய்லா உருண்டை)யும் வாங்கிக் கொண்டு வா" என்று சொன்னார். வேலைக்காரிக்கு ஒன்றும் புரியவில்லை. ரங்கநாயகி ஜாடையால் தம் தேவையைப் புரிய வைத்ததும் 'ஹோஹோ' என்று சிரித்தாள் வேலைக்காரி.

புதிய நாடாளுமன்றத்தில் பா.ஜ.க ஆட்சியில் ஆங்கிலத்தைவிட இந்திதான் அதிகம் புழங்கப் போகிறது. புதிய உறுப்பினர்களில் 10% பேர் பத்தாம் வகுப்பு தேறியவர்களென்றும் 13% அதுகூடத் தேறாதவர்களென்றும் ஒரு நாளிதழ் கூறுகிறது. இவர்களில் தமிழர்களும் இருக்கக்கூடும். இந்தி தெரியாது, ஆங்கிலம் கொஞ்சம் புரிந்தாலும் பேச வராது என்ற நிலையில் இவர்கள் எப்படி நாடாளுமன்ற நடவடிக்கைகளில் பங்கு கொள்ளப் போகிறார்கள், தமிழகப் பிரச்சனைகளை விவாதிக்கப்போகிறார்கள்? ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துரும்பர்

தமிழ்நாட்டில் அட்டவணைச் சாதியினர் பட்டியலில் 77 சாதிகள் இடம் பெற்றுள்ளன. இச்சாதிகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் 'துரும்பர்' உள்ளனர். புரத வண்ணார், புறத்து வண்ணார், பறஏகாலி, பறவண்ணார், புதிர வண்ணார் என்ற பெயர்களிலும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர். இவர்களைக் குறித்து எட்கர் தர்ஸ்டன் தாம் தொகுத்த 'தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்' என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"பொதர, பொதரையன், பொதோர வண்ணார் ஆகிய அனைவரும் சமூகப் படி நிலையில் தாழ்ந்தவர்களான வண்ணார், பள்ளர், பறையர் போன்ற தாழ்ந்த சாதியாருக்குத் துணி துவைப்பவர்கள்"

தீண்டத்தகாதோர் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட மக்கள் பிரிவினருக்குச் சேவை செய்ய அவர்களிடம் இருந்தே 'குடி ஊழியம்' செய்வோர் உருவாவது இயல்பான ஒன்று. இவ்வாறு உருவான சலவைத் தொழில் செய்வோரை இரட்டைத் தீட்டு முறைக்கு ஆதிக்க சாதியினர் ஆளாக்கியுள்ளனர். இதன்படி தீண்டத்தகாதோர் என்று தம்மால் ஒதுக்கி வைக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்தோர் என்பதன் அடிப்படையில் ஒரு தீட்டு, அவர்களின் அழுக்குத் துணிகளைச் சுத்தம் செய்வோர் என்பதன் அடிப்படையில் மற்றொரு தீட்டு.

இரட்டைத் தீட்டு குறித்த இக் கருத்தியலின் அடிப்படையில், தொட்டால் தீட்டு என்பதனைப் பார்த்தாலே தீட்டு என்று விரிவுபடுத்தியுள்ளனர்.

இச்சாதி குறித்து 24.12.1932 'இந்து' நாளேட்டில் வெளியான செய்தியை 'ஹட்டன்' (1969:200-201) என்பவர் 'இந்தியாவில் சாதி' என்ற தமது ஆங்கில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலில் மேற்கோளாகக் காட்டியுள்ளார். அச்செய்தி வருமாறு:

"திருநெல்வேலி மாவட்டத்தில் புரத வண்ணான் என அழைக்கப்படும் ஒரு சாதியினர் உண்டு. இவர்கள் பகல் நேரத்தில் வெளியே வரக்கூடாது. ஏனென்றால் இவர்களைப் பார்ப்பதே தீட்டாகக் கருதப்பட்டது. இவர்கள் பிற தாழ்த்தப்பட்டவர்களின் துணிகளைச் சலவை செய்பவர்கள். தங்கள் தொழிலை இரவிலேயே (பொழுது புலர்வதற்கு முன்பே) செய்பவர்கள்".

நேர்காணலுக்கு திரு. ஏ.வி. தாக்கர் சென்றபோது தங்கள் வீடுகளை விட்டு வெளியே வர மறுத்துவிட்டனர். பலமுறை வேண்டிக் கேட்டுக்கொண்ட பின்பு கூட, உடல் நடுங்கி அச்சத்துடன்தான் வெளியே வந்தனர்.

ஆனால், புரத வண்ணாரின் சேவையைப் பெறுவோர், பார்த்தாலே தீட்டு என்ற தடையைப் பின்பற்றுவதில்லை. இதைப் பின்பற்றுவோர் ஆதிக்க சாதியினர்தான். குடி ஊழியம் செய்யும் நாவிதர், வண்ணார் ஆகியோர் மீது ஆதிக்க சாதியினர் சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தனர். ஆனால் அவர்கள் நடமாட்டத்தை முழுமையாகத் தடைசெய்யவில்லை.

இம்மக்கள் பிரிவினரின் பணியைப் பெறுவது அவர்களுக்கு அவசியமாக இருந்தது என்பதுதான் இதற்குக் காரணமாகும். ஆனால் புரத வண்ணார்களின் பணி தமக்குத் தேவையில்லை என்ற நிலையில், பார்த்தாலே தீட்டுக்குரியவர்களாக அவர்களை வகைப்படுத்தினர். இதை நியாயப்படுத்தும் வகையிலேயே இச்சமூகத்தின் தோற்றம் குறித்து சில கதைகளை உருவாக்கியுள்ளனர்.

## தோற்றம் குறித்த கதைகள்

### கதை வடிவம் ஒன்று

தன் ஆடைகளை வெளுத்துத் தரும்படி ஒரு நாள் சிவபெருமான் வண்ணார் ஒருவரிடம் கொடுத்தார். அவரும் அவற்றை வெளுத்து பரிவட்டத்தை, தன் மகனிடமும் ஏனைய ஆடைகளைத் தன் பணியாளனிடமும் கொடுத்தனுப்பினார்.

வண்ணாரின் மகன் யானை மீதும், பணியாள் குதிரையின் மீதும் கோவிலை நோக்கிப் பயணித்தனர். குதிரையில் சென்ற பணியாள் விரைவாகக் கோவிலுக்குள் சென்றுவிட்டார். யானை ஆடி அசைந்து சென்றதால் வண்ணாரின் மகன் செல்வதற்குள் கோவிலின் கதவு அடைக்கப்பட்டுவிட்டது. கோவிலின் புறத்தே நின்ற வண்ணார் புறத்து வண்ணார் என்றழைக்கப்பட்டு, அவரது பரம்பரையினரும் புறத்து வண்ணார் என்றழைக்கப்பட்டனர்.

### கதை வடிவம் இரண்டு

பறையர் சாதிப் பெண் ஒருத்தியைப் பள்ளர் சாதி ஆண் காதலித்து மணம் புரிந்து கொண்டார். இருவரது சாதியினரும் இத்திருமணத்தை ஏற்கவில்லை. அத்துடன் இருவருக்கும் தம் ஆடைகளை வெளுக்கும் பணியைத் தண்டனையாகக் கொடுத்தனர். பள்ளர், பறையர் என்ற இரு சாதியினருடனும் சேர்க்கப்படாமல் இவ்விருவருக்கும் வழங்கப்பட்ட சலவைத் தொழில் இவர்களது பரம்பரையினருக்கும் வந்துவிட்டது.

**"திருநெல்வேலி மாவட்டத்தில் புரத வண்ணான் என அழைக்கப்படும் ஒரு சாதியினர் உண்டு. இவர்கள் பகல் நேரத்தில் வெளியே வரக்கூடாது. ஏனென்றால் இவர்களைப் பார்ப்பதே தீட்டாகக் கருதப்பட்டது. இவர்கள் பிற தாழ்த்தப்பட்டவர்களின் துணிகளைச் சலவை செய்பவர்கள். தங்கள் தொழிலை இரவிலேயே (பொழுது புலர்வதற்கு முன்பே) செய்பவர்கள்".**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சமூக விழிப்புணர்வு பெறாத காலத்தில் தம் அவலநிலைக்கான காரணமாக, இக்கதைகளை நம்பி புரத வண்ணார்கள் ஏமாந்துள்ளனர். தீண்டாமைக் கொடுமைக்குத் தாம் ஆட்படவில்லை என்று நிறைவடைந்த பிற வண்ணார் பிரிவினர், தாம் புரத வண்ணாரை விட மேலானவர்கள் என்று காட்டிக்கொள்ள இக்கதைகளைக் கூறி அமைதியடைகின்றனர்.

இவற்றில் முதல் கதை தம் அவல நிலைக்கு அமைதி காணும் வகையில் புரத வண்ணார்களால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டாவது கதை அவர்களின் பணியைப் பெறுபவர்களால் உருவாக்கப்பட்டிருக்கலாம். தமக்குக் குடி ஊழியம் செய்யக் கடமைப்பட்டவர்கள் என்ற கருத்தை நிலைநாட்டும் வகையில் இக்கதையை உருவாக்கியுள்ளார்கள். மொத்தத்தில் துரும்பரின் போராட்ட உணர்வைத் தடுத்து நிறுத்துவதில் இக்கதைகள் முக்கியப் பங்காற்றியுள்ளன.

**துரும்பர்களின் பணி**

துரும்பர்களை இதர வண்ணார்களிடம் இருந்து வேறுபடுத்துவது அவர்களின் சாதி மட்டுமல்ல. அவர்களின் பணியும் கூட அவர்களை வேறுபடுத்திக் காட்டுகிறது. தலித்துக்களின் சலவைத் தொழிலாளியாக மட்டும் இவர்கள் விளங்கவில்லை. அவர்களின் நாவிதர்களாகவும் பணியாற்றுகின்றனர். அத்துடன் இறப்பு வீட்டில் பிணத்தைக் குளிப்பாட்டுதல், பிணத்தைப் புதைக்கக் குழிவெட்டுதல் ஆகிய பணிகளையும் மேற்கொள்கின்றனர். மொத்தத்தில் தலித்துக்களின் வண்ணாராகவும், நாவிதராகவும், வெட்டியானாகவும் இவர்கள் பணியாற்றுகின்றனர். இதுவே இவர்கள் சாதிச் சான்றிதழ் பெறத் தடையாகவுள்ளது.

ஏனெனில் கிராமப்புறங்களில் வாழும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதியினர் தத்தம் சாதிக்கென்று வண்ணார், நாவிதர், வெட்டியான் ஆகியோரைக் கொண்டுள்ளனர். அத்துடன் இப்பணியாளர்கள் தலித்துக்களுக்குப் பணிசெய்வதைத் தடை செய்துள்னர். இம்மூன்று குடியூழியக்காரர்களின் பணிகள் தமக்கு மறுக்கப்பட்ட நிலையில் துரும்பர்களையே தலித்துக்கள் நம்பியுள்ளனர்.

**துரும்பர்கள் மீதான வன்முறை**

துரும்பர்கள் தம் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள் என்ற ஆதிக்கவுணர்வை ஆதிதிராவிடர் வெளிப்படுத்தும் ஒரு வழிமுறை குறித்துக் கிட்டிய ஒரு செய்தி வருமாறு:

திருவண்ணாமலை மாவட்டம் துரும்பர் விடுதலை இயக்கம், ஊர்ச்சோறு எடுக்கும் வழக்கத்தை நிறுத்திவிடும்படி துரும்பர்களுக்கு அறிவுரை கூறியது. இது எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை ஆராய்ந்தபோது, திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள ஊரைச் சேர்ந்த துரும்பர் ஒருவர் ஊர்ச்சோறு எடுத்து வருகிறார் என்பது தெரியவந்தது. அதிலும் அவர் அந்தக் கிராமத்தில் கணிசமான விளைநிலங்களுக்கு உரிமையாளர். நில உடைமையாளரான அவரே ஊர்ச்சோறு எடுக்கும்போது, நிலமில்லாத துரும்பர்களைத் தடுப்பது சிரமமாய் இருந்தது. எனவே துரும்பர் விடுதலை இயக்கத்தின் பொறுப்பாளர்கள் அவரைச் சந்திக்கச் சென்றார்கள். அவ்வாறு சென்றபோது அவர் ஊர்ச்சோறு எடுக்கச் சென்றிருந்தார். அவர் திரும்பி வரும்போது வீதியில் அவரைச் சந்தித்தனர். அறிமுகம் செய்துகொண்டு அவருடன் அவரது வீட்டிற்கு வந்த பின்னர் வீட்டுத் திண்ணையில் அவர்களை அமரச் செய்துவிட்டு, தான் எடுத்து வந்த ஊர்ச் சோற்றை, கழுதைகளுக்கும் மாடுகளுக்கும் பகிர்ந்தளித்தார். வந்தவர்களுக்குத் திகைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த நோக்கம் என்ன? என்று அவர் வினவியபோது, அவர்கள் செய்தியைக் கூறினார்கள். அதற்கு அவர் கூறிய பதில் இதுதான்:

'எங்கள் வீட்டில் தலைமுறை தலைமுறையாக யாரும் ஊர்ச்சோற்றை உண்பதில்லை. ஆனால் ஊர்ச்சோறு எடுக்காவிட்டால் என் நிலத்தில் வேலை செய்ய அவர்கள் (ஆதிதிராவிடர்கள்) யாரும் வரமாட்டார்கள். பின் விவசாயம் செய்யமுடியாது. இதைத் தவிர்க்கவே வண்ணார் தொழிலையும், ஊர்ச்சோறு எடுத்தலையும் செய்து வருகிறேன். நம்ம சோற்றைத் திங்கிறவன்தானே என்று அவர்களுக்குத் திருப்தி.


'ஊர்ச்சோறு' என்பது அடிமைத்தனத்தின் குறியீடாக அமைவதை இச்செய்தி உணர்த்துவதுடன், அட்டவணை சாதியினருக்கிடையிலான உள்முரணை வெளிப்படுத்துகிறது.

### துரும்பரின் அவல வாழ்க்கை

வண்ணார்கள் மீது நிகழ்த்தப்படும் கொடுமைகளுள் புரத வண்ணார் பிரிவு மீது தான் அதிக அளவிலான கொடுமைகள் நிகழ்கின்றன. இதுகுறித்து மீனா மயில் *(2001)*,

"தலித் மக்களுக்கு புதிரை வண்ணார் செய்யும் திருமண, சாவுச் சடங்குகள் அடிமைத்தனத்தின் உச்சகட்டமாக இருக்கிறது. உயிர் போகிற காரியமாக இருந்தாலும்கூட வண்ணார்கள் வந்து தலித் மக்களுக்கான சடங்கை செய்துவிட்டுத்தான் செல்ல வேண்டும். திருமணம் என்றால் பெண்ணுக்கும், மாப்பிள்ளைக்கும் துணி கொடுத்தாக வேண்டும். எல்லா வேலையையும் விட்டு, மூன்று நாட்களும் திருமண வீட்டிலேயே கட்டாயம் இருந்தாக வேண்டும். அவர்கள் எவ்வளவு துணி கொடுத்தாலும் துவைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். கூலி பற்றி பேசக்கூடாது. நிறைய சோறு சாப்பிட்டுக் கொள்ளலாம்.

சாவு வீடுகளில் செய்யப்படும் வெவ்வேறு விதமான சடங்குகள் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. பிணத்தைக் குளிப்பாட்டுதலில் தொடங்கி, தேர்




கட்டுதல், மேளம் அடித்தல், புதைத்தல் போன்ற எல்லா காரியங்களையுமே இம்மக்கள் செய்கின்றனர். சில இடங்களில் சுடுகாடு வரும் வரை வண்ணார்கள், பிணத்தை விழுந்து கும்பிட்டுக் கொண்டே வரவேண்டும் என்ற வழக்கமும் இருக்கின்றது. இன்னும் சில இடங்களில், நீர்மாலை எடுப்போரின் பாதம் மண்ணில் படாமல் இருக்க, சுடுகாடு வரை துணி விரித்துக் கொண்டே வர வேண்டும் என்பது போன்ற சடங்குகள் இன்னும் நடைமுறையில் இருக்கின்றன. சலவை செய்ய முடியாது என்று சொன்ன மக்களால் கூட, சடங்கை செய்ய மாட்டோம் என்று மறுக்க முடியவில்லை என்கிறார்.

### சாதிச் சான்றிதழ்

'அட்டவணைச் சாதியினர்' என்ற சான்றிதழ் பெற, துரும்பர்கள் வருவாய்த் துறையினரிடம் விணணப்பிக்கும்போது, இவர்களின் பணியைப் பெறும் அட்டவணைச் சாதியைச் சேர்ந்தோர் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று வருவாய்த் துறையினர் வலியுறுத்துகின்றனர். அவ்வாறு சாட்சியம் அளித்தால் எதிர்காலத்தில் துரும்பர்களின் பணி தமக்குக் கிடைக்காது போய்விடும் என்ற அச்சத்தில் சாட்சியம் அளிக்க ஏனைய அட்டவணைச் சாதியினர் முன்வருவதில்லை. இதனால், அட்டவணைச் சாதியைச் சேர்ந்தவர் என்ற சான்றிதழ் துரும்பர்களுக்கு மறுக்கப்படுகிறது.

சடங்குகளில் இருந்து விடுபட அட்டவணைச் சாதியினர் விரும்பாமையும், அவர்களுக்குச் சடங்குகளை நடத்தி வைக்கத் தடையாக, தீண்டாமை விளங்குவதும் அட்டவணைச் சாதிச் சான்றிதழைத் துரும்பர் பெற முடியாது தடுத்து விடுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடைமுறையில் தலித்துக்களுக்கும் கீழான நிலையில் துரும்பர்கள் இருந்தாலும் சாதிச் சான்றிதழ் இல்லை என்ற ஒரே காரணத்தினால் பிற்படுத்தப்பட்ட சாதியினராக அவர்கள் கருதப்படுகின்றனர். சில பகுதிகளில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதியினராக சான்றிதழ் வழங்கப்படுகிறது. இதனால் தீண்டத்தகாதோர் என்று முத்திரை குத்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கும் அரசின் உதவிகள் இவர்களுக்குக் கிட்டுவதில்லை. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் இவர்களுக்குப் பொருந்துவதில்லை.

ரகுபதி என்ற ஆய்வாளர் இந்நிலை குறித்து எழுதியுள்ளது வருமாறு:

“சாதிச்சான்று கேட்டு விண்ணப்பிக்கும் ஒருவரை அவர் புதிரை வண்ணார் சாதியைச் சேர்ந்தவர் தானா? என்பதைக் கண்டுபிடிப்பதற்கு கிராம நிர்வாக அதிகாரி, வருவாய் ஆய்வாளர் மற்றும் தாசில்தார் ஆகியோர் நிர்வாக ரீதியான சோதனையை மேற்கொள்கின்றனர். அச்சோதனையில் அவர்கள் எழுப்பும் கேள்விகள்:

1. புதிரை வண்ணாரிடம் கழுதை இருக்கிறதா?

2. துணி வெளுப்பதற்கு பாரம் பரிய வெள்ளாவி அடுப்பு முறை பயன் படுத்தப்படுகிறதா?

3. அவர் ஊரில் வெளுத்தார் என்பதற்கு சாட்சியாய் இருப்பது யார்?

அதிகாரிகளின் பரிசோதனையின்போது தன்னைப் புதிரை வண்ணார் என்று வலுவான ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு சாதிச் சான்றிதழ் கேட்கின்ற நபருடையது. ஆதாரங்கள் என்றால் அது கழுதையையும், வெள்ளாவி அடுப்பையும் குறிக்கிறது. மேலும் சாதிச் சான்று கேட்கும் புதிரை வண்ணார் தங்களுக்கு வெளுப்பு வேலை செய்தார் என்று பள்ளர், பறையர் சாதியினைச் சேர்ந்தவர்கள் சாட்சியம் அளிக்கவேண்டும். இச்சோதனை சான்றிதழ் கேட்பவரின் ஊரில் நடத்தப்படும். அதிகாரிகளின் அலுவலகத்தில் அல்ல. இதற்காக அதிகாரிகளை மகிழுந்தில் அழைத்துச் செல்ல வேண்டியது சான்றிதழ் கேட்பவரின் கடமை.

சோதனையின் போது மேலே குறிப்பிட்டுள்ள ஆதாரங்கள் சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்தவரிடம் இல்லையென்றால் அவருக்குச் சான்றிதழ் மறுக்கப்படும். இச்சோதனையை மேற்கொள்வதற்கு மட்டும், சான்றிதழ் கேட்கும் புதிரை வண்ணார் சில, பல ஆயிரங்கள் நிதிச் செலவினைச் சந்திக்கவேண்டும். சான்றிதழ் கிடைத்தால் ஒரு விதத்தில் நிதிச் செலவினைத் தாங்கிக் கொள்கின்றனர். ஆனால் சான்றிதழ் கிடைக்கவில்லை என்றால் அவர்கள் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். சான்றிதழ் பெறுவதற்குப் பல பத்தாண்டுகளாகத் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த புதிரை வண்ணார்கள் போராடி வருகின்றனர்.

நடைமுறையில் தலித்துக்களுக்கும் கீழான நிலையில் துரும்பர்கள் இருந்தாலும் சாதிச் சான்றிதழ் இல்லை என்ற ஒரே காரணத்தினால் பிற்படுத்தப்பட்ட சாதி யினராக அவர்கள் கருதப்படுகின்றனர். சில பகுதிகளில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதியினராக சான்றிதழ் வழங்கப்படுகிறது. இதனால் தீண்டத்தகாதோர் என்று முத்திரை குத்தப்பட்ட மக்களுக்குக் கிடைக் கும் அரசின் உதவிகள் இவர்களுக்குக் கிட்டுவ தில்லை. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் இவர்களுக்குப் பொருந்துவதில்லை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதநிலத்தின் வரைவுகடாதல்

1
கத்தரிப்பூ நிறத்தில் தாவணி அணிந்து
வெண்டைக்காய் போல்
வளவளவென்று பேசித் திரிந்த
மருதநிலத்தாள்தான்
மழைவிட்டு இலைநீர் சொட்டிய
சாயுங்காலப் பொழுதொன்றில் தலைவியானாள்
ஆற்றங்கரையிலும் கிணற்றுமேட்டிலும்
கிண்டலடித்துகொண்டிருந்தவன் தலைவனானான்
பண்டம் மாற்றும் முறைபோல்தான்
பார்வை சொல் இதயம் மாற்றி காதலானது

2
மஞ்சள் பூக்கள் கொட்டிக் கிடந்த
மாசி மாத மாலைப்பொழுது
வெளுத்து வாடியிருந்த பூவொன்று
தலைவியின் பசலையை நினைவூட்டியது
அரசு மருத்துவமனையில்
நோயாளியாக இருக்கும் அவளின்
தாயின் முகத்தையும்
வயல்வெளிகளில் வாழ்வு தொலைத்து
கடனில் மூழ்கிப்போன
தோல் சுருங்கிய அவளின் தந்தை முகத்தையும்

3
வீட்டுக்குவரும் ஒவ்வொரு திருமண அழைப்பிதழும்
தன் மகளை கரை சேர்க்காததை
குத்திக்காட்டுவதாகவே தோன்றியது
எலும்பு தேய உழைத்த வயோதிக அப்பாவுக்கு
அழகு திரண்டு வற்றிப்போனதிலிருந்து
அவள் காதலும் தூர்ந்துபோயிருந்தது
பெத்த கடன்
எவன் கையிலாவது பிடித்துக் கொடுக்கவேண்டும்
பிறந்த கடன்
எவனுடனாவது வாழ்ந்தாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பட்டணம் பார்க்கப் போன சிவலை நாய்!

**'கெட்டும் பட்டணம் போ' இது நம்மவர் மத்தியில் புழங்கிய ஒரு முதுமொழி. அப்படியிருக்க நாம் வளர்த்த நாய்களுக்கும் இது இல்லாதிருக்குமா? இந்தக் கனவுடன் வாழ்ந்த நம்மூர் நாயின் கதைதான் இது.**

முன்னொரு காலத்தில் ஒரு நாள். அப்போதுதான் பட்டிதொட்டிக் கிராமங்களுக்கு மையங்களாக நகரங்கள் புதுமைப் பொலிவுடன் தோன்றிக்கொண்டிருந்தன. என்றென்றும் திருவிழாக் கோலமாகக் காட்சிதரும் இந்நகரங்கள் கிராமவாசிகளின் புதிய ஒன்றுகூடல் மையங்களாகிக் கொண்டிருந்த காலமது. இது விரிவாகி நகரங்கள், மாநகரங்கள், பிரமாண்ட நகரங்கள் எனவாகவும் உருமாறிக்கொள்ளும் காலமது. அங்கே பல பேருந்துகள் தரிக்கும் விசாலமான மையங்கள், பெரிய கடைத் தெருக்கள், புகையிரத நிலையங்கள், அழகான சினிமாக் கொட்டைகைகள், நிறைய வாகனங்கள், பெரிய உணவகங்கள், பிரமிக்க வைக்கும் கட்டிடங்கள் என இங்கு போய்வருதல் பெரிய விடயமாகவும், அப்படிப் போய்வந்தவர்களின் விபரணங்களைக் கேட்டு கனவுலகில் மிதப்பது இதமான அனுபவமாகவும் இருக்கும். இந்த அனுபவங்களைப் பெற்று நம்முடன் பகிரவரும் வர்ணனையாளராக எல்லோராலும் வந்திட முடியாது.

வழமையாக ஊர் நாய்கள் ஒன்றுகூடும் இடம். அந்தக் கோயில் மடப்பள்ளியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கே வெளிப்புறத்தில், தனியாக இருந்த வேப்பமரத்தின் கீழேதான். இந்த வேப்பமரம் பெரிதானதில்லை, ஆனால் வயதானது. நோஞ்சானாகத் தெரியும், இதனால் பெரிதாக நிழல் விழுவதில்லை. இந்த இடத்தில் ஆடு மாடுகள் வருவதற்கு விரும்புவதில்லை. தனியாக இருந்த இம்மரத்தடியிலதான் கோயிலின் மிச்சங்கள் கொட்டப்படுவது வழமை. இப்படியான காரணங்களால் நம்ம ஊர் நாய்களுக்கு இந்த இடம் பொருத்தமானதாகவே இருந்தது. கல்லெடுத்தெறியும் கெட்ட மனிதர்களின் நடமாட்டங்களும் இல்லாது சுதந்திரக் காற்றை சுவாசித்தன போலும். மாலை வேளையில் இவ்விடத்தில் அநேகமாக எல்லோரும் கூடிவிடுவார்கள். இதிலேயே வாழ்ந்துகொண்டிருக்கும் இரண்டு நாய்களும் இதில் அடங்கும். இதை தெருநாய் என்றுதான் அழைப்பார்கள். ஊர் நாய்கள் என்று சொன்னாலும் அவற்றில் எத்தனை வகைகள் ... ஒல்லியானவை, கொழுத்தவை, உயரமானவை, கட்டையானவை, வயதானவை, இளமையானவை, தனிக் கறுப்பு, தனிச் சிவலை, வெள்ளை, மாநிறம், கலப்பு நிறம், புள்ளி போட்டவை எனவாக ஒவ்வொன்றையும் தனித்தனியாகவும் பிரித்தும் பார்க்கலாம். தவிர, இவற்றை வளர்க்கும் மனிதர்களின் விருப்புக்காக வால் வெட்டப்பட்டதாகவும், நலமெடுக்கப் பட்டதாகவும், நொண்டி காலுடையதாகவும் ஆன வகையிலும் வேறுபடுத்தியும் பார்க்க முடியும்.

இக்கூட்டத்தில் நல்ல சிவலை கொழு கொழுவென பார்த்தவுடன் கவரக்கூடிய வசியமுடைய இளைய நாய் ஒன்று அதிகம் அலட்டிக்கொள்ளாது இருக்கும். இதனை வளர்ப்பவர் வீட்டில் இதற்கு அதீத செல்லம் கொடுத்து வளர்த்தார்கள். முறைப்படி மனிதர்களின் கூற்றைக் கேட்டு நடக்கும் பயிற்சியையும் இது பெற்றிருந்தது. அக்கிராமத்தில் முறைப்படி கற்றிருந்த நாய் இதுதான்.

மெத்தப் படித்திருப்பதால் இது தன் இன ஆட்களுடன் அதிகம் சேராதிருப்பதாக அந்தத் தெரு நாய்கள் தங்களுக்குள் ஒரு நாள் கதைத்துக் கொண்டன. இதைக் கிறுக்கன் என்று சொல்பவர்களும் இருக் கத்தான் செய்தனர். இது தன்னோடு ஒத்தவர்களுடனும் அதிகம் உறவு வைக்காதது, ஊர் பெரிய நாய்களுக்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது. வெறும் இரண்டு பேருடன் மாத்திரம்தான் இது கதைக்கும். மற்றவர்களைச் சட்டை செய்வதே இல்லை.

'அப்படி என்னதான் நினைப்போடு இது இருக்கு?' என்ற கேள்வியால் அரித்தெடுக்கப்பட்ட ஊர் பெரிசு, தனது கேள்வியை சபையில் வைத்துவிட்டது. பலரும் பலவிதமான ஊகங்களைச் சொல்ல அந்த நாயின் நட்பைப் பெற்றிருந்த கறுப்பு வெள்ளை நாய்தான் தான் அறிந்தவற்றைச் சொல்லி ஊகங்களுக்கு முற்றுவைத்தது.

"அதுக்கு இந்த ஊர் பிடிக்க வில்லையாம். தனது எடுப்புக்கும் அறிவுக்கும் ஏற்றதாக இந்த ஊர் இல்லையாம். தான் பட்டினத்தில்தான் வாழக்கூடிதாக இருக்கும்" என தன்னிடம் கூறியதாக அந்த நட்பு நாய் கூறியது.

"பட்டினத்தில் வாழ்வதாக இருந்தால் அதற்குரிய லைசென்ஸ் எடுக்கவேண்டுமே?" என்று ஊர் பெரிசு சொல்ல,

"அப்படியாக லைசென்சு இல்லா திருந்தால் 'நாய் பிடிக்காரர்கள்' பிடித்துக்கொண்டுபோய் நடுக் கடலில் மூழ்கடித்துவிடுவிவார்களென நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்!" என ஆமோதித்தது இன்னுமொரு நாய்.

"ஊருக்குள் தனியனாக நடமாடும் சிவலை நாயின் பிரச்சனையைக் களையாது விட்டால்... வால் நிமிர்ந்த நாயாகப் போய்விடும். பிறகென்ன, நாய் வண்டி கொண்டுவந்து பிடித்துச் சென்றுவிடுவார்களென" சிலர் பௌவியமாக எடுத்துச் சொன்னார்கள்.

"என்ன இருந்தாலும் நாய்ப் பஞ் சாயத்துக் கூடி இறுதி முடிவெடுப்பதுதான் நல்லது" என மூத்த நாய் கூறிய கருத்து அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அடுத்த வெள்ளி மாலையில் பஞ்சாயத்து என முடிவானது. முறைப்படி அந்த எடுப்பான சிவலைக்கு அழைப்பும் விடப்பட்டது.

மரத்தடியில் ஊர் நாய்களெல்லாம் குழுமியதைக் கண்ட கோயில் ஐயருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாய் சீசன் வந்துட்டாக்கும்!' எனத்தான் எண்ணத் தோன்றியது. இதுக்குள் நுழையக்கூடாதென்ற பட்டறிவால் அவர் பேசாதிருந்துவிட்டார்.

விரிவாகப் பஞ்சாயத்து நடைபெற்றுக்கொண்டிருந்தது.

"என்னுடைய மிடுக்குக்கும் திறமைக்கும் நான் இந்தக் கிராமத்தில் இருக்கமுடியாது. இங்கு எனக்கேற்ற ஒரு சோடிகூட கிடைக்கமாட்டுது. நான் பட்டணத்தில்தான் வாழ வேண்டும்."

"தம்பி... பட்டணம் நம்ம ஊர் போல வராது. அங்கு யாரையும் மதிக்கவும் மாட்டார்கள், கவனமெடுக்கவும் மாட்டார்கள்!" ஒருவர் உறுதியாகச் சொன்னார்.

"எனக்கு யாரது அரவணைப்பும் தேவையில்லை. என்னால் தனித்தே வாழ்ந்து காட்ட முடியும்... நான் அங்குதானே நாய் பயிற்சிக் கல்லூரியில படிச்சனான். என்ர திறமையில் எனக்கு நம்பிக்கை இருக்கு!" சிவலை விடுவதாக இல்லை.

"தம்பி, இந்த மனுசர்களுக்கு எப்ப எப்ப, என்ன எண்ணம் வரும் என்று சொல்லமுடியாது! பட்டணத்தில இது பயங்கரமான முடிவாகிவிடலாம்..." கால் கொஞ்சம் ஊனமான நாய் சொன்னது.

"என்ர வசீகரத்தால் இந்த மனுசக் கூட்டம் மயங்கிவிடும். நான் இங்கு எப்படிப்பட்டச் செல்லமாக இருக்கிறன் என்று தெரியும்தானே!"

'அடடா.... இவ்வளவு நாளும் பேசாதிருந்த இந்தச் சிவலைக்குள் எந்தப் பெரிய கனவு இருந்திருக்கு. இந்தக் கனவைக் கலைக்கக்கூடாது' எனவாறாக யோசித்துக்கொண்ட ஊர் பெரிய நாய்,

"சரி, உன் விருப்பப்படி பட்டணத்திற்கு அனுப்பி வைக்கிறம். ஆனால், வருடத்திற்கு ஒரு முறையாவது இங்கு வந்து செல்ல வேண்டும்." என்றது.

இதைக் கேட்ட சிவலை மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது. ஆனால் சிவலையின் நண்பர்களான இரண்டு நாய்களின் முகத்தில் அவர்களையும் அறியாது கண்ணீர் வழிய ஆரம்பித்துவிட்டது. சிவலையின் உற்றாரான நாய்களுக்கு திக்கென்று இருந்திருக்க வேண்டும்.

"இங்கு இளவரசராட்டம் செல்லமாக வளர்ந்திட்டான். அங்கு போய் என்ன செய்யப் போறானோ..." என்றது ஒரு நாய் கவலையுடன்.

"இது பஞ்சாயத்து, யாரையும் பொத்தி வைத்துப் பராமரிக்க முடியாது. நடப்பதெல்லாம் நடக்கட்டும். அவனுடைய விருப்பப்படி விடுவதுதான் நல்லது. நாளைக்கே அவன் பட்டணத்திற்குப் போக ஏற்பாடாகட்டும்" என்று எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளியிட்டது தலைமை நாய்.

ooo

சனி அதிகாலை சாமான் கொண்டு போகும் வண்டியில் பிரியா விடைகொடுத்து அனுப்பின ஊர் நாய்கள்.

கனவுக் கோட்டையில் கால் பதித்த அந்தக் கணத்தை சிவலையால் மறக்கவே முடியாது. 'ஆகா என்ன அழகு! பெரிய பேருந்து தரிப்பிடத்தில் ஒரே மாதிரியான பேருந்துகள், பென்னாம் பெரிய புகையிரத நிலையம், பெரிய அடுக்குமாடிக் கட்டிடங்கள், நீண்ட கடைத் தெருக்கள், சினிமாக் கொட்டகைகள், பத்திப்பத்தி எரியும் முகப்பு மின் விளக்குகளைக் கொண்ட பெரிய அடுக்குமாடி விடுதிகள், பெரிய பெரிய கல்லூரிகள், பல்வேறு பூக்களைத் தரும் செடிகளைக் கொண்ட பூங்காக்கள், அகண்ட வீதிகளின் சந்திகளில் சிலைகள், பார்க்குமிடமெல்லாம் பரபரப் பாக அங்கும் இங்குமென நடமாடும் மனிதர்கள்...' எனவாகப் பார்த்துக்கொண்டு புளங்காகிதமடைந்தவாறு நகர்வலம் வருகிறது சிவலை.

தன்னந்தனியாக இவ்வளவு நேரமும் நகரை வலம் வந்த சிவலைக்கு மாலையானதே தெரியவில்லை. இப்பத்தான் கொஞ்சம் பசியெடுக்கத் தொடங்கியது. 'சரி எங்காவது சென்று சாப்பிடுவம்' என்ற எண்ணத்தோடு அந்தப் பெரிய கோயிலின் கிழக்கில் அமைந்திருந்த அன்னதான மடத்தின் ஓரமாக வந்தது. அங்கே எச்சில் இலைகள் போடப்பட்டிருந்த இடத்தின் கிட்டேபோனபோதுதான் தன்னைப் போன்றவர்களை நகரத்தில் கண்டது. தான் கிராமத்தில் பார்த்த மாதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**"எனக்கு யாரது அரவணைப்பும் தேவையில்லை. என்னால் தனித்தே வாழ்ந்து காட்ட முடியும்... நான் அங்குதானே நாய் பயிற்சிக் கல்லூரியில படிச்சனான். என்ர திறமையில் எனக்கு நம்பிக்கை இருக்கு!"**

தோற்றங்களுடனானதாகவே இவையும் இருந்தன. நகர நாய்கள் என்பதால் முற்போக்கானவையாக இருக்கும் என எண்ணியவாறு சினேக பாவத்துடன் தனது நட்பை வெளியிட்டது. என்ன ஆச்சரியம் 'ம் ம் ம்... உர்ர்ர்ர்... உர்...' படுத்திருந்தவாறு தன்னைப் பார்த்து முறைக்கும் அந்தப் பெரிய நாயின் உறுமல் சிவலையைப் பயங்கொள்ள வைத்துவிட்டது.

கிராமத்தில் செல்லப் பிள்ளையாக விரும்பியதெல்லாம் சாப்பிட்டு வந்த சிவலைக்கு இந்த முறைப்பு புதுசாகவும், ஏமாற்றமாகவும் இருந்தது. தான் கிராமத்தில் இருந்து இங்கு வந்துள்ளது பற்றியும் உங்களுடன் சேர்ந்து வாழவே ஆசைப்பட்டு வந்தது பற்றியும் விளக்கிக் கூறமுற்பட்டது. ஆனால், இதன் கதையை யாரும் கேட்கத் தயாராக இருக்கவில்லை. முறைத்துக்கொண்டிருக்கும் அந்தத் தடியனான நாய் சிவலையை உள்ளே செல்லவும் விடவில்லை. நேரம் செல்லச் செல்லப் பசி கொஞ்சம் வாட்டியெடுக்கத் தொடங்கியது. மற்ற நாய்கள் சாப்பிடுவதைப் பார்க்க எச்சில் ஊறி வழிந்துகொண்டிருந்தது.

சரி வருவது வரட்டுமென உள்ளே செல்ல காலடியெடுத்து வைத்ததுதான் தெரியும். எப்படி வெளியே வந்து விழுந்த தென்றே ஞாபகமில்லாது போயிற்று. அந்தத் தடியன் மாதிரி மூன்று நாய்கள் 'வாவ்...' எனப் பாய்ந்து கடித்து எறிந்துவிட்டன. இங்கு மெம்பர்சிப் இல்லாத எவருமே நுழைய முடியாதாம். அவமானம் தாங்கமுடியாததாக அங்குமிங்கும் பார்த்தது சிவலை. பசியும் விடுவதாக இல்லை.

ஒருவாறு தன்னைத் தேற்றியவாறு ஒரு உணவகத்தை நோக்கிச் சென்றது. இப்ப இருள் கவிந்துவிட்டிருந்ததால் மின்னொளியில் நகரம் பிரகாசமாக இருந்தது. இரு விளக்குகள் மிளிர, வாகனங்கள் சர் சர் என ஓடும் காட்சி மயிர்க்கூச்செறிந்தது. முன்னே வெள்ளொளியும், பின்னே சிகப்பொளியுமாக நகர்ந்துகொண்டிருந்தன. 'ஆகா ஆகா... இந்த மனிதர்கள் ஏதாயினும் ஒன்றைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்'.

ஒருவாறு நகரின் மையத்திலமைந்த அந்தப் பிரபல்யமான உணவகத்தின் எச்சில் இலை போடுமிடத்திற்கு வந்து விட்டிருந்தது. இங்கேயும் பல நாய்கள் உணவருந்தியவாறு இருந்தன. 'சரி, தானும் போய்ச் சாப்பிடுவம்' என எண்ணியவாறு ஒரு இலையை நோக்கி ஓடியது. தன் மேல்முதுகில் இப்படியொரு கடியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதுவரையில் சிவலை பெற்றிருந்ததே இல்லை. அப்படியொரு தடியால் தூக்கி எறியப்பட்டிருந்து.

"நானும் உங்களைப் போன்றவன்தானே! எனக்குச் சரியாப் பசிக்குது..." என்றது கெஞ்சல் குரலில்.

"உர்... உர்..." முறைப்பு பலமாகவும் பல்வேறு குரல்களிலுமாக வெளிவந்தன.

'இங்கு வருவதானால் முதலிலேயே முன்பதிவு செய்ய வேண்டும். தெரியுதா? என்ன காட்டான் மாதிரி நுழைகிறாய்!' என்றது இன்னொரு நாய்.

தனது கதையைச் சொல்லத் தொடங்கியது சிவலை. ஐயோ பாவம் இதன் கதையைக் கேட்க இங்கு யாரும் தயாரில்லை. முதுகிலிருந்து வடிந்த இரத்தம் கால்களால் கீழிறங்குவதைக் கண்டு கலங்கிப் போனது சிவலை. காதிலும் எரிச்சலாக இருந்தது. இதன் பரிதாபத்தைக் கண்டு ஒரு நாய் கிட்டே வந்தது.

"தம்பிக்கு எந்த ஊர்? வீட்டிலை கோவிச்சுக்கொண்டு வந்தனியா?"

தன் கதையைச் சிவலை சொல்லத் தொடங்கியது. அரைவாசியைக் கேட்டதும்,

"இங்க பார் தம்பி, இங்கு வந்துள்ள எல்லாருக்கும் உன்னை மாதிரிக் கதையிருக்கு. இதெல்லாம் பயன்படாது. பேசாம ஊர் திரும்புற வழியைப் பார்!" என்று சொல்லிச் சென்றுவிட்டது. மௌனித்துப் போன சிவலைக்கு மின்னொளியில் பிரகாசித்த நகரத்தில் ஏதுமே தெரியவில்லை.

○○○

சாமம் கடந்திருந்தது. சரியான இருட்டு. ஆனால், எல்லாமே தெரிகின்றன சிவலைக்கு. கோயிலின் தெற்குப் பக்கமாக மெதுவாகப் போகிறது. படுத்திருந்த தெரு நாய்களுக்கு ஆச்சரியம். இந்த நேரங்கெட்ட நேரத்தில் நொண்டியவாறு எமது ஊருக்குள் யார் நுழைவார்?

'வவ்... வவ்...' முதற்குரையல் கட்டியமிட, தொடர்ந்தன குரையல்கள்.

மிக விரைவாகவே நாய்கள் கூடிவிட்டன.

மெதுவாக நடந்துவரும் அந்த இருட்டு நாயை எதிர்கொள்ள ஊர்ப் பெரிசு முன்செல்கிறது.

வந்த நாய் படுத்தவாறு முனகுகிறது. கிட்டே வந்த ஊர்ப் பெரிசு, "என்ர ராசா சிவலை! என்னடா மோன நடந்தது..." என்று தன்னையும் அறியாது கலங்கியதுதான் தருணம். அவ்வளவு நாய்களும் விரைந்து செயற்பட்டன.

சிவலைக்குத் தண்ணீர், சாப்பாடு கொடுக்கப்பட்டன. கடிபட்ட இடங்களைத் தடவிக்கொடுத்து ஆசுவாசப்படுத்தின. சிவலையைத் தொந்தரவு செய்யவேண்டாம் என்று சொல்லிச் சென்றது ஊர்ப் பெரிசு.

அடுத்த நாள், நிம்மதியாக பொழுது புலர்ந்தது. தெரு நாய்களுடன் படுத்துறங்கிய சிவலை உடம்பை முறித்தவாறு எழுந்தது. ஆங்காங்கே வலிகள் இருந்தாலும் மனதில் ஏதோ நிம்மதியிருந்ததால் மகிழ்ச்சியாக இருந்தது.

"எப்படியப்பா சிவலை! நகரம் எப்படியிருக்கு?" என்றது தெரு நாய்களில் ஒன்று.

"நகரம் நல்லாத்தான் இருக்கு. நம்மாக்கள்தான்...!" என்றவாறு வலது காலால் தனது தலையைச் சொறிந்தது சிவலை.

அமையாதியாக சிவலை இருப்பதைக் கண்ணுற்ற ஏனைய இளசுகள் ஆச்சரியப்பட்டவைகளாய் வாயடைத்திருந்தன. ●

(இக்கதையின் வேறொரு வடிவம் பாரீசில் 1993இல் வெளிவந்த 'ஓசை' இதழில் இடம் பெற்றிருந்தது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழியாள் கவிதைகள்
# மேகத்துக்குள் இயங்கும் சூரியன்

1

ஈழப் போராட்டமும் அங்கு நடந்த உறைய வைக்கும் வன்முறைகளும் அறம் எதிர்கொண்ட தோல்விகளும் நமது கேடுகெட்ட காலகட்டத்தின் மிகப் பெரிய மனித அவலம். இத்தகைய நெருக்கடிக்கு நடுவில் வாழுமாறு விதிக்கப்பட்ட சீவன்களின் துக்கமும் அலக்கழிப்புகளும் இழப்புகளும் எழுத்துக்களாகக் குவிந்த வண்ணம் இருக்கின்றன. இதற்குப் புலம்பெயர் வாழ்க்கைத் தந்த கூடுதலான வாய்ப்புகள் ஒரு காரணம். இத்தகைய வாய்ப்பைப் பெற்ற ஒரு கவிஞர் ஆழியாள்.

ஆனால் ஆழியாள் கவிதை பெரும்பாலான ஈழத்துக் கவிதைகள் போல் இல்லை என்பதை முதல் வாசிப்பிலேயே உணர முடிந்தது. பல்வேறு ஈழப் பெண் கவிஞர்களின் 'ஒலிக்காத இளவேனில்' என்ற தொகுப்பிற்குக் "காக்கையில்" மதிப்புரை எழுதும்போதே இவரின் கவித்துவத் தனிமையை அடையாளம் கண்டுகொண்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். இவருடைய 'உரத்துப் பேச', 'துவிதம்' ஆகிய தொகுப்புக்களையும் வாசிக்க வேண்டுமென உறுதி செய்துகொண்டேன். அதற்குள் இந்தக் 'கருநாவு' கைக்குக் கிடைத்து விட்டது.

பட்டினி கிடந்த தெருநாய் போல மோப்ப வெறியோடு வாசிக்கத் தொடங்கினேன். பிடிக்குள் அடங்காத பெருவெளியாய் இவர் கவிதைகள் எனக்குள் விரிந்துகொண்டே போகின்றன. அந்த அளவிற்கு உருவகம், படிமம், குறியீடு எனக் கவிதை தன் கருவியான மொழியைத் தாண்டி 'வெளியில்' அலைவுறு பொருளாகச் சுழலுகிறது. பொருளாகச் சுழலுகிறது என்று கூடச் சொல்ல முடியாதவாறு




கருநாவு
ஆழியாள்

மாற்று வெளியீடு,
சென்னை 600106.

வெளியீடு 2013
விலை ரூ. 60,
பக் 77.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொருளாய்க் கூடிவிடாத படித் தன்னைத்தானே கலைத்த வண்ணம் அலைகின்றதாக இயங்குகிறது.

முதல் கவிதையான அம்மாவை எந்தப் பொருளுக்குள் அடக்க முடியும்? தார் வீதி. கொடும்பனி வீதி என ஓய்வு இல்லாமல் உலகம் முழுவதிலும் உன்னையும் என்னையும் பார்த்தபடிக் கையசைத்த வண்ணம் புன்னகைத்து ஓடிக்கொண்டே இருக்கிறாள். இந்த அம்மாவை எப்படி உள்வாங்குவது? அம்மாவைச் சுற்றிப் புனையப்பட்டிருக்கும் அனைத்தும் நம்மைச் சுற்றுகின்றன. அன்பு, கருணை, தியாகம், இன உற்பத்தி முதலிய பலவும் முன்னே வந்து நிற்கின்றன. சரி, ஓடிக்கொண்டே இருக்கிறாள். அவளை எப்படி, எதனால், எதற்குள் பிடிப்பது?

இப்படி வாசகனையும் ஓடவிடுகிறது கவிதை. இந்நிலையில் கவிதை வாசிப்பு என்பதும் பிடிமானம் எதுவுமற்ற அந்தரத்தில் மிதப்பதாக நிகழ்கிறது. இந்தக் கவிதை அனுபவத்தைப் பிரித்தெடுப்பதும் அதை மொழிப்படுத்த முயல்வதும். சிரமமான ஒன்றாகிவிடுகிறது. அதைத்தான் இங்கே செய்துகொண்டிருக்கிறேன்.

## 2

பொதுவாகப் பேரினவாதத்தாலும் குறுங்குழுவாதத்தாலும் நடந்த வன்முறைகளை, புலம்பெயர் வாழ்வின் ஏக்கங்களை, ஏமாற்றங்களை எழுதுவது தான் பெருவழக்கு. ஆனால் ஆழியாள் அந்தக் கொடூரங்களுக்குள் தன்னைப் பொருத்திக் கொண்டு தன் மனமெனும் பேரண்டத்திற்குள் பாய்ந்து பரவும் நுண்ணுணர்வுகளை அவதானித்து அவைகள் தன் மொழிக்குள் வந்து குந்துவதை நமக்குத் தருகிறார். ஆழமான அவருடைய ஆங்கிலமொழி, இலக்கியக் கல்வியும் துணைசெய்திருக்குமெனத் தோன்றுகிறது. இப்படி எழுதுகிறார்:

"எவ்வளவு தவிர்த்தும் சில கவிதைகள் இனம் புரியாத ஒரு உந்துதலை, எழுத்தில் பதிவதற்கான பிரயத்தனத்தை ஆர்முடுகல் மனோநிலையை மீண்டும் மீண்டும் என்னுள் ஏற்படுத்துகின்றன."

இந்தப் பண்புதான் இவர் கவிதை களுக்குள் தனித்தன்மையை ஏற்றுகின்றன. இந்தக் கவிதையைப் பாருங்கள்:

**ஆமாம்!**
**தொடர்பும்,தொடர்பறுந்த வசனங்களும்**
**விளையும் மனதை,**
**படிமங்களும், சித்திரங்களும்**
**யோசனைகளும்**
**உரையாடலும் எண்ணங்களும் உதிக்கும்**
**மனதை,**
**இசையும் அதிர்வுகளும்**
**தாளமும், பாடல்களும் சேர்த்துக் கேட்கும்**
**மனதை,**
**வண்ணக் கலப்புகளும், வரிவடிவங்களும்**
**காட்சிகளும்**
**குரல்களும் கலக்கும் மனதை,**
**ரசனையும், நிறங்களும்**
**ஒளித்தெறிப்புகளும் மின்னி வெட்டும் மனதை,**
**அவதானிப்புடன். பராக்கும் பார்க்கும்**
**ஆயிரம் சுடர்க் கண்கள் கொண்ட**
**இம்மனதை**
**நான் விட்டுச் செல்கிறேன்.**

இன்னொரு இடத்தில் இப்படி எழுதுகிறார்:

**நான் மூன்றாம் உலகக்காரியாய் இருந்தேன்**
**என் வாழ்வு முதலாம் உலகத்தினதாய் இருந்தது**
* * *
**நான் வெளியே நின்றேன் - எனக்கு**
**மிகப்பிடித்த கருஞ்சிவப்புச் சுங்குடிச் சேலையில்**
**வாழ்வைப் பார்த்தபடி. (ப. 60)**

## 3

இந்தத் தொகுப்பில் சொந்தங்கள் நெருப்பில் கருகுவதும், கோபுரத்துக்குக் கீழே கூறுகளாக்கி வீசப்படுவதும், துரோகியாய்த் தொங்குவதும், ஷெல் அடித்துப் பல தலைகள் சிதறிப் போவதும், இரவில் துப்பாக்கிச் சத்தத்தோடு தூங்குவதும் என வன்முறையின் அனைத்துக் காட்சிகளும் இதயம் வலிக்கும்படி மொழிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வளவும் செய்த பேரினவாத அரசு இறுதியில் கொண்டாடிய வெற்றி விழாக் கூச்சல்கள் எந்தவொரு கவிதை மனத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணாக்கக் கூடியது. இந்த வன்முறை அரசியலால் எதிர்கால இலங்கை எப்படி ஆகும்? கவிஞர் எழுதுகிறார்:

**இன்று களப்பு மேட்டருகே**
**தன் சின்னண்ணை எறிந்த**
**மண்டை ஓட்டை**
**காய்ந்து வழுவழுக்கும் கால் எலும்புத்**
**துண்டால் திருப்பியடித்துக்**
**கிரிக்கெட் விளையாடுகிறாள்**
**சின்னஞ்சிறு மகள் ஒருத்தி.**
**வெற்றி...**
**நமக்கே (ப. 58)**

இதுபோலவே போரில் முதல் பலிகடாவாகும் பெண்பால் குறித்தும் "தாயும் மூன்று யாமங்களின் தேவதையும்" என்ற கவிதையில் மகளைத் தேடிச் செல்லும் கலித்தொகை பாணியில் சித்தரிக்கிறார்.

**துரோகங்களினதும் அவமானங்களினதும்**
**பொய்மைகளினதும்**
**அடர்காடுகள் இடையே அவர்கள்**
**பயணித்து**
**மாதுளை முத்துக்களைப்**
**புளிப்பு இனிப்பாய்ச் சுவைத்த**
**மகளைக் கண்டனர்.**

இவ்வாறு கவித்துவத்தின் நுட்பத்தைக் கைப்பற்றி நடக்கும் எழுத்துக்களாக ஆழியாளின் எழுத்துமுறை அமைந்துள்ளது. சூரியனை, மறைக்கும் மேகத்திற்குள் வைக்கும் போதுதான் பலப்பல ஒளிக்கோலங்களை இயற்கையால் படைக்க முடிகிறது. மொழி, புலப்படுத்துவதற்கு அல்ல. எவ்வளவு முடியுமோ அவ்வளவு மறைப்பதற்கு. என்ற அழகியல் கமுக்கத்தை புரிந்தவர்கள் இவர் கவிதைக்குள் எளிதாகப் பயணிக்கலாம். கவிதை ஒன்று சொல்வது போல, கூடாரங்கள் அமைத்து, வனாந்தரங்களில் அலைந்தாலும், தூரதேசக் குளிரில் திசையறுந்து திரிந்தாலும், ஒளி பெருக்கெடுத்துப் பொங்கி வழிந்தோடப் பெருகிப் பெருகிப் பேராறாய் விரியும் பால்வெளியைக் கண்டு சிலிர்த்த குமாரத்தியாய்த் தன் கவிதையில் ஆழியாள் வெளிப்படுகிறார். ஏழு மொழிபெயர்ப்புக் கவிதைகளும் நமக்கு இத்தொகுப்பில் கிடைக்கின்றன. ●

## காக்கையின் கோரிக்கை




**காக்கைச் சிறகினிலே இதழுக்கு படைப்புகள் அனுப்புவோர் கவனத்திற்கு:**

படைப்பாளிகள் பக்க வரையறையைத் தீவிரமாகக் கவனத்தில் கொள்க. உங்கள் படைப்பு ஐந்து பக்கங்களுக்கு மிகாமல், (ஏறக்குறைய 750 வார்த்தைகள்) கணினி அச்சில் இருத்தல் அவசியம்.

படைப்புகளை எழுத்துப்பிரதியாக அனுப்புவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம். யுனிகோட் எனப்படும் ஒருங்குறி எழுத்துருவில் கணினி அச்சு செய்து அனுப்பவும். படைப்புகளை அனுப்புவோர் தங்களுக்கான பிரதியை வைத்துக் கொள்ளவும். வெளியிடுவதற்குத் தேர்வு பெறாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

உங்கள் படைப்பு வெளியிடுவதற்குத் தேர்வு பெற்றதா, இல்லையா என்பது குறித்து, படைப்பை அனுப்பிய ஒரு மாத காலத்திற்குப் பிறகு, தொலைபேசியில் (9841457503) தொடர்பு கொண்டு கேட்டறியலாம்.

கவிதை, சிறுகதை, கட்டுரை என உங்கள் படைப்பு எதுவாயிருப்பினும், நீங்களே ஓரிரு முறை படித்துப் பார்த்து, ஒற்று உள்பட மெய்ப்புத் திருத்தி அனுப்புமாறு கோருகிறோம்.

படைப்பை ஏற்பதும் நிராகரிப்பதும் ஆசிரியர் குழுவின் இறுதி முடிவுக்கு உட்பட்டது என்ற இதழியல் உலகின் மரபையும் ஜனநாயகத்தையும் மதித்துப் போற்றும் பண்பாடு நிறைந்தவர்கள் படைப்பாளிகள் என்று காக்கை முழுமையாக நம்பிக்கை கொள்கிறது.

இதழ் குறித்த தங்களது கருத்து அல்லது விமர்சனத்தை ரத்தினச் சுருக்கமாக அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். 60 முதல் 100 வார்த்தைகளுக்குள் இருத்தல் நலம். அதிகமானவர்களின் கருத்துகளை வெளியிடுவதற்கு இது உதவியாக அமையும்.

பிரபல சிற்றிதழ்கள் போல, விரிந்த கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளத்துடன் இயங்கும் நிலையில் காக்கை இல்லை. வெகுசில தன்னார்வலர்களின் கூட்டு முயற்சியில் இந்த இதழ் வெளிவருகிறது. முன்னும் பின்னும் அறிந்து ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பை அளிக்குமாறு படைப்பாளிகளையும் வாசகர்களையும் காக்கை நிமிர்ந்து கோருகிறது.

– **ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜெயகாந்தன் 80


மியூசிக் அகாதமி என்று பிரபலமாக அறியப்படும் சங்கீத வித்வத் சபையில் நடக்கும் கர்நாடக, ஹிந்துஸ்தானி மற்றும் மேற்கத்திய இசைநிகழ்ச்சிகள் பலவற்றுக்கு, கட்டணம் கொடுத்து நுழைவுச்சீட்டு வாங்கிச் சென்றிருக்கிறேன். ஆகா, ஓகோ, பேஷ்... என்றெல்லாம் பேசப்படும் முன்னணி கர்நாடக இசைக் கலைஞர்களின் பல நிகழ்ச்சிகளுக்கே அரங்கம் நிறையாது. தாமதமாகச் சென்றுகூட எனக்குப் பிடித்த இருக்கையைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். பெரிதும் இசைநிகழ்ச்சிகள்தான் அங்கு நடக்கும். இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு அது வழக்கமான அரங்கம்அல்ல. இலக்கிய நிகழ்ச்சிகள் நடந்தால், ஏதோ ஒரு "கூட்டத்தின்" செயற்குழுக் கூட்டம் நடப்பது போலிருக்கும். அரங்கம் பெரிதும் காலியாக இருக்கும்.

ஒரு வாரம் முன்பு (ஜூலை 24) அங்கு நடந்த நிகழ்ச்சியொன்றுக்கு சென்றிருந்தேன். அது ஒரு இலக்கிய நிகழ்ச்சி. 6:30 மணிக்குத் தொடக்கம் என்று எனக்கு வந்த அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருந்தது. வேலையை முடித்துக்கொண்டு ஒரு வழியாக விரைந்து, அரங்கிற்குள் நுழைய முற்பட்டேன். மணி அப்போது 6:40க்குள்தான் இருக்கும். மேலே பால்கனிக்கு செல்லுங்கள்; கீழே இடமில்லை என்று சொன்னார் அரங்கிற்கு வெளியே நின்றிருந்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களில் ஒருவர். சற்றே ஆச்சரியத்துடன் மேலே சென்றேன். அங்கேயும், உச்சியிலிருந்த ஓரிரு வரிசைகள் தவிர, மற்றபடி நிரம்பியிருந்தது. இடம் தேடுவதைக் கவனித்த நண்பர் ஒருவர்அவருக்குப் பின்னாலிருந்த இடத்தைக் காட்டினார். சென்று அமர்ந்தேன். ஓர் இலக்கிய நிகழ்ச்சிக்கு கிட்டத்தட்ட அரங்கம் நிறைந்த கூட்டமா...! எனக்கு அது பல்பொருள் உணர்த்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேடல் மிகுந்த வாழ்வின் வெவ்வேறு நிலைகளில் தங்களையும் அவற்றினூடாக சமூகத்தையும் ஆழமாகப் பாதித்த, தமிழகத்தின் கனிந்த ஆளுமையான ஜெயகாந்தன் என்ற படைப்பாளிக்கு, தாங்கள் செலுத்த வேண்டிய மரியாதை இது என்பதாக அவர்கள் உணர்ந்தார்கள். அவர்களது இருப்பிலும் உடல்மொழியிலும் அது நன்கு புலப்பட்டது.**



அது ஜெயகாந்தனின் 80ஆம் பிறந்தநாள் மற்றும் ஆனந்தவிகடன் இதழில் 1960 மற்றும் 70களில் வெளியான அவரது படைப்புகளின் தெரிந்தெடுக்கப்பட்டத் தொகுப்பை, அவை வெளியான காலத்தின் வடிவத்திலேயே (அதாவது அதே கோபுலு, மாயாவின் ஓவியம் மற்றும் அதே எழுத்துரு, வடிவமைப்புடன்) புத்தகமாக வெளியிடும் நிகழ்ச்சி. லண்டன்வாழ் தமிழ்த் தம்பதியரான டாக்டர் ராம், திருமதி வனிதாவின் முன் முயற்சியில் நடந்தநிகழ்ச்சி. இளம்வயதிலேயே ஜெயகாந்தனின் எழுத்தால் ஈர்க்கப்பட்டு அவருடனேயே பயணித்த எண்ணற்ற தீவிர வாசகர்களில் ராமும் ஒருவர்.

"ஆனந்தவிகடன்" குழுமத் தலைவர் எஸ். பாலசுப்பிரமணியன், புரவலர், தொழிலதிபர் நல்லிகுப்புசாமி, நடிகர் சிவக்குமார், நடிகை லட்சுமி, ஓவியர் மாயா, ஜெயகாந்தனின் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரும் அவரது நெருங்கிய சகாவுமான கே.எஸ். சுப்பிரமணியன். இவர்கள்தான் மேடையில். நடுவே, விழாநாயகர் ஜெயகாந்தன்.


நடிகர் சிவக்குமார் நல்ல பேச்சாளர். ஆனாலும் அவருக்காகப் பெருந்திரள் கூடுமென்று சொல்லமுடியாது. மற்றவர்கள் யாரும் கூட்டத்தைச் சுண்டி இழுக்கும் உரைவீச்சுக்கு அறியப்பட்டவர்கள் அல்ல. "கவிப்பேரரசு" வைரமுத்துவின் பெயர் அழைப்பிதழில் இடம் பெற்றிருந்தாலும், "தவிர்க்க முடியாத" காரணத்தால் அவர் வர இயலவில்லை என்று முதலிலேயே அறிவித்துவிட்டார்கள். அவர் வந்திருந்தால் அவருக்காக ஒரு "கூட்டம்" வரும் என்று சொல்லலாம். அதுவும் இல்லை. ஜெயகாந்தன் முன்பு போல் பேசும் நிலையில் இல்லை என்பதை வந்தவர்கள் அறிவார்கள். என்றாலும் அரங்கம் நிறைந்திருந்தது.

பெரிதும் சமூகப் பார்வையும் உணர்வும் கொண்ட முதியவர்கள், நடுத்தர வயதினர் மற்றும் இளைஞர்கள். விசில் சப்தம் இல்லை. எள்ளல் கையொலி இல்லை. இசை நிகழ்ச்சிக்கு வந்துவிட்டு பக்கத்திலிருந்து பேசியே கொல்வார்கள், நமது ரசனையையும் இசையையும் ஒருசேர. அதுபோன்று ஏதுமில்லை. பங்கேற்றவர்கள் பெரிதும் தன்னார்வ அழுத்தம் நிறைந்தவர்களாக இருந்தார்கள். தேடல் மிகுந்த வாழ்வின் வெவ்வேறு நிலைகளில் தங்களையும் அவற்றினூடாக சமூகத்தையும் ஆழமாகப் பாதித்த, தமிழகத்தின் கனிந்த ஆளுமையான ஜெயகாந்தன் என்ற படைப்பாளிக்கு, தாங்கள் செலுத்த வேண்டிய மரியாதை இது என்பதாக அவர்கள் உணர்ந்தார்கள். அவர்களது இருப்பிலும் உடல்மொழியிலும் அது நன்கு புலப்பட்டது.

ஜெயகாந்தன் மேடையில் தன்னியல்பில் அமர்ந்திருந்தார். தளர்வை மறைக்க முற்படவில்லை. முதுமை மற்றும் நோயின் பாதிப்பை அவர் நெறியாள்கை செய்தார் என்றே சொல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரிதாகப் பேசுவார் என்று எதிர் பார்க்கப்பட்ட நடிகர் சிவக்குமார், பெரிதும் ஓவியர் கோபுலுவை சிலாகித்துவிட்டு, ஜெயகாந்தனின் சில கதைகளின் சுருக்கத்தைப் பகிர்ந்துவிட்டு அமர்ந்தார். எப்படிப் பேசுவாரோ என்று யோசிக்க வைத்த நடிகை லட்சுமி, ஜெயகாந்தனுக்கும் அவரது படைப்புக்கும் அவர் எவ்வாறு நெருக்கமானார் என்பதை உள்ளாய்ந்து, உணர்வுபூர்வமாகப் பகிர்ந்து கொண்டார். குறிப்பாக, ஜெயகாந்தன் பெண்ணின் மனநிலையை எவ்வாறெல்லாம் நுட்பமாகப் பதிவுசெய்தார் என்பதை அவர் நடித்த பாத்திரங்களின் வழியே (சிலநேரங்களில் சிலமனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்... போன்று) விளக்கினார். ஓர் ஆண், பெண் குறித்து இப்படியெல்லாம் சிந்திக்க முடியுமா என வியந்தார். ஜெயகாந்தன் தனது படைப்புகளில், பெரிதும் பெண்களை அதுவரையான சமூகமரபுகளை உடைத்து முன்நகரும் பாத்திரங்களாகவே படைத்திருக்கிறார் என்பதை உரக்கச் சொன்னார். நவீன பெண்ணியவாதிகளின் கனிவான கவனத்திற்கு உரியது இது.

குறுந்தகட்டில் பதிவு செய்யப்பட்ட வைரமுத்துவின் பேச்சை பெருந்திரையில் ஒளிபரப்பினார்கள். வரவில்லையெனில், விட்டிருக்கலாம். நிகழ்ச்சியின் உயரத்துக்கு ஈடாக இல்லை.

நல்லி அவரது பாணியில் ஜெயகாந்தன் பற்றி வியந்துரைத்தார். நிகழ்ச்சியின் பொருட்டு, அவரது வீட்டுக்கு காலையில் சென்றிருந்தபோது, "நீங்கள் நூறாண்டு வாழவேண்டும்" என்றாராம். ஜெயகாந்தன் அதை சலிப்புடன் மறுக்காமல் "ம், இருப்பேன்" என்று சட்டென்று கூறியதைப் பகிர்ந்துகொண்டார். அரங்கத்தில் ஆரவாரம். அதுதான் ஜெயகாந்தன்.

தமிழில் சமீப காலங்களில் அதிகம் பேசப்பட்ட, பேசி ஓய்ந்துவிட்ட நவீன "எழுத்தாளுமைகளின்" முகங்கள் அதிகம் தென்படவில்லை. எனக்குத் தெரியவில்லை. மாறுவேடத்தில் வந்திருக்கக்கூடும். இல்லையெனில் நிலவரம் அறிய, தங்கள் "முகவர்களை" அனுப்பியிருக்கலாம்.

எழுதுவதை நிறுத்திக் கிட்டத்தட்ட ஒரு தலைமுறைக்குப் பிறகும், ஜெயகாந்தன் என்ற படைப்பாளியின் 80ஆவது பிறந்தநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வில், கூட்டம் தன்னால் திரண்டுவந்து அரங்கை நிறைக்கிறது என்றால்... காலம் சொல்லும் செய்தி என்ன?

இலக்கியத்தில் மட்டுமின்றி, தமிழகத்தின் சமூக, கலை, மற்றும் அரசியல் தளங்களில், அக்காலக் கட்டம் கடந்த முன்னோக்கியச் சிந்தனைகள் வழியாக, அதிர்வுகளையும் ஆழ்ந்த தாக்கத்தையும் ஏற்படுத்தியவர் ஜெயகாந்தன். நீண்டகாலம், சிறுகதைகள், தொடர் கதைகள், கட்டுரைகள் எழுதாமலிருக்கலாம். ஊடகங்களில் பேட்டி வராமலிருக்கலாம். மேடைகளில் பேச்சு குறைந்திருக்கலாம். ஏன், மேடையே குறைந்திருக்கலாம் அல்லது இல்லாமலிருக்கலாம். ஆனால், சமூகம் தொடர்ந்து உவகையுடன் அவரைப் பல்லக்கில் தூக்கி வந்திருக்கிறது. சங்கீத வித்வத் சபை நிகழ்ச்சி அதைத்தான் உணர்த்துகிறது.

தமிழ்நாட்டில் எழுத்தாளனுக்கு மரியாதை இல்லை. மகுடம் இல்லை. கெட்டிமேளம் இல்லை. கொட்டுமுரசு இல்லை என்றெல்லாம் தேங்கிக் கிடக்கும் நூல்களிலும் முகநூலிலும் புழுங்கும், புலம்பும் நவீன எழுத்தாளுமைகள், ஜெயகாந்தனை சகட்டுமேனிக்கு விமர்சிப்பதிலோ தூக்கிஎறிந்து பேசுவதிலோ நியாயம் உண்டா?

சமகாலத்தில் இலக்கியப் பரப்பில் தோன்றும் பள்ளங்களையெல்லாம் தங்கள் எழுத்து ஜல்லியால் உடனுக்குடன் நிரப்புவது போலவும் இல்லையெனில் தமிழ்ப் படைப்புலகம் குண்டும் குழியுமாய் காட்சியளிக்கும் என்பது போன்றும் தலைதெறிக்க முழங்கும் நவீன படைப்பாளிகள், ஜெயகாந்தனை சற்றேனும் உள்வாங்கி யோசிக்க வேண்டும்.

இப்படிக் கூறுவதால், நான் ஜெயகாந்தன் படைப்புகளைக் கரைத்துக் குடித்துவிட்டதாக அர்த்தமல்ல. அவரை, ஓரமாய் நின்று அங்குமிங்கும் அறிந்த ஒரு சாதாரண வாசகன் மட்டுமே. எனினும், இந்தச் சமூகத்தின் சிந்தனைத் தடத்தில் அவர் பாய்ச்சிய புத்தொளியின் சிதறல்களை உணரமுடிகிறது.

நிச்சயமாக, ஜெயகாந்தன் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவரல்ல. பார்வைகள் சார்ந்து, முரண்களின் நெரிசலாகவும் அவர் தெரிவார்; அன்றி, தெளிவின் துல்லியமாகவும் புரிவார். அவரவர் அடர்த்தியும் ஆழமும்பொருத்தது. ஆனால், அவர் தன்னைத் தன்னிலேயே மறைத்து வைத்தவரல்ல. உள்ளஅறமும், ஆண்மையும் இணைந்த கம்பீரம் அவரிடமிருந்தது. அதனால்தான் அவருக்கு மாலைசூட எல்லா முகாம்களில் இருந்தும் கரங்கள் நீண்டன.


**நீண்டகாலம், சிறுகதைகள், தொடர் கதைகள், கட்டுரைகள் எழுதாமலிருக்கலாம். ஊடகங்களில் பேட்டி வராமலிருக்கலாம். மேடைகளில் பேச்சு குறைந்திருக்கலாம். ஏன், மேடையே குறைந்திருக்கலாம் அல்லது இல்லாமலிருக்கலாம். ஆனால், சமூகம் தொடர்ந்து உவகையுடன் அவரைப் பல்லக்கில் தூக்கி வந்திருக்கிறது. சங்கீத வித்வத் சபை நிகழ்ச்சி அதைத்தான் உணர்த்துகிறது.**

சங்கீத வித்வத் சபைக் கூட்டத்தில், பா.ஜ.க.வின் இல.கணேசன், பார்வையாளனாய் அமர்ந்திருந்து மேடையறி மரியாதை செய்தார். அரங்கம் பாரபட்சமின்றி கையொலி எழுப்பியது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், மரியாதைக்குரிய தோழர் நல்லகண்ணு மேடையேறி பொன்னாடை போர்த்தினார். அரங்கம் அதிர நீடித்தது கையொலி. அரங்கத்தில் கூடியிருந்தவர்கள் எல்லோரும் கம்யூனிஸ்ட்டுகளா, என்ன? கௌரவம் செய்பவர், அதற்கு உரியவர் ஆகிய இருவருமே பெரும் மரியாதைக் குரியவர்கள் என்பதால் எழுந்த பெரும் ஒலி அது. இதே இடதுசாரிகள் தரப்பிலிருந்து ஒரு கால கட்டத்தில் ஜெயகாந்தன் எத்தனை கடுமையாக விமர்சிக்கப்பட்டார் என்பதை சமூகம் அறியும். அதைக் கடந்த நாகரீகத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஜெயகாந்தன் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவரல்ல. பார்வைகள் சார்ந்து, முரண்களின் நெரிசலாகவும் அவர் தெரிவார்; அன்றி, தெளிவின் துல்லியமாகவும் புரிவார். அவரவர் அடர்த்தியும் ஆழமும்பொருத்தது. ஆனால், அவர் தன்னைத் தன்னிலேயே மறைத்து வைத்தவரல்ல.**

இருதரப்பும் ஒருவரை ஒருவர் மனம் திறந்து அங்கீகரிக்கும்போது, சமூகம் புரிந்துகொண்டு ஆர்ப்பரிக்கிறது.

முற்போக்கு எழுத்தாளர்கள், அவர்களைச் சாடும் நவீன எழுத்தாளர்கள் இவர்களிருவரையும் நிராகரிக்கும் பழைய தலைமுறை எழுத்தாளர்கள் எனப் பாகுபாடு இன்றி, எல்லா தரப்பினரும் ஒன்று சேர்ந்து ஜெயகாந்தனின் 80ஆம் ஆண்டு பிறந்த தின விழாவைப் பிரம்மாண்டமாகக் கொண்டாடி அவருக்குப் பெருமை செய்திருக்க வேண்டும். சிறந்த கலைஞனை வாழும் காலத்தில் கொண்டாடினால்தான் சமூகம் மனசாட்சியுடன் இயங்குவதாக ஏற்றுக்கொள்ளமுடியும். தமிழகம் பின்தங்கியிருக்கிறது. அது, மறைந்த “நடிகர்திலகம்” சிவாஜிகணேசனாகட்டும் அல்லது டி.எம்.சௌந்தர்ராஜனாகட்டும் அல்லது இப்போது “இசைஞானி” இளையராஜாவாகட்டும்... (இந்தப் பட்டியலில் பலர் உண்டு) அவர்கள் உயரத்துக்கு தமிழகம் கொண்டாடவில்லை. அதாவது சமூக இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்தும் கட்டமைப்புகள் அத்தகைய பண்பாட்டை முன்னெடுக்க வேண்டும். இங்கே அதுநடப்பதில்லை. வலது, நாம் அறிந்ததே. இடது மற்றும் திராவிடத்திலும்கூட சமன்பாடுகளை ஒட்டியே மாலைகள்! அன்றாடம் ஆடை அணிவதுபோல, போலித்தனமும்.

சங்கீத வித்வத் சபை நிகழ்ச்சி முடிகிறது. பிரமுகர்கள் முதல் சாதாரண வாசகர்கள் வரை வரிசையாகச் சென்று ஜெயகாந்தனுக்கு வாழ்த்தும் வணக்கமும் தெரிவிக்கிறார்கள். ஜெயகாந்தனின் கண்கள் பேரொளியுடன் விரிகிறது. ஒவ்வொருவரும் தங்கள் பெயரைச் சொல்கிறார்கள். பக்கத்திலிருந்தவர்கள் கூடுதலாக அறிமுகப்படுத்துகிறார்கள். எதிர் வினைக்கு ஜெயகாந்தனின் உடல்நிலை இடம் அளிக்காவிட்டாலும் கண்களாலேயே ஆமோதிக்கிறார். கூட்டம் மேலும் சூழ்கிறது. சற்றே விலக்கிச் சக்கர நாற்காலியில் அமரவைத்து, வெளியே வாகனம் நோக்கித் தள்ளி வருகிறார்கள். கூட்டம் அவரை மொய்த்துக்கொண்டு முன்னும் பின்னும் தொடர்கிறது. சக்கர நாற்காலியிலிருந்து சிரமப்பட்டு அவரைத் தூக்கி, கார் இருக்கையில் அமர வைக்கிறார்கள். அப்போதும் அவரது கரங்களைப் பிடிக்க எண்ணற்ற கரங்கள் முட்டி மோதுகின்றன. கைபேசியில் படம் எடுக்கிறார்கள். அவர் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒத்திக்கொள்கிறார்கள். காலைத் தொட்டு ஆசிர்வாதம் வாங்குகிறார்கள். ஒரு வழியாக கதவடைக்கப்பட்டு வாகனம் நகர்கிறது. ஜெயகாந்தன் சிரித்தவாறே கரம் சேர்த்து கண்ணாடி வழியே பார்க்கிறார். வெளியே எண்ணற்ற கரங்கள் கூப்பியவாறு.

நேற்று எழுதிக் குவித்த அல்லது இன்று எழுதித் தள்ளும் எந்த எழுத்தாளனுக்கேனும், தன்னால் திரண்டெழுந்த இத்தகைய மரியாதை சாத்தியமா? துருவித்துருவி யோசித்தாலும் யாரும் தோன்றவில்லை. உணர்ந்த மக்கள், சிறந்த படைப்பாளியைத் தக்க தருணத்தில், தக்கமுறையில் கொண்டாடுகிறார்கள்.

உணர் தமிழர் செயல் ஓங்கட்டும்! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு நகரம், ஒரு தாய், நான்கு பிள்ளைகள்

**'தி மோட்டார் சைக்கிள் டயரீஸ்' படத்தை இயக்கிய வால்டேர் சல்லெஸ், டேனியல் தாமசுடன் இணைந்து எழுதி இயக்கிய படம். பிராலியோ மன்டோவினி இப்படத்தின் இன்னொரு கதாசிரியர். 2008 கான் திரைப்பட விழாவில் குளுசோவாக நடித்த சான்ட்ரா சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றப் படம். சிறந்த இயக்குநர் விருதுக்கும் பரிந்துரைக்கப்பட்ட படம்.**

## 1

'சாவ் பாவ்லோ' பிரேசில் நாட்டின் மிகப் பெரிய நகரம். தென் அமெரிக்காவின் மிகப் பெரிய நகரமும் கூட. உலகிலேயே ஏழாவது மிகப் பெரிய நகரம். இருநூறு கி.மீ. நீளத்திற்கு சாலைகள் கொண்ட பரந்து, விரிந்த நகரம். இந்தியாவின் மும்பையைப் போல பிரேசில் நாட்டின் நிதித் தலைநகர் சாவ் பாவ்லோ. 2014 உலகக் போப்பை கால்பந்து போட்டியை விருந்தோம்பல் செய்த பிரேசில், இங்குதான் அதன் முதல் போட்டியை நடத்தியது. அரையிறுதிப் போட்டியும் இங்குதான் நடந்தது. சாவ் பாவ்லோ நகருக்கு ஒரு பெருமை உண்டு. பிரேசிலில் முதன்முதலாகக் கால்பந்து அறிமுகம் செய்யப்பட்டது இந்நகரில்தான். நகர மக்களின் மூச்சு, கௌரவம் எல்லாம் கால்பந்துதான். அம்மக்களின் பண்பாட்டு வாழ்வின் ஒரு அங்கம் 'கால்பந்து'.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் 1100 கோடி டாலர்கள் (இந்திய ரூபாயில் சுமாராக 65,000 கோடி) செலவு செய்து உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளைப் பிரேசில் அரசு நடத்துவது சரிதானா? என்கிற கேள்விகள் பிரேசில் தேசப் பக்தர்களால் எழுப்பப்பட்டது. வாதப் பிரதிவாதங்கள் ஓயாத சூழ்நிலையில் ஜூன் 12 துவங்கி ஜூலை 13 வரை போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன. போட்டிக்கு எதிராகப் போராட்டங்களும், வேலை நிறுத்தங்களும் நடப்பதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேசிலிலிருந்து செய்திகள் வந்தன. நம்மூர் சேனல்களில் இது அவ்வளவாக இடம்பெறவில்லை. போராட்டங்களைப் புறந்தள்ளிவிட்டு போட்டிகளை ஒளிபரப்பி காசு பார்த்தன கார்ப்பரேட் ஊடகங்கள். அரையிறுதிப் போட்டி முடிந்த உடனே இணையதளத்தில் அது பற்றி 356 கோடி "டிவீட்டு"கள் போடப்பட்டதாக ஒரு புள்ளி விபரம் கூறுகிறது.

சாவ் பாவ்லோ நடுத்தர மக்கள் மற்றும் ஏழைகள் நிறைந்த நகரம். செல்வமும் வறுமையும் அருகருகே வாழ்கின்ற நகரம். 2000 – 2010 காலத்தில் நிகழ்ந்த மிகப் பெரும் பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து அதிலிருந்து மீளப் போராடிக்கொண்டிருக்கும் நகரம். சென்ற பத்தாண்டின் இறுதியில் வேலை வாய்ப்பின்மை உச்சத்திற்குச் சென்றுவிட்ட நகரம்.

அங்கிருந்து வந்திருக்கும், நம் நெஞ்சை அள்ளும் ஒரு யதார்த்தமான சினிமா லின்ஹா டி பாஸே (லைன் ஆஃப் பாஸேஜ் என்பது இதன் ஆங்கில அர்த்தம்). ஆண்டு 2008. சாவ் பாவ்லோ நகரம். குளுசோ அந்நகரில் வசிக்கும் ஒரு தாய்; அவளுக்கு நான்கு பிள்ளைகள். நான்கு பிள்ளைகளும் நான்கு வெவ்வேறு கணவன்மார்களுக்குப் பிறந்தவர்கள். ஒரு மருத்துவரின் வீட்டில் சமையற்காரியாக வேலை செய்கிறாள் அவள். கர்ப்பமுற்றிருக்கும் குளுசோ தன் ஐந்தாவது குழந்தையைப் பெற்றெடுக்கத் தயாராகி வருகிறாள். ஒரு சிறிய வாடகை வீட்டில் வறுமைக்கு ஊடாகத் தன் நான்கு பிள்ளைகளையும் வளர்த்து வருகிறாள் அவள்.

நான்கு பிள்ளைகளில் மூத்தவன் டெனிஸ் ஒரு கூரியராக வேலை செய்கிறான். நகரில் சுமார் மூன்று லட்சம் பேர் கூரியர் வேலை செய்கிறார்கள். குறைந்த கூலிக்கு அவர்கள் போட்டி போட்டு வேலை செய்கிறார்கள். டெனிஸ்க்குத் திருமணமாகி மனைவியும், ஒரு குழந்தையும் இருக்கிறார்கள். டெனிஸின் மனைவி தன் தாயோடு வசித்து வருகிறாள். கணவன், பணம் கொண்டுவந்து தருவதில்லை என்ற கோபமும், வருத்தமும் உண்டு அவளுக்கு. "பிள்ளையின் மருத்துவச் செலவுக்குக்கூட பணம் தர வக்கில்லையா உனக்கு?" எனக் கோபமாய் வினவுகிறாள் அவள். டெனிஸ் வெட்கித் தலை குனிகிறான். கூரியர் வேலைக்குப் பயன்பட்டு வரும் தன் மோட்டார் சைக்கிளை விற்றாவது உனக்குப் பணம் தருகிறேன் என்று பதிலளிக்கிறான். "கிழிச்ச..." என்று அலட்சியப்படுத்தும் தன் மனைவியின் தழுவலுக்குகாக ஏங்குகிறான் அவன். அது கிடைக்காத போது தன் தம்பிகளிடம் கெஞ்சிக் கூத்தாடி பணம் வாங்கிக்கொண்டு, விபச்சாரியிடம் போகிறான். ஒரு நாள், ஒரு சாலை சந்திப்பில் சிக்னலுக்காக காத்திருக்கிறான். பைக்கில் வரும் இரண்டு இளைஞர்கள் ஒரு காரின் கண்ணாடியை உடைத்து, பணம் நிறைந்த பையைத் திருடிக்கொண்டு விரைவதைப் பார்க்கிறான். பணத்திற்காகத் தானும் இம்மாதிரி ஒரு திருடனாக மாற முடிவெடுக்கிறான்.

இரண்டாவது பிள்ளை டென்ஹோ ஒரு பெட்ரோல் பங்க்கில் வேலை செய்கிறான். குறைந்த ஊதியம் என்றாலும் அதை அம்மாவிடம் கொடுத்து விடுகிறான். அவனுக்கு இயேசு என்றால் மிகவும் பிடிக்கும். மனிதர்களை, அவர்களின் துன்பங்களிலிருந்து விடுவிக்க இயேசுவினால் மட்டுமே முடியும் என்று தீவிரமாக நம்புகிறான் அவன். ஓய்வு நேரம் முழுவதும் சர்ச் நடவடிக்கைகளிலேயே செலவழிக்கிறான். தன்னளவில் நேர்மையானவனாகத் தன்னை வைத்துக்கொள்ளப் போராடுகிறான். ஓசியில் பெட்ரோல் கேட்டுக் கெஞ்சும் அண்ணன் டெனிஸை விரட்டி அடிக்கிறான். அவன் கெட்ட நேரம், நள்ளிரவில் வரும் ஒரு வாடிக்கையாளன் துப்பாக்கி முனையில், தன் பைக்கின் பெட்ரோல் டேங்க்கை நிரப்பிக்கொண்டு மேலும் அவனிடமிருந்து பணத்தையும் பறித்துக்கொண்டு போகிறான். தன்னைச் சந்தேகிக்கும் முதலாளியிடம் தான் நல்லவன், நேர்மையானவன் என்று கதறுகிறான். முதலாளியோ நம்ப மறுத்து டென்ஹோவை வேலையிலிருந்து விரட்டி அடிக்கிறான். தன் நிலை குறித்து வருந்தும் அவன் பிரார்த்தனையின் மூலம் எத்தகைய அற்புதங்களையும் நிகழ்த்திவிட முடியும் என்று கூறும் பாதிரியாரை நம்புவதென முடிவெடுக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

மூன்றாவது பிள்ளை டேரியோ கால்பந்து ஆர்வலன். கால்பந்து விளையாட்டில் திறமைசாலியும் கூட. எந்நேரமும் கால்பந்து பற்றிய சிந்தனைதான் அவனுக்கு. எப்படியாவது, அரசு உதவி பெறுகிற கால்பந்து பயிற்சி வீரனாகிவிட வேண்டுமென்ற ஆசை அவனுக்கு. அவனைப் போலவே ஆயிரக்கணக்கான பேர் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு ஒரு தொழில் ரீதியான கால்பந்து விளையாட்டு வீரனாவது டேரியோவின் இறுதி லட்சியம். ஆனால், திறமை மட்டும் இருந்தால் போதாது, முன்னேறிச் செல்ல லஞ்சம் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது அரசின் விளையாட்டுத் துறையில். தாயும், அவன் சகோதரர்களும் அவனை ஒரு சிறந்த கால்பந்து வீரனாகப் பார்க்க ஆசைப் படுகிறார்கள். மகனுக்குத் தேவைப்படும் லஞ் சப் பணத்தைப் புரட்டித் தந்துவிடுவதாக தாய் உறுதி அளிக்கிறாள். அந்த நம்பிக்கையோடு டேரியோ, கால்பந்துக் குழுவை தேர்வு செய்யும் விளையாட்டுக்குப் போக முடிவெடுக்கிறான்.

நான்காவது பிள்ளை ரெஜினால்டோ பள்ளியில் படிக்கிறான். அவன் ஒரு நீக்ரோ தந்தைக்குப் பிறந்தவன். பள்ளி யிலும், வீட்டிலும், வெளியிடத்திலும் அதற்குரிய அவமரியாதை அவனுக்கு கிடைத்துக்கொண்டேயிருக்கிறது. குழந்தைத்தனம் மிக்க அவனிடமும் ஒரு ஆசை ஒளிந்திருக்கிறது. பஸ்ஸில் பயணம் செய்வது அவனுக்குப் பிடித்திருக்கிறது. அதைவிட அந்தப் பஸ்ஸைத் தானே ஓட்டிப் பார்க்க வேண்டுமென்ற அளவுகடந்த ஆர்வமிருக்கிறது. தன் தந்தை யாரென்று கேட்டுத் தாயை அவன் சதா நச்சரிக்கிறான். நீக்ரோ என்று கிண்டல் செய்யும் தன் அண்ணன்மார்களைச் சமாளிக்கிறான். சிறுவனாக இருந்தாலும், என்றைக்கேனும் ஒரு பஸ்ஸை ஓட்டிப் பார்த்துவிட வேண்டுமென்று முடிவெடுக்கிறான்.

தாய் குளுசோ தனக்குப் பிறக்கப் போகும் ஐந்தாவது குழந்தையின் தந்தை யாரென்று மறைக்கிறாள். தன்னைக் கேலியும், கண்டனமும் செய்கிற பிள்ளை



களை அன்போடு பொறுத்துக்கொள்கிறாள். தாயும், தந்தையுமாக இருந்து நான்கு பிள்ளைகளையும் பேணுகிறாள். அதற்காகப் போராடுகிறாள்.


இந்த ஐந்து பேரின் வாழ்க்கையின் ஊடாக நாம் பார்ப்பது சாவ் பாவ்லோ நகரத்தின் சமூகப் பொருளாதார யதார்த்தம். அந்நகர்வாழ் மக்களின் வாழ்க்கைப் போராட்டம். வறுமைக்கும் செல்வத்திற்குமான இடைவெளி. நிர்வாகத்தின் லஞ்ச ஊழல். வேலை யின்மையால் அவதியுறும் இளைஞர் பட்டாளம். போராட்டவாதிகளின் கோபம். அரசின் கையாலாகத்தனம்.

படத்தின் இறுதிக் காட்சிகளில் மூத்தவன் திருடுகிறான். அடுத்தவன் பிரார்த்தனைகளை நம்பி, பாதிரியாரைப் பின்தொடர்கிறான். அதற்கடுத்தவன் வெறியோடு கால்பந்து விளையாடுகிறான். இளையவனோ டெப்போவிலிருந்து, அங்கிருப்பவர்கள் அதிர்ச்சியுற, ஒரு பஸ்ஸைத் தானே டிரைவர் சீட்டில் அமர்ந்து, கிளப்பி, ஓட்டிக்கொண்டு போகிறான். பணத்துடன் கால்பந்து மைதானத்துக்கு கிளம்புகிறாள் தாய். அப்போது பார்த்து அவளுக்குப் பிரசவ வலி வந்துவிடுகிறது.

அப்புறம் என்ன நடந்தது? என்று இயக்குநர் படத்தை நீட்டிக்கவில்லை. தங்கள் கனவுகளைத் துரத்திச் செல்லும் நான்கு சகோதரர்கள் மற்றும் அவர்களின் தாயின் வாழ்க்கைப் பாட்டை ஒரு காவிய மாய்ச் சொல்லிவிட்டுத் திரை இருண்டு விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றும் எனக்கு உணவூட்ட ஆசைப்படும் அத்தை

கள்ளிகுளம் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு ஆறாவது செமஸ்டரின் இறுதிக் கட்டம். படிப்பை இதுவரையிலும் விளையாட்டாகவே கடந்து வந்திருக்கிறேன். கல்லூரியில் சந்திக்கும் வேளைகளில் எல்லாம் படிப்பின் முக்கியத்துவம் குறித்துப் பேச ஆரம்பித்திருந்தார் ஆசிரியர் பழநி. இன்று, அதே கல்லூரியில் முதல்வர் பொறுப்பும் வகித்து ஓய்வு பெற்றிருக்கிறார். அவருக்கு என்மேல் தணியாத பாசம் இருந்ததை இன்றும் என்னால் காணமுடிகிறது. என்னுடைய வளர்ச்சியைத் தன்னுடைய பிள்ளைகளின் வளர்ச்சியைப் போல எண்ணிப் பூரித்துப் போகிறார். ஆமந்துறையின் கீழூரில் தன் தாய்மாமன் வீட்டில் சிறுபிராயத்தில் தங்கிப் படித்தாராம். அந்தப் பாசம், சாதி, மத உணர்வுகளைத் தாண்டி அவரைச் சொந்தம் கொண்டாட வைக்கிறது. இந்தத் தலைமுறையினர் புரிந்துகொள்ள வேண்டிய உணர்வு அது. அந்தக் காலத்தில் நெய்தலிலும், மேட்டு நிலங்களிலும் இருந்த "உயிரக்காரன் உறவு" என்ற மாண்பு. சாதி என்ன சாதி மனிதமே மேலானது என்ற மகத்துவம்.

ஆறாவது செமஸ்டரில் எப்படியும் தேர்வாகிவிட வேண்டும் என்ற வெறியை என்னுள் விதைத்தவர் ஆசிரியர் பழநி. பகட்டுக்காய் பெரிய, பெரிய புத்தகங்களைத் தூக்கிவந்து பீத்து காட்டியது எவ்வளவு மடமை என்று உணர ஆரம்பித்தேன். வாழ்வு வசப்பட வேண்டுமென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தே ஆக வேண்டும் என்ற முனைப்பில் மா.பொ. குருசாமியின் பொருளாதாரம் சார்ந்த புத்தகங்களை மூட்டையாய் கட்டிவந்து ஆமந்துறை சேர்ந்திருந்தேன். புரிந்து படித்தால்தான் மூளையில் அது ஏறி உறைக்கும் என்ற உண்மை புரிந்திருந்தது.

ஆமந்துறை வீட்டின் மேல்மாடியில் வெகுகாலமாகவே பூச்சு கொடுக்காமல் சிவந்த செங்கற்கள் தெரிய, இரண்டு அறைகள் இருந்தன. விடுமுறை காலங்களில் அவைதான் எனக்கு உடற்பயிற்சிக்காக புகலிடம் அளித்த இடம். பெரிய பெரிய ஜிம்னாஸ்டிக்ஸ் வேலைகள் எல்லாம் இந்த மேல்மாடி அறையிலேயே நடந்தன. இரண்டு சிலம்பக் கம்புகளை ஒன்றாகக் கட்டி அதன் முனைகளில் பத்து பத்தாக காலிகட் ஓடுகள். எல்லாமே பளுதூக்கிச் செய்யும் உடற்பயிற்சிக்காக...

ஆமந்துறை பெலவேந்திரர் கோயிலுக்குக் கீழ்புறம் இருந்த வியாபாரியார் போத்தி வீட்டை இடித்தபோது கிடைத்த தேக்குமரங்கள் மேல் அறையில் குவிந்து கிடக்கும். அவைதான் 'பெஞ்ச்பிரஸ்' செய்வதற்கு உதவின. வழவுக்குள் இரண்டு தென்னை மரங்களுக்கு இடையில் மூங்கில் கிளைகள் கட்டி, அந்த மூங்கில்களின் மேல் 'ஹரிஸாண்டல் பார்' விளையாட்டு. இரவில் ஊறவைத்த கொண்டைக்கடலை விடிகாலையில் சாப்பிடுவதற்கு பக்குவமாய் இருக்கும். சாப்பிட்டு முடிய, நடையைக் கட்டினால் கிழக்கே மையவாடிக்கு பணியே சார்லசும், கென்னடியும் அக்கறையோடு என்னை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள்.

"எல, போலிசு வேலைக்கிபோவுனு மின்னா முட்டு தட்டக்கூடாது" என்பான் சார்லஸ்.

"ராத்திரி படுக்கும்போது ரண்டு முட்டிக்கும் எடையில ஒரு செங்கல்ல கட்டிற்று படுத்துறு" என்பான் கென்னடி.

நல்ல இளம் வெயிலில் ஓட ஆரம்பிப்போம், கிழக்காக ஓடினால் சுயம்புலிங்க சாமியின் கோவிலுக்கு பணியே உள்ள கிணற்றாங்கரை வரை போய் பிறகு திரும்புவோம். சுயம்பாய் எழுந்தருளி அருள் பாலிக்கும் அப்பன் நமச்சிவாயத்தை தரிசிக்க அந்த நாளில் தோனவேயில்லை. காலம் கனிந்திருக்கவில்லை. என்னோடு கூட ஓடிவரும் நண்பர்கள் இருவருக்குமே உடற்பயிற்சி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. கடல் தொழில் முறையே கடுமை யான உடற்பயிற்சியாய் இருந்தது. எந்தவொரு வெருண்ட மாசாவையும் எதிர்த்து ஆழிமேல் கம்பு போடக்கூடியவன் கென்னடி. எந்தப் பேய்க் காற்றாய் இருந்தாலும் இடது கை பாய்பருமலிலும், வலது கை மலுக்குக் கயிற்றையும் உறுதியாய் பிடிக்க இடது கால் அணியத்துத் துரத்திலும் வலது கால் அணியத்து வாரிக்கல் உச்சியிலும் நிலைக்க கம்பீரமாய் கட்டுமரத்தை கரைபிடிக்கக் கூடியவன். வழிவலைத் தொழிலா, பொழுது விடிய வலையோடு கட்டிக்கொண்டு கரைபிடிப்பான். சார்லஸ் ஒருமரத்து ஆள்தான் ஆனாலும் எந்த ஒரு அபாயச் சூழலிலும் அமைதியாய் அக்கறையாய் இருப்பான். கலகலப்பு அவன் கைவந்த கலை. ஆடி மாதக் கடலடியில் ஆழிமேல் வரும்போது அனைவருமே நெஞ்சைப் பிடித்துக்கொண்டு ஆத்தா ஓம்புள்ளையளக் காப்பாத்துன்னுட்டு வரும்போதும் எந்தச் சலனமும் இல்லாமல் இளநகையோடு ஒருமரத்து வலைமீது அமர்ந்திருப்பான்.

"மாப்புள, அன்னக்கி தூத்துக்குடி போயிற்று ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ்ல விடியத்தேரம் வந்தம் பாத்தியா அப்ப கோயிலுக்குள்ள எட்டிப் பாத்தம்."

"ஊர்ல யாருக்கும் தெரியுமால"

"காலம் பூராவும், அங்கி போட்டவன்வளுக்கு பயந்தே வாழச் சொல்லுற..."

"வேற வழி..."

"அந்தக் காலத்துல வெள்ளைக்காரம் பயங்காட்டுனாம் சரி. இப்ப நம்ம பயல்வளுமில..."

"அத வுடு, கதய சொல்லு."

"சரியான பசி, மண்டபத்துல நம்ம கணபதி பண்டாம் தூங்கி வழிஞ்சிகிற்று இருந்தாம்"

"..."

"நல்ல வாடக் கச்சாம் ஓடிக் கெடந்திச்சி. லேசா ஒரு தட்டுதாம் தட்டுனம் பதறிகிற்று எழும்புனாம். பசியில அவன் தந்தத எல்லாம் தின்னம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல நம்ம அதயெல்லாம் திங்கக் கூடாத."

"போறியா, நம்ம வீட்டுல சாப்புட்ட மாறியே இருந்திச்சி."

இந்துக் கோயில் பிரசாதமெல்லாம் துட்டுயின்னு இந்தச் சாமியார் சொல்லுற தெல்லாம் பொய்தான.

கணபதி கோயில் மூலஸ்தானத்துக்குள ஏன்னிய கூட்டிற்றுப் போனாம் மாப்புள.

எல, அங்க உள்ள போகக் கூடாதுன்ம்பாவள.

அதெல்லாம் விடிஞ்ச பொறவு. கோயில்ல ஒரு சனமில்ல, இவனும் பயந்தவம் பாத்தியா ஆபத்துக்கு பாவமில்ல யின்னுட்டாம். சாமிய குளிப்பாட்டி பொட்டு சந்தனமெல்லாம் வச்சி, பூ போட்டு அலங்காரம் பண்ணுறவர கூடவே நின்னம்.

...

திரும்பி வரும்போது பாத்தா, அங்கன ஓரத்துல ஒரு தொளவயும், மடுப்பெட்டியும் இருக்கி.

எல இது நம்ம பாட்டனுக்கு பாட்டம் பூட்டம் கும்புட்ட தெய்வம்.

ஓடிவந்த களைப்பில் வீட்டிற்கு வந்தால் ஒரு கோப்பை கஞ்சியும் தேங்காய்த் துவையலும். அது என்னவோ தெரியவில்லை ஆத்தா கைப் பக்குவத்திற்கு அப்படி ஒரு தனிச்சுவை. இன்று எத்தனையோ நட்சத்திர ஓட்டல்களில் சாப்பிட்டாகி விட்டது. ராயபுரம் வீட்டில் என் மனைவி சசியும் தலைகுத்தற நின்னு பார்க்கிறாள். ஆனாலும், ஆத்தாவின் கைப் பக்குவத்தை எட்டிப்பிடிக்க முடியவில்லை. சில நாட்களில் காரப்பொடி கருவாடு சுட்டு உரித்து வைத்திருப்பாள். நாக்கு இன்றும் நொட்ட விட்டுக்கொண்டேயிருக்கிறது.

ஆமந்துறையில் அந்தக் காலத்தில் மாங்காய் ஊறுகாய் என்றால் அதற்கு கரைக்குண்டியார் பொண்டாட்டிதான். ஆத்தாவின் கைப் பக்குவத்தில் எலுமிச்சை ஊறுகாயும் அமிர்தமாய் ருசிக்கும். சிறுபிராயத்தில் வறுமையில் வாடியபோது இரவில் கஞ்சித் தண்ணிக்கு கூட்டு கல்பாக்கி கிழவியின் எலுமிச்சை ஊறுகாய்.

பொழுது அடைந்த பிறகுதான் கல்பாக்கி கிழவியின் வீட்டில் ஊறுகாய் கிடைக்கும். திண்ணையில் பெரிய சீனக் களிமண் ஜாடியருகே அந்த இரவிலும் கூலிங்கிளாஸ் அணிந்தபடி, கையில் பெரிய அகப்பையோடு அமர்ந்திருப்பாள். வாய் முனுமுனுத்தபடியே இருக்கும்.

"செபமா படிக்கிற கெழவி?"

"யேசுவின் திரு இருதயமே என் நம்பிக்கை எல்லாம்..."

"ஊறுகாய் பானையின் மேல் வைக்கிறேன்னு சொல்லு."

"அடி சிரிக்கியுள்ள, பாருல?"

"கண்ணாடிய கழற்றிற்று பாரு கெழவி?"

"எல சத்தம் தீக்குருசியாரியில இருக்கு. இது எங்க மாமா ஓம்போத்தி கொழும்புலயிருந்து கொண்டுவந்து தந்தது."

"..."

"எங்க ஆத்தா தீக்குருசியார் பேத்தி வீரச்சந்திரா. சந்திரகுல வம்சம்."

நிமிர்ந்து உட்கார்ந்தாள் கிழவி.


"கோத்தா திற்று தந்து வுட்டாளா?"

"ஓங்கிட்ட ஓசியில வாங்கவா வந்தம்."

**கடல் தொழில் முறையே கடுமையான உடற்பயிற்சியாய் இருந்தது. எந்தவொரு வெருண்ட மாசாவையும் எதிர்த்து ஆழிமேல் கம்பு போடக்கூடியவன் கென்னடி. எந்தப் பேய்க் காற்றாய் இருந்தாலும் இடது கை பாய்பருமலிலும், வலது கை மலுக்குக் கயிற்றையும் உறுதியாய் பிடிக்க இடது கால் அணியத்துத் துரத்திலும் வலது கால் அணியத்து வாரிக்கல் உச்சியிலும் நிலைக்க கம்பீரமாய் கட்டுமரத்தை கரைபிடிக்கக் கூடியவன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“ரோசம் பொத்துகிட்டு வருத தீக்குருசிக்கி.”

“கெழவி நாலணாவுக்கு ரண்டு துண்டு போடுற” அகப்பையில் கிழவி கோலும் ஊறுகாய் சாறை நாக்கில் எச்சில் ஊறப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

“ஓங்கோத்தாளப் போயி எடையாக்குடிக்காரிகிட்ட மல்லுகட்ட சொல்லு... பெரிய யாவாரியார் பேத்தி.”

“கெழவி, எங்காத்தா கெட்டியவரம் பேத்தி.”

“எல எங்க ரெமி, ஓங்கெப்பம் கப்பக்காரம்.”

“அய்யாவுக்குத்தாம் ஊறுகா.”

“அடி கொப்பம்மொவள, மொதல்லே சொல்லுறதுக்கென்னல, எங்க ரெமி வந்திற்றானாக்கும்...”

“கெழவி, நாலணாத்தாம் தந்துவுட்டா ஆத்தா”

“லோட்டாவ கொண்டல, யாருல திற்று கேட்டா” பெரிய செட்டியவரம் பேத்தி எங்க ரெமி கால்தூசிக்கு காணமாட்டா”

“...”

“எல அய்யா, ரெமிகிட்ட சொல்லு, ஓங்க மாமி பெரிய முழு பருமா போட்டமின்னு.”

“...”

“ஒரு சீஸ் டப்பாவ எடுத்து வைக்க சொல்லு. அந்தக் காலத்துல கொழும்புல சாப்புட்டது. ஓங்கோத்தாளுக்கு என்ன தெரியும். அத எடுத்து குப்பயில போடுவா. கழுதைக்குத் தெரியுமா கரும்பு ருசி.”

எனக்குத் தெரிய ஆமந்துறையில் இந்த ஊறுகாய் வியாபாரத்திலேயே இரண்டு குமறுகளைப் படிக்கவைத்து கரையேத்திவிட்டாள் கிழவி.

கஞ்சி குடித்து ஏப்பம் விட்டால் கால்கள் தானாகக் கடற்கரைக்குக் கூட்டி வந்துவிடும். அந்தக் காலத்தில் ஓடியாடி விளையாடுமளவுக்கு ஆமந்துறையில் வடிவான கடற்கரை இருந்தது. கடல் பார்த்த வீட்டு முற்றங்களில் பூவரசு மரங்கள், காய்ந்த வெண் மணற்பரப்பில் பட்டறை ஏற்றிய கட்டுமரங்கள் அதன் பணியே அலையடிக்கும் ஈரம் பாய்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண். அலையூடே ஓடி கருவாலி நண்டும், ஆமைப்பூச்சியும் பிடித்து விளையாடுவோம். இன்று கரை அரித்து வீடுகளே விழுந்துவிட்டன, கடற்கரையைக் காணவில்லை. கனிம வளத்தை சூறையாடும் கும்பல் ஊர்க்காரர்களின் உதவியோடே கடற்கரையை கபளீகரம் செய்திருக்கிறது. தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறிந்தே, சுயநலத்தின் உச்சத்தில் கடற் கரையை காவு வாங்குகிறார்கள். இந்தக் கபளீகரத்துக்கு துணைபோவது நமது வாழ்வாதாரத்தையும், வாழுமிடத்தையும் அழிக்கிறதே என்பது தெரிந்தும் செய்கிறார்கள்.

நண்பகல் நேரம் வழிவலை மரங்கள் கரைபிடிக்க ஆரம்பிக்கும். காய்ந்து உரமேறிய கட்டுமரங்களைக் கரைப்பக்கம் நங்கூரத்தில் போடுவார்கள். நனைந்து ஊறிப்போன மரங்கள் பட்டறையில் ஏற்றப்படும். கொம்புத்தடி போட்டு அணியத்தையும், பிந்தலையையும் மணல்மேல் நகர்த்திக் கொண்டு வருவோம். பலசாலி என அறியப்பட்டவன் ஒருமரத்தின் கீழே நின்றபடி மதுகு கொடுத்து தூக்குவான், பார்ப்பதற்கே பிரமிப்பாய் இருக்கும். பேச்சும் சுவாரஸ்யமெடுக்கும்.

"ஊழிமீன் பாய்ச்சல பாத்தியரா தாழையார."

"குறுக்கால குறுக்கால பாஞ்சி, பாஞ்சி வெளையாடிச்சிவள."

"முந்தா நாளு இப்புடித்தாம் வலபோட்டுக் கெடந்தோம். கடலு நல்ல வத்தக் கொளம் போல கெடந்திச்சி. லாரன்ஸ் கும்பாதிரி தூண்ட போட எரைமீன் இல்லின்னு கைய பெனஞ் சிகிட்டு நின்னாறு... தண்ணிக்கிள ரண்டு மாவுளா மரத்துத சுத்தி வெளையாடிக்கிட்டு நின்னுச்சுவ. என்ன நெனச்சிச்சிவள தெரியில திடீர்னு குறுக்கால வந்து பாஞ்சிச்சி"

"காதல் ஜோடியா இருக்கிம், முத்தங் குடுக்க துள்ளியிருக்குமின்னு நெனக்கிறம்"

"நம்ம மரம் நல்ல நடுவட்டி விருஞ் சதா, மேல போன ரண்டும் பொத்து, பொத்துன்னு ஒருமரமா வுழுந்திற்றுவ."

"அப்புடியே தூக்கி துண்டம் போட்டுறுப்பான லாரன்ஸ்"

"மனசே கேக்கயில்ல பாத்துக்கிறும்."

இளைக்க இளைக்க கட்டுமரங்களைப் பட்டறை ஏற்றினால் வலிப்பங்காக மடி நிறைய குதிப்பும், குறுவாவரும் வெள்ளைகுறிமீனுமாய் தருவார்கள். வீட்டுக்கு கொண்டுவந்து ஆத்தாவிடம் தந்தால் பொரியலும், அவியலும் குழம்புமாய் வீடே மணக்கும்.

விளையாட்டு, உடற்பயிற்சி, படிப்பு என ஆறாவது செமஸ்டரில் மொத்தமாய் பத்து பாடங்களை எழுதி நல்ல மதிப்பெண்ணோடு தேர்வாகியிருந்தேன். படிக்க வேண்டும் என்ற ஆசையே அப்போதுதான் துளிர் விடுகிறது. இதே நிலமைதான் இன்றும் பெரும்பாலான கடற்கரையூர் இளைஞர்களிடம் இருக்கிறது. என்ன படிக்கிறோம், எதற்காக படிக்கிறோம் எப்படி படிக்கிறோம் என்ற எந்த உணர்வும் இல்லாத ஒரு படிப்பு. எட்டு முடித்தால், ஒன்று சாமியாருக்கு இல்லையா கப்பலுக்கு, இல்லையா வாத்தியாருக்கு அதுவும் இல்லையா, இருக்கவே இருக்கிறது கடல். சமவெளிப் பகுதியில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்ற எந்த அக்கறையும் யாருக்கும் இருந்ததேயில்லை. சமூகப்பணி ஏற்றிருக்கும் மதமும் அதை வழிநடத்துபவர்களும் கடற்கரை மக்களை ஒரு வகையான மந்த நிலையில் வைத்திருப்பதிலேயே முனைப்பாய் இருக்கிறது. காணிக்கைப் பெட்டிகளை உற்று உற்றுப் பார்த்தே வாழ்க்கை நடத்தும் இவர்கள் மக்கள் விழிப்படையாமல் இருக்க வேண்டும் என்பதிலேயே மிக விழிப்பாய் இருக்கிறார்கள்.

ஒரு நாள் பங்கு ஆலயமணி அபாயமாய் ஒலிக்கிறதே ஏதாவது கடல் சாவா, பக்கத்து ஊரோடு சண்டையா, தீப்பிடிக்கிறதா என்று ஓடினால் பங்குச் சாமியார் பங்குளாவின் முன்னால் ஏகத்துக்கு கூட்டம். வெளியே திமிறிக்கொண்டு வந்த, கென்னடி சொன்னான்.

"மாப்புள, பங்குச் சாமியாரு வெளிநாட்டுக்கு போனாருல்ல, சுங்க வரி கெட்டாம நெறைய சாமான்வள கொண்டாந்துற்றாராம். அத புடிக்க அதிகாரிமாரு வந்திருக்கான்வளாம்."

"அப்புடி போடு அறுவாள. போதன யெல்லாம் நமக்குத்தான."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓடிவந்த களைப்பில் வீட்டிற்கு வந்தால் ஒரு கோப்பை கஞ்சியும் தேங்காய்த் துவையலும். அது என்னவோ தெரியவில்லை ஆத்தா கைப் பக்குவத்திற்கு அப்படி ஒரு தனிச்சுவை. இன்று எத்தனையோ நட்சத்திர ஓட்டல்களில் சாப்பிட்டாகி விட்டது. ராயபுரம் வீட்டில் என் மனைவி சசியும் தலைகுத்தற நின்னு பார்க்கிறாள். ஆனாலும், ஆத்தாவின் கைப் பக்குவத்தை எட்டிப்பிடிக்க முடியவில்லை.**



"நம்மதாம் இப்புடி பேசுறோம். அங்கன பாரு, நாலு அடுக்கு பாதுகாப்பு போட்டுறுக்கான்வ. அதியாரிமார அடிக்க வேற போறான்வ."

"தப்பு செய்தவன புடிக்க அதியாரி வந்திருக்கலாம். இவன்வளுக்கென்ன..."

"அவுரு என்ன செய்தாலும் அங்கி போட்டுருக்கார."

"இவன்வள திருத்த முடியாதுனு நெனக்கிற"

"கண்டிப்பா முடியும் மாப்புள. நம்ம அய்யாமாரு இப்புடி பேசுனான்வளா... நம்ம பேசுறம..."

"அப்ப நம்ம புள்ளய தட்டிக் கேக்குமிங்குறியா?"

"கண்டிப்பா மாப்புள, அதுல சந்தேகமே இல்ல."

ஆறாவது செமஸ்டர் தேர்வு முடிவுகள் வெளியாகி தேர்வும் பெற்றிருந்தேன். அய்யா 'தூத்துக்குடி போய், தோணி வேலைக்கு போ' என்கிறார். கப்பல் வேலைக்கு வரவே கூடாது என்றார். பயமா, பாசமா எது என்று தெரியவில்லை. ஆத்தாவோ அரை அணா என்றாலும் அரசாங்க உத்யோகம் என்கிறாள். தூத்துக்குடிக்குப் போனால் எங்கே மாமி வீட்டோடு ஐக்கியமாகி விடுவானோ என்ற பயம். அய்யாவின் உடன்பிறந்த சகோதரியைத் தூத்துக்குடியில் தாய்மாமன் மகனுக்கே ஆமந்துறையே மெச்சும்படி மணம் முடித்து வைத்திருந்தார். அவர்களுக்கு ஒரு செல்ல மகள். எங்கே இவன் அங்கே போக அவளைப் பார்க்க பஞ்சும், நெருப்பும் பற்றிக் கொள்ளக்கூடாது என்று பரிதவித்தாள் ஆத்தா. அவளுக்கு அவள் பயம். முறை பெண்தான் ஆனாலும் ஆத்தாவுக்கு அய்யா வழி உறவுகள் வந்து, திரும்பவும் தன்னை பாடாய் படுத்திவிடக் கூடாது என்ற கலக்கம். இன்னும் ஏதாவது உறவினர் நிகழ்வுகளில் சந்தித்தால் அத்தையார் வந்து பக்கத்தில் அமர்ந்து கட்டிப்பிடித்து முத்தம் தருவாள், வாய்ப்பிருந்தால் வாயில் ஒரு கவளமாவது ஊட்டி விடுவாள் இல்லாவிட்டால் அவள் மனது ஆறவே ஆறாது.

"எம்புள்ளயத்தாம் கெட்டிக்குடுக்க கொடுப்பின இல்ல, எம் மருமெவனுக்கு ஊட்டி வுடுற பாக்கியமாவது இருக்க..."

வாய் வார்த்தையாக இருந்தாலும் பாசப் பரவசம் வந்து மனசெல்லாம் வருடி நிற்கிறது. ஆத்தாவுக்கு ஒரு ஞாயம் என்றால் அத்தையாருக்கும் அய்யாவுக்கும் இன்னொரு ஞாயம். அவரவர் செய்தது அவரவர்க்கு சரியாக இருந்திருக்கிறது. இவர்களா இப்படியெல்லாம் செய்தார்கள் என கலக்கமடைய வைக்கிறது உறவு. இன்று ஓரளவு தெளிவு பெற்ற காரணத்தால் பிரித்துப் பார்க்க முடிகிறது. நல்லது கெட்டது என என்ன இருக்கிறது. எல்லாமே அலகிலா விளையாட்டுடையவன் திருவிளையாடல்களே எனக் காலம் பதில் சொல்லிக் கடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

ஆட்டிற்கு பெயர் சூட்டும் தகறாரில்
சிங்கத்திற்கும் புலிக்கும் சண்டை வந்து
ஆடு கொல்லப்பட்டது
ஆடு ஊராட்சித் தலைவராகிறது என்பதால்
பெயர் முக்கியமென பேசப்பட்டது
ஆட்டிற்கு பெயர் தேவையில்லையென்ற
கருத்து தூக்கியெறியப்பட்டது
இதுவரை புலிதான்
தலைவராக இருந்திருக்கிறது
காட்டில் ஜனநாயகம் பெருகிவிட்டதால்
நாட்டாண்மையை
விட்டுக்கொடுக்க வேண்டுமாம்
சலித்துக்கொண்டது
பரம்பரை நாயகம்
சிங்கம் சிறுத்தை
யானையெல்லாம் இருக்க
ஆடு தலைவனாம்
ஜனநாயகத்தைக் கருவறுக்க நாள் குறித்தன
நரியும் கழுதைப்புலியும்
பசிக்கு மேய்ச்சல் நிலம் தேடிப் போன
ஆட்டை யாருக்கும் தெரியாமல்
தின்று ஏப்பமிட்டன
தலைவரை காணொமென்று
முயல்கள் மனு கொடுத்தன
பதவிக்கு பயந்து
ஓடிவிட்டதாக சாட்சி சொல்லின
தின்றுக்கொழுத்த நரியும் கழுதைப்புலியும்
இது வரை காணாமல் போன
ஆடுகளின் எண்ணிக்கை
லட்சத்தை தாண்டிவிட்டது
இருப்பினும் காத்திருக்கிறது புதிய ஆடு
காலியான
தலைவர் பதவிக்கு போட்டியிட.
ஆடுகள் வேட்டையாட
கற்றுக்கொள்ளும் போது
அதன் பெயர் மாறிவிடக்கூடும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2

மேஜை மீது
விரிக்கப்பட்ட செய்தி தாளில்
அந்தச் சிறுமி
தொங்கிக்கொண்டிருக்கிறாள்
அவள் தொங்கட்டும்
அது அவளுக்கு வழங்கப்பட்ட
கருணை
கொல்வது கருணைதான் சாதியத்திற்கு
சமத்துவத்திற்கு அது துயரம்
நான் குருடனல்ல
தப்பித்துக்கொள்ள வழியுமில்லை
மூடி வைத்தாலும்
கிழித்து எறிந்தாலும்
அந்தப் பெண் எதிரே நிற்கிறாள்
அவளுக்கான நீதி என்னிடமில்லை
இதே போன்ற துயரங்கள்
என் அறையில்
அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன
சிலது இன்னும் பிரிக்கப்படாமல் இருக்கிறது
வெளியே தள்ளி சாத்த முடியாது
இரண்டாயிர வருடப் பழமைகளால்
தள்ளி சாத்தப்பட்டவள்தான் அவள்
கருணை வழியும் விழிகளை தேடுகிறாள்
எல்லா கண்களும்
கொள்ளிக் கண்கள் இல்லையென்றாலும்
சூரியனை மண்டைக்குள்
ஒளித்துக்கொண்டலைகிறார்கள்
நான் துயரங்களின் காட்டுக்குள்
அவளது துயரத்தை
புதைத்து வைக்கின்றேன்
இனி துயரங்களைப் புதைக்க இடமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதும்... திருவாளர், கண்ணப்ப முதலியார்!

தேர்வு முடிவுகளுக்காகக் காத்திருந்த காலம். கீழக்கரையின் வெயிலோடு சேர்ந்து என் நாட்கள் கழிந்தன. மாலைகளில் கடற்கரையில் நண்பர்களோடு பொழுதுபோகும். கீழக்கரை கடற்கரையில் உட்கார்ந்து பேசும் இடங்களாக மணல்வெளி இல்லை. கடற்கரை என்பது வேலிகளை ஒட்டிய குறுகிய இடைவெளிதான். வேலி வரை அலைகள் மோதித் திரும்பும். சுங்க அலுவலகத்தை ஒட்டிக் கடலில் ஒரு சிறு பாலம். கடல்நீரில் தூண்களால் தாங்கப்பட்ட ஒரு சிமெண்ட் வெளி அது. அதை ஒட்டிச் சிறுசிறு படகுகளும், இயந்திரப் படகுகளும் மிதக்கும். கடலின் மறுகரைகளாகச் சில தீவுகள் தெரியும். அப்பா தீவு, முசல் தீவு... என்ற பெயர்களில். அந்தத் தீவுகளுக்குப் போக வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஆனால் இன்றுவரை நிறைவேறவில்லை. அந்தத் தீவுகளைக் கடலின் மார்பில் 'கறுத்த மச்சங்கள்' என்று 'கானல் வரிகள்' என்ற கவிதையில் பதிவு செய்திருந்தேன். என் தூக்கத்தில் ஒரு படகில் பாய்மரம் விரித்துப் போவது போலக் கனவுகள் வரும். இளம்பிறையின் கூர்முனையை உரசியபடி பாய்மரம் செல்லும், ஆனால் இதுவரை அத்தீவின் கரையில் கனவிலும் என் கால் பதிந்ததில்லை.



பாம்பன், இராமேஸ்வரம் எல்லாம் தீவுகள்தாம். ஆனால் அந்த அப்பா தீவும் முசல் தீவும் என் கனவுகளாகிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் இராமநாதபுரம் செல்லும் சாலை கறுத்து நீண்டு கிடக்கும். வலது பக்கத்தில் பரந்த சுடுகாடு. அதை ஒட்டியே ஒரு கீற்றுக் கொட்டகையும் இருந்தது. திரைப்படங்களுக்குப் போகாத பொழுதுகளில் அந்தக் கொட்டகையை ஒட்டி இருக்கும் வெளியில் நண்பர்களோடு வட்டமாக உட்கார்ந்து அரட்டை அடிப்போம்.

சில மாலைகளில் இராமநாதபுரம் செல்லும் சாலையில் தொடர்ந்து நடப்பதுண்டு. இருபுறமும் பனை மட்டைகளால் ஆன வேலிகளுக்குப் பின்னர் அடர்ந்த தோப்புகள் உண்டு. ஒரு தோப்பில் மட்டும் அதன் பெரிய வாசலில் 'அனுமதி பெற்று உள்ளே வருக' என்று எழுதப்பட்டிருக்கும். அதற்குள்ளே போய்ப் பார்த்ததில்லை. நீண்டு செல்லும் அச்சாலையில் நடந்தால் இடதுபக்கம் முனுசாமி கோயில் வரும். விழுதுகள் ஊன்றிக் கிளைவிரித்துப் பெரிய ஆலமரம் நிற்கும். அந்த மரத்தடியில் மீசையும் கத்தியுமாய் முனுசாமி தம் பரிவாரங்கள் சூழ நிற்பார். அக்கோயிலையும் கடந்து சென்று வலதுபக்கம் திரும்பினால் சலவையாளர் குளத்துறை வரும். எங்கள் மாலை நடையில் அத்துறையை நெருங்கும்போது சலவையாளர்கள் பொதிகளைக் கழுதைகளில் ஏற்றி ஊர் திரும்பிக் கொண்டிருப்பார்கள். மேற்கொண்டு நடந்தால் பாலையாற்றுப் பாலம். சாலையின் இருபுறமும் சிமெண்டுக் கட்டைகளாய் நீண்டு கிடக்கும். அதில் உட்கார்ந்து சிகரெட் புகைப்போம். நண்பர்கள் அரக்காசு முகைதீன், மீரா லெப்பை, ஜமால் முகைதீன், மன்சூர், நான் என்று ஐந்து பேரைக் கொண்டது எங்கள் வட்டம். ஊரைவிட்டு வெகு தொலைவு வந்து ஒரு 'தம்' அடித்தால் வீட்டாருக்குத் தெரியாது என்ற ஒரு நம்பிக்கை. ஆனால் மன்சூர் புகையடிக்கமாட்டார். பாலத்திலிருந்து வீட்டுக்குப் புறப்படும் போது 'அசோகா பாக்குத் தூளை' அசைபோட்டு வாய் மணக்கும். இப்படி நல்ல பிள்ளைகளாக வீடு திரும்புவோம். பள்ளி நாட்களில் மாலையில் அண்ணன் சிலம்பாட்டம் சொல்லித் தருவார். சில சமயங்களில் அத்தாவும் மேற்பார்வையிடுவார்.

கல்லூரி நாட்களில் அத்தா இல்லை. அண்ணனும் திருப்பாலைக்குடிக்குப் போய்விட்டார். இந்த நாட்களிலேயே என் தெருவட்டமும் தேய்ந்து போய்விட்டது. நண்பர்களில் சிலர் சென்னை, புதுச்சேரி போன்ற நகரங்களில் கடைவைக்கப் போய்விட்டார்கள். ஜமால் முகைதீன் துபாய் போய்விட்டார். பல நாட்களில் மாலைகளில் நான் என் தனிமையுடன் கடற்கரையிலும் சாலை வெளியிலும் அலைந்து கொண்டிருப்பேன். நண்பர்களோடு சேர்ந்து சுற்றியபோதும் என் தனிமையிலும் என் மனத்தில் இனி என்ன செய்வது என்ற கேள்வி துரத்திக்கொண்டிருக்கும்.

என்னை மேற்கொண்டு படிக்க வைப்பதற்கு அண்ணனிடமும், பெரிய மச்சானிடமும் வசதி இல்லை. அதனால் முதுகலை (எம்.ஏ.) வகுப்பில் சேர்வது என்ற சிந்தனைக்கே நான் இடம் தரவில்லை. ஏதாவது வேலை பார்க்க வேண்டும். எங்கள் ஊர் வழக்கப்படி கடைகண்ணிகளுக்குப் போய் நிற்கலாம். ஆனால் எனக்கு வணிகத்தில் நாட்டமில்லை.

**சாலையின் இருபுறமும் சிமெண்டுக் கட்டைகளாய் நீண்டு கிடக்கும். அதில் உட்கார்ந்து சிகரெட் புகைப்போம். நண்பர்கள் அரக்காசு முகைதீன், மீரா லெப்பை, ஜமால் முகைதீன், மன்சூர், நான் என்று ஐந்து பேரைக் கொண்டது எங்கள் வட்டம். ஊரைவிட்டு வெகு தொலைவு வந்து ஒரு 'தம்' அடித்தால் வீட்டாருக்குத் தெரியாது என்ற ஒரு நம்பிக்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியனாவது, எழுதுவது, அரசியலில் ஈடுபடுவது என்று யோசனை நீண்டது. அதனால் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் தமிழாசிரியர் வேலைக்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தேன்.

இளையான்குடி உயர்நிலைப் பள்ளியில் வேலை கேட்போம் என நெருங்கிய உறவினரும் இளையான்குடிக்காரருமாகிய முகமது மைதீன் என்னைக் கூப்பிட்டார். அன்று மாலையில் பள்ளித் தாளாளரைச் சந்தித்தோம்.

ரொம்ப இளைஞனாய் இருந்த எனது தோற்றம் அவருக்கு நம்பிக்கை அளிக்கவில்லை. என்னை உற்றுப் பார்த்துவிட்டு கேட்கத் தொடங்கினார்.

"வகுப்பிலே ஒரு பையன் கலாட்டா பண்றான்னு வச்சிக்க, நீ எப்படி சமாளிப்பே?"

"அந்தப் பையனைக் கூப்பிட்டு அவன் பிரச்சினை என்ன என்று கேட்பேன்" என்றேன்.

"உனக்கு எக்ஸ்பீரியன்ஸ் இல்லாததனால் இப்படிச் சொல்றே...என்ன செய்யணும் தெரியுமா?" என்றார்.

என்ன செய்வது என்பதுபோல் அவரைப் பார்த்தேன்.

"அவனுக்குத் தெரியாத ஒரு கேள்வியைக் கேட்டு அவனை மடக்கணும்" என்றார்.

கற்பிப்பதில் இப்படிப்பட்ட முறையெல்லாம் இருக்கா? என்ற வியப்பில் அவரைப் பார்த்தேன்.

சிறிது நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டுவிட்டோம்.

மாணவர்களைக் கேள்வி கேட்டோ அச்சுறுத்தியோ அடக்கி வைப்பதைக் கல்விமுறை என்று என்னால் ஏற்க முடியவில்லை. ஏனெனில் அப்பொழுதுதான் முடித்திருந்த என் கல்வி நாட்களில் ஆசிரியர்களுடன் உரையாடி இருக்கிறேன். எனக்குக் கற்பித்துத் தந்த பெரும்பாலான ஆசிரியர்கள் என்னைத் தெளிவுபடுத்த முயன்றார்களே தவிர அடக்கி வைக்க முனையவில்லை. கல்வியில் உரையாடல் அவசியமானது, வகுப்புகள் ஜனநாயகப் பூர்வமாக இயங்குதல் வேண்டும் என்ற சிந்தனையில் தெளிவு பெற, எனக்கே நீண்ட நாட்களாயின. அதிகாரத்தில் இருப்போருக்கு இந்தக் கல்விமுறை தெரியாது என்பதை என் அனுபவத்தில் உணர்ந்தேன்.

சென்னை இராயப்பேட்டை புதுக்கல்லூரியில் எனக்கு நேர்முகத் தேர்வுக்கு வரச்சொல்லி அஞ்சலட்டை வந்தது. அது *1966*, ஆகஸ்டு மாதம். சென்னை புறப்படத் தயாரானேன்.

சென்னையில் என் நண்பர்கள் செ.நூ.மு. அகமது சம்சுதீன், செ.நூ.மு. ஹுசைன் அப்துல் காதர் ஆகியோரின் அண்ணன் செ.நூ.மு. சேகு நூர்தீன் வணிகம் செய்து வந்தார். சம்சுதீனும், ஹுசைனும் பள்ளியில் என் வகுப்புத் தோழர்கள். அவர்கள் வீட்டுக்கு என் தந்தைதான் குடும்ப வைத்தியர். என்மீது அவர்கள் குடும்பத்தினரே அன்பாக இருப்பார்கள். சென்னையில் சேகுநூர்தீன் அவர்களைச் சந்தித்து, வேலையில் சேர்வதற்குப்

**எனக்குக் கற்பித்துத் தந்த பெரும்பாலான ஆசிரியர்கள் என்னைத் தெளிவுபடுத்த முயன்றார்களே தவிர அடக்கி வைக்க முனையவில்லை. கல்வியில் உரையாடல் அவசியமானது, வகுப்புகள் ஜனநாயகப் பூர்வமாக இயங்குதல் வேண்டும் என்ற சிந்தனையில் தெளிவு பெற, எனக்கே நீண்ட நாட்களாயின. அதிகாரத்தில் இருப்போருக்கு இந்தக் கல்விமுறை தெரியாது என்பதை என் அனுபவத்தில் உணர்ந்தேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்துரை செய்யக் கோருவது என்று தீர்மானித்தேன். நான் போனபோது என் நண்பரும் உறவினருமான நைனாமுகமது சென்னையில்தான் இருந்தார். அவருடன்தான் தங்கி இருந்தேன். நானும் நைனாமுகமதும் சேகுநூர்தீன் அவர்களைச் சந்திக்கச் சென்றோம்.

சேகுநூர்தீன் அவர்களைக் 'காக்கா' என்றுதான் அழைப்பேன். அண்ணனைக் காக்கா என்றழைப்பது ஊர் மரபு. அவர் என்னைப் பார்த்துக் கேட்டார். "இந்த வேலையிலே உனக்கு எவ்வளவு சம்பளம் கிடைக்கும்?"

நான் கண்களை விரித்து வைத்துக் கொண்டு "இருநூத்தி அம்பது ரூபாய் அளவுக்கு வரலாம்" என்றேன். 1966இல் அது குறைசொல்ல முடியாத சம்பளம்.

காக்கா என்னைப் பார்த்துப் புன்னகைத்தார். "அது உன் பாக்கெட் மணிக்கு ஆகுமா?" என்றார்.

"இந்த வேலைக்கு அந்த அளவுதானே கிடைக்கும்" என்றேன்.

"பேசாம எங்க கம்பெனிலே வந்து சேரு.. ஒங்க குடும்பம் ரொம்பக் கஷ்டப்படுற குடும்பம். முன்னேறதுக்கு உள்ள வழியைப் பாரு" என்றார்.



சிறிது நேரம் அமைதியாக இருந்தேன். கம்பெனியிலே சேர்ந்தால் கை நிறையச் சம்பாதிக்கலாந்தான். ஆனால் என் இலக்கிய முயற்சி... என் அரசியல்... அவரிடம் சொன்னேன். "வியாபாரம் எனக்கு வேண்டாம். இந்த வேலையிலேயே சேர்த்து விடுங்க".

"நீ, சொன்னா கேக்க மாட்ட.... சரி வா" என்று எங்களை கிழக்கரையைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞரிடம் அழைத்துச் சென்றார். என் மறதியை எப்படிக் கடிந்துகொள்வது என்று எனக்குத் தெரியவில்லை. என்னை, அந்த வேலைக்குப் பரிந்துரை செய்த அந்த நல்ல மனிதரின் பெயர் இப்போது என் நினைவுக்கு வரமாட்டேன் என்கிறது.

அப்போது புதுக்கல்லூரியின் முதல்வராய் இருந்த மௌலான அப்துல் வகாப் அவர்களிடம் என்னைப் பரிந்துரை செய்ததாக 'புகாரிசாப்' என்று அழைக்கப்பட்ட அவர் புகழ்பெற்ற வரலாற்றாசிரியர், அரபியில் புலமை மிக்கவர்.

என்றாலும் நேர்முகத்தேர்வு நடைபெற்றது. பேராசிரியர் கண்ணப்ப முதலியார், என்னிடம் தொடர்ந்து கேள்வி கேட்டபடி இருந்தார். நானும் பதில் சொல்லியபடி இருந்தேன். மேற்கொண்டு கேட்க முயன்ற கண்ணப்ப முதலியாரை இடைமறித்தார் புகாரி சாகிபு.


"It is enough, Mr. Kannappa Mudaliar" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'THE GYPSY GODESS'

# காற்றில் கலந்த கதறல் ஒலி



இலண்டனிலிருந்து வெளிவரும் ஆங்கில இதழ்களில் விரிவான திறனாய்வுக்கு உள்ளாகிப் பாராட்டையும் பெற்றிருக்கிறது மீனா கந்தசாமியின் ஆங்கிலப் புதினம் (நாவல்) *'The Gypsy Godess'*

இருபத்தொன்பது அகவையில் இத்தனை ஆற்றலா? என்று வியந்திருக்கிறார்கள். மீனா கந்தசாமியின் முதல் புதினம்தான் இது என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அகவை சிறியதாய் ஆற்றல் பெரியதாய்க் கொடிகட்டிப் பறக்கிறார் மீனா.

மீனா கந்தசாமியின் பேராற்றலுக்கு அவர் குடும்பமே விதையும் வேரும். இளவேனில் அதுதான் மீனாவின் பெயர். தங்கை இளந்தென்றல். நான்கு பேரும் முனைவர் பட்டம் பெற்றவர்கள். அதிலும் மீனாவின் அம்மா வசந்தா கந்தசாமி உலகறிந்த கணித மேதை. அறிவுக்கடல் ஒன்றில் பொங்கி நிமிர்ந்த இலக்கியப் பேரலையாய் மீனாவைப் பார்க்கிறோம்.

*1968* டிசம்பர் *25*இல் (ஏசு பிறந்தநாள்) தஞ்சை கீழ்வெண்மணியில் நாற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நான்கு சேரி மக்கள் துடிக்கத் துடிக்க எரித்துப் படுகொலை செய்யப்பட்ட கொடிய கதைதான் மீனா கந்தசாமியின் *'The Gypsy Godess'*. சரி, கீழ்வெண்மணி படுகொலைக்கும், ஜிப்சி தேவதை என்னும் மீனாவின் தலைப்புக்கும் அப்படி என்ன பொருத்தம்? மீனாவே எழுதுகிறார்.

தலைப்பை இப்படி வைக்கலாமா? அப்படி வைக்கலாமா? என்றெல்லாம் தடுமாறினேன். எங்கள் குலதெய்வம் குறத்தி அம்மன் நினைவுக்கு வந்தாள். ஊரைவிட்டு, குடிசையை விட்டுக் குழந்தைகளோடு ஏழு குறத்திகள் வெளியூர் போனார்கள். சில தடங்கலால் ஓர் இரவு அவர்கள் வெளியூரிலேயே தங்க வேண்டியதாயிற்று. மறுநாள் அவர்கள் ஊர் திரும்பியதும் முதல் இரவு குடிசை திரும்பாத குற்றத்துக்காக அந்தப் பெண்கள் உயிரோடு எரித்துச் சாம்பலாக்கப்பட்டார்கள், என்பது மீனா கந்தசாமியின் குலதெய்வம் பற்றிய கதை. 'குறத்தி அம்மன்' சினம் மிக்க தெய்வமாகப் போற்றப்படுகிறாள்.

கீழ்வெண்மணி நிகழ்வுக்கு குறத்தி அம்மனைக் குறியீடு ஆக்கியிருக்கிறார் மீனா. *'The Gypsy Godess'* பொருத்தமான தலைப்புத்தான்.

புதினத்தில் வரும் பெயர்கள், ஊர்கள், நிகழ்வுகள் யாவும் கற்பனை என்னும் பாக்கினை உடைத்து மீனா கந்தசாமியின் புதினத்தில் வரும் பெயர்கள், ஊர்கள், நிகழ்வுகள் யாவும் உண்மை என்பதைப் பார்க்கிறோம். வரலாறு இலக்கியமாகி இருக்கிறது. ஒரு வெறும் வரலாற்றுப் பதிவாக இருந்திருந்தால், அது ஒரு நிழற்படமாகவே இருந்திருக்கும். அதை ஓவியமாக்கி இருக்கிறார் மீனா.

சார்லஸ் டிக்கன்ஸ் எழுதிய இரு நகரங்களின் கதை *(The Tale of Two Cities)* பிரெஞ்சுப் புரட்சி பற்றிய வரலாற்றுப் புதினம்தான். ஆனால், அதில் வரும் சிட்னி கார்ட்டனும், டானேயும், லூசியும் கற்பனைப் படைப்புக்கள். முசோலினிக்கு எதிரான லிபியாவின் விடுதலைப் போராட்டத்தைப் பேசும் ஒமர் முக்தார் புதினத்தில் அந்த மாவீரர் தூக்கிலிடப்படும்போது வந்துபோகும் சிறுவன் கற்பனைப் படைப்புத்தான்.




**சினம், கீழ்வெண்மணியை அதே பழைய கீழ்வெண்மணியாய்ச் சூடாகவே வைத்திருக்கிறது. சினம், அந்த மக்களை ஒன்றாக வைத்திருக்கிறது. சினம், வாழவேண்டும் என்னும் உறுதியை அவர்களுக்குத் தந்திருக்கிறது. சினம், அவர்களை இயக்குகிறது என்கிறாள் சாவுக்குத் தப்பிய மாயிப் பாட்டி.**

ஆனால் மீனா கந்தசாமியின் வரலாற்றுப் புதினத்தில் வரும் கதை மாந்தரில் ஒருவர்கூடப் பொன்னியின் செல்வனில் வரும் வந்தியத் தேவனோ, நந்தினியோ அல்ல. அனைவரும் கீழ்வெண்மணியில் வாழ்ந்த உண்மை மாந்தர்கள் என்பதுதான் *'The Gypsy Godess'* இன் சிறப்பு.

'குறத்தி அம்மன்' *(The Gypsy Godess)* புதினத்தில் கதாநாயகனும் இல்லை, கதாநாயகியும் இல்லை. 'வில்லன்' கோபாலகிருஷ்ண நாயுடுதான். 'புதினம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கீழ்வெண்மணி

முழுவதையும் கட்டி ஆள்கிறான். ஒடுக்கப்பட்ட சேரி மக்களையும், அவர்களுக்கு துணைநின்ற பொதுவுடைமை இயக்கத்தையும், செங்கொடியையும் கதாநாயகனின் இடத்தில் வைத்துப் பார்க்கலாம்.

ஏழைக்கு எதிரான பணக்காரனின் தொழிலாளிக்கு எதிரான முதலாளியின் தாழ்த்தப்பட்டவனுக்கு எதிரான உயர்சாதிக்காரனின் கூலிக்கு எதிரான மிராசுதாரின் ஒடுக்குமுறையை உடைத்தெறிந்த புரட்சி ஒன்றின் கதையே *'The Gypsy Godess'*

மீனா கந்தசாமி புதினத்தை நகர்த்துவது மிடுக்காக இருக்கிறது. தொடக்கத்தில் இருந்து புதினம் முடியும் வரை அவரே கட்டியக்காரராக வருகிறார். கதை மாந்தர்களை அவ்வப்போது அறிமுகம் செய்கிறார். கதையின் பின்புலத்தைத் தெளிவுபடுத்துவதற்காகக் கோபாலகிருஷ்ண நாயுடு வீட்டில் நடந்த மிராசுதார்கள் கூட்டத்தையும், பொதுவுடைமைக் கட்சியின் துண்டறிக்கையையும் புதினத்தின் இடைநடுவில் நுழைக்கிறார். தான் பிறப்பதற்குப் பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு கீழ்வெண்மணியில் நிகழ்ந்த சாதிய முதலாளிய வெறியாட்டத்தை பிறந்து பதினாறு ஆண்டுகளுக்குப் பின்பு நேரில் சென்று, அங்கே சாவுக்குத் தப்பிப் பிழைத்தவர்களைக் கண்டு பேசித் திரட்டிய உண்மை வரலாற்றை அப்படியே பதிவு செய்கிறார் மீனா.

கீழ்வெண்மணியின் நெருப்பு இரவு கொடுமையானது. கோபாலகிருஷ்ணநாயுடு கூட்டத்தின் துப்பாக்கி உறுமல் நிறைமாதக் கர்ப்பிணியான பாப்பா அக்கா வாசுகி வீரம்மாள் சோதி இவர்களெல்லாம் உள்ளே இருந்தால் தப்பிப் பிழைக்கலாம் என்று கதவு பூட்டிய குடிசை உட்படச் சேரி முழுவதுமே நெருப்பில் எரிந்து சாம்பலான சாதிய முதலாளிய ஒடுக்குமுறையின் கொலைவெறிக் கூத்தை வெளிப்படுத்தி அந்த ஓரிரு பக்கங்களில் மாந்த நேய நெஞ்சங்களை உருக்கிப் பிழிகிறார் மீனா கந்தசாமி.

சினம், கீழ்வெண்மணியை அதே பழைய கீழ்வெண்மணியாய்ச் சூடாகவே வைத்திருக்கிறது. சினம், அந்த மக்களை ஒன்றாக வைத்திருக்கிறது. சினம், வாழவேண்டும் என்னும் உறுதியை அவர்களுக்குத் தந்திருக்கிறது. சினம், அவர்களை இயக்குகிறது என்கிறாள் சாவுக்குத் தப்பிய மாயிப் பாட்டி.

நெருப்பில் சேரி எரிந்த பின் புதினத்தில் ஒரு பக்கம் முழுவதும் நெருப்பைக் கொட்டுகிறார் மீனா.

'முகில்கள் எரிந்தன, அழகிய மஞ்சள் நிலா எரிந்தது, புறாக்கள் எரிந்தன, கழனிகள் எரிந்தன, காற்று எரிந்தது, தெருக்கள், வீடுகள் எரிந்தன...' என்கிறார் மீனா.

வழக்குகள் பயனற்றுப் போனதாகவும், தலை தப்பிய கோபாலகிருஷ்ண நாயுடு பின்பு தலைதுண்டிக்கப்பட்டு, உடல் நாற்பத்து நான்கு பணம் பட்டைப் பொதிகளாய்ப் பங்கு போடப்பட்டதாகவும் அலம்பல் இல்லாமல் புதினம் நிறைவு பெறுகிறது.

இந்த நாளுக்காகத்தான் சேரி மக்கள் காத்திருந்தார்கள். 'முடிவு கண்டாச்சு' என்று அவர்கள் கத்தினார்கள்.

மீனா கந்தசாமியின் புதினம், இலக்கியம் மக்களுக்காக அல்ல இலக்கியத்துக்காக என்னும் பொய்மையை உடைத்துப் போடுகிறது.

சேரி மக்களுக்குத் துணைநின்ற செங்கொடியை மறக்க முடியவில்லை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னையே பலியிட்ட நவகண்ட சிற்பங்கள்

தனக்கென வாழா பிறர்க்குரிய சமூகம் இன்று மட்டுமல்ல பண்டையக் காலத்திலும் போற்றுதலுக்குரியச் செயல். தெய்வத்திற்கோ தலைவனுக்கோ ஊருக்கோ தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் வீரனை மக்கள் வழிபடுகின்றனர். தற்பொழுதுகூட உயிரைக் கொடுத்த இறைவனுக்கு மயிரைக் கொடுக்கும் வழக்கம் அனைத்து மதங்களிலும் காணப்படுகிறது. இந்துக்களாக இருந்தால் கோயில்களிலும், முஸ்லிம்களாக இருந்தால் நாகூர், ஏர்வாடி உள்ளிட்ட அடக்க ஸ்தலங் களிலும், கிறிஸ்தவர்களாக இருந்தால் வேளாங்கண்ணி உள்ளிட்ட கோயில்களிலும் முடி காணிக்கை செலுத்துவதைக் காண முடிகிறது. வழக்கமாகப் பூஜை செய்யும் இறைவனுக்கு வழங்கிய திண்ணப்பன் என்ற கண்ணப்பனைச் சிவனும் விழைந்துள்ளார். கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு தன்னிடம் இல்லையே என்று மாணிக்கவாச சுவாமிகள் வருந்துகிறார். முரட்டு வழிபாடு அல்லது மறத்தன்மை வாய்ந்த வழிபாடு தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளது. நவகண்டம் தருதல் மறவழிபாட்டில் அடங்கும். தன் உடலையோ உடல் உறுப்பையோ காணிக்கையாகத் தருவது அன்பின் வெளிப்பாடு ஆகும். தொற்று நோய்கள், எதிர்பாராத இயற்கைப் பேரழிவுகள் ஏற்பட, தெய்வக் குற்றம் அல்லது தெய்வத்தின் கோபமே என்று மக்கள் இன்று நம்புவது போல பண்டையக் காலத்திலும் நம்பியுள்ளனர். எனவே, தெய்வத்தின் சினத்தைத் தவிர்ப்பதற்காக அல்லது அமைதிப்படுத்துவதற்காக ஆடவர் சிலர் தம் இன்னுயிரை பலியிட்டனர். இதனைத் தலைப்பலி என்று தெலுங்கில் அழைக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளாமுகம், காபாலிகம், பாசுபதம், வீரமுஷ்டி, வீரபத்ரம் ஆகிய சைவப் பிரிவுகள் சில அம்சங்களில் நவகண்டத்துடன் தொடர்பு கொண்டுள்ளன. நவகண்ட வீரர்களுக்கு எடுக்கப்பட்ட சன்னிதிகளைக் 'சம்புடு கல்லுகள்' அல்லது 'சம்புடு குடிகள்' என வழங்குகின்றனர். தலையை அரிந்து வழங்குவதில் பல முறைகள் உள்ளன. வாளினால் தெய்வத்தின் முன்னர் தம் உடம்பை நவதுண்டுகளாக (ஒன்பது துண்டு களாக) ஒன்பது பாகமாகக் கூர்மையான வாளினால் வீரன் தன்னைத் தானே வெட்டிக்கொள்வது நவகண்டமாகும். காளி அல்லது துர்க்கை முன்பாக நவகண்ட நிகழ்ச்சி நடைபெறும். நின்றபடியோ அமர்ந்தபடியோ முழங்காலிட்ட நிலையிலோ வீரன் தலையை வெட்டி எடுப்பது போல் பல சிற்பங்கள் உள்ளன.

**தன்னையே பலியிடல்**

ஆந்திரப் பிரதேசத்தில் பக்தி காரணமாகவும், தலைவன் மீது கொண்ட விசுவாசம் காரணமாகவும் ஆடவர்கள் பலர் தங்களையே பலியிட்டுக் கொண்டுள்ளார்கள். கடவுளின் முன்னிலையில் தங்கள் தலைகளைச் சிலர் வெட்டிக்கொண்டுள்ளனர். உறுதிமொழியை நிறைவேற்றத் தடை அல்லது இடரினை நீக்க நினைத்து பூஜை நடைபெறாமைக் கண்டு, தேர் ஓடாமல் நின்று விட்டமை எண்ணி, பல காரணங்களுக்காக உயிர்களை விட்டுள்ளனர். தெலுங்கு மொழியில் 'போஜராஜ்யமு' என்ற காவியத்தில் கழுத்து வெட்டும் ஒரு வகையான ஆயுதத்தைக் கண்டகட்டோரோ என்று அழைக்கின்றனர்.

**தூங்குதலை குடுத்தல்**

நினைத்தக் காரியம் நடக்கவேண்டும். வெற்றி கிடைக்கவேண்டும், ஊருக்கு நல்லது நடக்கவேண்டும். பிறர்க்கு வந்த துன்பம் போக வேண்டும் என்று கருதி காளி, கொற்றவை முதலிய பெண் தெய்வங்களை வேண்டிக்கொண்டு தனது தலையை அரிந்து, அத்தெய்வங்களின் கோயில் மரங்களில் தொங்கவிடும் வழக்கம் பண்டைய காலத்தில் இருந்துள்ளது. இதனை மரத்தில் தொங்குகின்ற தலை என்ற பொருளில் "தூங்குதலை" என்று அழைத்துள்ளனர். கொற்றவை, காளி போன்ற பெண் தெய்வங்களை வேண்டிக்கொண்டு கோயில் மரத்தில், தலையை அறுத்துத் தொங்கவிடும் பழக்கத்தைத் 'தூங்குதலை குடுத்தல்' என்று அழைத்தனர்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் என்ற ஊரின் அருகில் வைகையாற்றின் வடகரையில் அமைந்துள்ள மடப்புறம் காளிகோயிலில் "தூங்குதலை குடுத்தவரின்" பெயருடன் கூடிய இரு நடுகற்கள் உள்ளன. இவை பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். மடப்புறம் அய்யனார் கோயிலின் இருபுறமும் எடுத்து வைக்கப் பட்டுள்ள இந்நடுகற்களில் தனது தலையை ஒரு கையால் பற்றி, மற்றொரு கையால் தலையை அறுக்கும் வீரர் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றிலுள்ள கல்வெட்டு சித்திரசரிதன், வல்லபன் என்ற இருவர் தூங்குதலை குடுத்ததாகத் தெரிவிக்கின்றன.

**வணிகனுக்காக நவகண்டம்**

வணிகன் ஒருவனின் துன்பத்தை நீக்குவதற்காகத் தலையைத் தந்தவன் பற்றியக் கல்வெட்டு ஒன்று விருதுநகர் மாவட்டம் துலுக்கப்பட்டிக்கு அருகிலுள்ள மன்னார்க்கோட்டை சிவன் கோயில் அருகில் கண்டறியப்பட்டுள்ளது. இந்நடுகல் கி.பி. பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இது சூரங்குடிநாட்டு ஆதனூரான கையம் என்ற ஊரின் கிழவன் ஸ்ரீவேழான் சீலப்புகழான் என்பவன் கலியுககண்டடி தன்மச் செட்டி கோன் என்ற வணிகனுக்காக வேண்டிக்கொண்டு தலையை அரிந்து தந்ததைத் தெரிவிக்கிறது.

**தலைவனுக்காக தன்னை பலியிடல்**

சிவகங்கை மாவட்டம் சிவகங்கையிலிருந்து இளையான்குடி செல்லும்

**மடப்புறம் அய்யனார் கோயிலின் இருபுறமும் எடுத்து வைக்கப்பட்டுள்ள இந்நடுகற்களில் தனது தலையை ஒரு கையால் பற்றி, மற்றொரு கையால் தலையை அறுக்கும் வீரர் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றிலுள்ள கல்வெட்டு சித்திரசரிதன், வல்லபன் என்ற இருவர் தூங்குதலை குடுத்ததாகத் தெரிவிக்கின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில் அமைந்த மல்லல் என்ற கிராமத்தின் காளிகோயில் அருகில் ஒரு சிற்பம் கிடைத்துள்ளது. இது கி.பி. 1081 ஆண்டைச்சேர்ந்த முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தது. இவ்வூர்ப் பகுதியில் இருந்த வீரன் உதாரன் ஆன குலோத்துங்க சோழன் நோய்வாய்பட்டு அவதியுற்றான். தனது தலைவனுக்கு வந்த அந்நோய் நீங்கவேண்டும் என்று படைத் தலைவனின் சேவகன் அம்பலக்கூத்தன் தூங்குதலை கொடுப்பதாக வேண்டிக்கொண்டான். காலப்போக்கில் வந்த நோய் நீங்கியது. இதனால் வேண்டியபடியே அம்பலக்கூத்தன் தன் தலையை அரிந்து படைத்தான் என்று மல்லல் கல்வெட்டு கூறுகிறது. தன் மீது அன்புகாட்டி உயிர்நீத்த தனது சேவகனின் வழியினர்க்கு குலோத்துங்க சோழ தேவன் தானமாக நிலத்தை அளித்தான் என்றும், அதனை இறந்துபோன வீரனின் மனைவியான கள்ளிவிழாகம் உடையாளுக்கு அளித்தான் என்றும் மல்லல் கல்வெட்டு தெரிவிக்கிறது

**ஊர் நலன் காக்க தன்னை பலியிடல்**

திண்டுக்கல் மாவட்டம், அம்மைய நாயக்கனூரில் உள்ள கதலி நரசிங்கப் பெருமாள் கோயில் முன்பு ஊர் நலன் காக்க ஒரு வீரன் தன்னுடைய தலையை அரிந்து காளிக்கு படைத்துள்ளான்.

**அரவாணியும் அறுவை சிகிச்சையும்**

அரவாணியாக மாறுவதற்கு அறுவைச் சிகிச்சை செய்கிறார்கள். ஆண் உறுப்பை நீக்கியவுடன், இன்னொரு அரவாணி தன்னுடைய மகளாக தத்து எடுத்துக்கொள்கிறாள். ஆரம்பத்தில் திண்டுக்கல், ஆந்திராவில் கடப்பாவில் மட்டுமே இதுபோன்ற அறுவைச் சிகிச்சை செய்துள்ளார்கள். இவ்வாறு அறுவைச் சிகிச்சை செய்யப்படும்போது விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது. முதலில் அசைவ உணவும் அதன் பின்பு சைவ உணவும் கொடுப்பார்கள். அதன் பின்னர் தனியாக விடப்பட்டு அந்தச் சடங்கு மூன்று நாள் நடைபெறும். அப்போது கம்மங்கூழ், கேப்பைக்கூழ், கஞ்சி இவைகள் மட்டுமே கொடுக்கப்படுகிறது. அதன் பின்னர் யாராவது ஒரு நபர் மட்டுமே அனுமதிக்கப்படுவார் அதன் பின்னர் நள்ளிரவு 12 மணிக்கு நிர்வாண பூஜை நடைபெறும். நிர்வாண பூஜை நடைபெறும் இடத்தில் போத்திராஜ் மாத்ரா படம் வைத்திருப்பார்கள். அங்கு குழி ஒன்று வெட்டப்பட்டு இருக்கும். இரவு 12 மணிக்குப் பின்னர் அறுவைச் சிகிச்சை செய்யும் அரவாணியின் வாயில் முடியை வைத்து, தலையில் எலுமிச்சம் பழத்தை வைத்து அடிப்பார்கள். அந்த அடியில் அரவாணி மயங்கிய நிலையில் காணப்படுவாள். பின்னர் கைகள் இரண்டையும் பின்புறம் கட்டிவைத்துவிட்டு பூஜை முடிந்தவுடன் மாதாஜி கையில் இருக்கும் அரிவாளால் ஆணுறுப்பு துண்டிக்கப்படும். அப்போது இரத்தம் பீறிட்டு குழி முழுவதும் நிரம்பி விடும். அந்த ரத்தத்தை உடல் முழுவதும் தேய்த்து விடுவார்கள். பின்னர் மயக்கத்தை தெளியவைத்து, இரண்டு கால்களையும் விரித்து அமரவைப்பார்கள். அதன் பின்னர் சூடாகக் காய்ந்துகொண்டிருக்கும் எண்ணெயை எடுத்து காயம்பட்ட இடத்தில் தடவுவார்கள். அப்பொழுது கண்ணாடியை பார்க்கவோ அல்லது எந்த ஆணையும் ஏறிட்டுப் பார்க்கவோ அனுமதிப்பதில்லை. இவ்வாறாக அரவாணிகளாக மாறுபவர்கள் ஆணுறுப்பை மாதாஜிக்கு பலி கொடுக்கிறார்கள்.

தமிழகத்தில் அரசியல் தலைவருக்கு நலன் வேண்டிக்கொண்டு திருச்சியைச் சேர்ந்த பிரமுகர் தன்னுடைய கட்டை விரலை காணிக்கையாகத் தந்தார். இதுபோல தன்னுடைய கட்சித் தலைவர் முதல்வராக வரவேண்டும் என்று தேனி மாவட்டத்திலுள்ள வீரபாண்டியன் மாரியம்மன் கோயிலுக்கு ஒரு பெண் தனது நாக்கை காணிக்கையாகத் தந்தார். அதன் பின்னர் அக்கட்சித் தலைவர் அப் பெண்மணிக்கு வேலை வாய்ப்பு அளித்தார். இதேபோல முல்லைப் பெரியாறு அணை, கர்நாடகாவிலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் தரமறுப்பது, இலங்கை பிரச்சினைக்குத் தீர்வுகாண தீக்குளித்து இறப்பது என்று அடுக்கிக்கொண்டே போகலாம். இறைவன் கொடுத்த இன்னுயிரை, தெய்வத்தின் சாட்சியாகக் கடந்த காலத்தில் மக்கள் அளித்திருக்கிறார்கள், இன்னும் அளித்துக் கொண்டேயிருக்கிறார்கள் என்பது வரலாறு. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தண்ணீர் தீவு

சித்தப்பா கேவிக் கேவி அழுது கொண்டிருந்தார். துக்கத்தின் தீவிரம் தெரிந்தது கேவலில். அதனினும் தூக்கலாக அவர் உள்ளே ஏற்றியிருந்த நாட்டுச்சரக்கின் நாற்றம் வயிற்றைக் குமட்டுவதாக இருந்தது. தனது மடியில் முகம் புதைத்து அழும் அவரது தலையை கோதிவிடவோ அல்லது முதுகில் அரவணைப்பாய் தடவிவிடவோ கைகள் பரபரத்தாலும் தன்னினும் பதினைந்து வருடங்கள் பெரியவரான அவருக்குத் தனது ஆறுதல் செய்கைகள் தேவையா என்று மனது கிடந்து யோசித்தது. அதே அறையில் இருந்த அம்மாவையும் அப்பாவையும் பாட்டியையும் அவரது செல்லத் தங்கையான எனது அத்தையையும் விடுத்து, என் மடியில் முகம் புதைத்து அழும் அவரைப் பார்க்க பாவமாய் இருந்தது. என்ன செய்வதென்று தெரியவில்லை.

“டேய் குட்டி சல்மாவை பொண்ணு கேட்டு வந்தானுங்களே... அவளை பிடிக் கலைன்னு சொல்லிட்டாங்கடா” குழறினர். வாயிலிருந்து உமிழ்நீர் ஒழுகியது.

இவனது தங்கை சல்மாவை பெண் பார்க்க வந்தவர்கள் சித்தப்பாவின் நெருங்கிய நண்பர்கள். அதனால் அவரே முன்னின்று அனைத்தையும் செய்வதாய் சொல்லி பொறுப்பேற்றிருந்தார். என்ன காரணமோ அவர்களுக்கு இவனது தங்கையை பிடிக்கவில்லையென்று கூறியிருக்கிறார்கள். அதை எப்படி சொல்வதென்று தெரியாது, உள்ளே போட்டுக்கொண்டு வந்து இப்படி குழறிக்கொண்டிருக்கிறார்.

அம்மாதான் சொன்னார். “ஆயிரத்தெட்டு பேர் வரானுங்க. எல்லாருக்கும் எல்லாத்தையும் பிடிச்சிடுமா. எதோ தெரிஞ்சவங்களாச்சே. பையனும் பாக்க லச்சணமா இருக்கானேனுன்ட்டு பாத்தோம். அதுக்கு போயி இப்படி செஞ்சிக்கினு வந்து நிக்கிறியே”.

சித்தப்பா மெதுவாக எம்பி, தனது அண்ணியைப் பார்த்தார். அப்படியே தாவிச்சென்று அவரது மடியில் விழுந்து மறுபடியும் அதே செய்தியைக் கேவியபடியே கூற ஆரம்பித்தார். உள்ளே சென்ற தண்ணி யின் லீலையோ என்று இவன் எண்ணிக் கொண்டான்.

அம்மாவுக்குக் கல்யாணமாகி இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தபோது சித்தப்பாவுக்கு ஐந்து வயதுதான் ஆகியிருக்குமென்று அம்மா அடிக்கடி கூறக்கேட்டிருக்கிறான். "அவன், எனக்கு மொத பிள்ளைடா" என்பாள்.

சங்கோஜமோ சதுர்புத்தியோ தெரியாத நிலையில் நிலை தடுமாறி தவிக்கும் மனதுடன் அல்லாடும் சித்தப்பாவை பார்க்கும்போது இவன் மனதுள் நிறைந்த கனமாய் ஏதோவொன்று கரைந்து கசிய ஆரம்பித்தது.

தொழுகைக்காய் (நமாஸ்) சுத்தபத்தியாய் (வஸூ) அமர்ந்திருந்தவன்மீது நாஜாயிஸ் எனப்படும் அசுத்தி சித்தப்பாவின் வாய் வழி மதுரசமாய் வழிந்தோடியதால் மறுபடியும் சுத்திகரணம் செய்ய வேண்டி குளியலறையினுள் நுழைந்து தாழிட்டுக்கொண்டான். ஏனோ ஓவென்று கதறியழ வேண்டும் போலிருந்தது. தண்ணீர் குழாயை வேகமாகத் திறந்துவிட்டு தபதபவென்று பக்கெட்டில் வீழ்ந்த தண்ணீரின் ஓசையோடு இயைந்து அழ ஆரம்பித்தான்.

## *1983*

சார்மினார் ஓட்டலின் குடும்ப அறையில் நண்பர்கள் சகிதம் அமர்ந்து ஓல்ட் மங்க் முழு பாட்டிலின் மதுவை பகிர்ந்தளித்தபடி இரண்டாவது ரவுண்டுக்கு இவர்கள் தாவும் போது தான் அவர்கள் இருவரும் உள்ளே வந்தமர்ந்தனர். அவர்களது கைகளிலே பீர்பாட்டில் இருந்தது. காலியாயிருந்த ஒரு மேசையை ஆக்கிரமித்து நாற்காலிகளில் அமர்ந்துகொண்டனர்.

"ஜமீல் பாய்... ஜமீல் பாய்" குரல் கொடுத்தான் இவன்.

லேசான வழுக்கையுடன் முகம் முழுக்க சிரிப்புடன் உள்ளே எட்டிப் பார்த்தவர்,

"எஜமான் என்ன வேணும்" என்று கேட்டார்.

"ஆனியன் சலாது... சிக்கன் பிரியாணியிலிருந்து சிக்கன் பீஸை எடுத்து, அதை சுக்கா பிரை போட்டு குடுத்துடுங்க. ஆங்... ரெண்டு பிளேட்டு".

பந்தி களை கட்ட துவங்கியிருந்தது. புதியதாய் உள்ளே நுழைந்த பீர்பாட்டில் காரர்களில் ஒருவர்,

"ராமு... அந்த பசங்கள்ள செகப்பா இருக்கானே அவன் முஜிப்போட அண்ணண் பையன் சலீம் தானே...".

அவர்கள் இவனை குறிபார்த்ததை இவனும் தெரிந்துகொண்டான். சித்தப்பா முஜிப்பின் நண்பர்களில் யாராவது ஒருவராய் இருக்கவேண்டும். இவனுக்கு தெரியவில்லை. ஆனால் அவர்களால் இவன் இனம் கண்டுகொள்ளப்பட்டான். சாதுர்யமாய் மதுவை தொடாது அமைதியாய் அமர்ந்திருந்தான். உள்ளே சென்றிருந்த இரண்டு ரவுண்டுகள் மெதுவாக சுருதியை கூட்டிக்கொண்டிருந்தது.

ராஜன் தான், "டேய் என்னடா நிறுத்திட்டே". குசுகுசுப்பதாய் எண்ணி பெருங்குரலில் இரகசியம் பேசினான்.

"உஸ்... உஸ்... மெதுவாடா" கண்களால் ஜாடை காட்டினான் சலீம். ராஜனின் காதருகே சென்று, "டேய், என் சித்தப்பாவோட பிரண்டுங்க போலிருக்கு அவங்கள பாத்தா. கொஞ்சம் சும்மாயிருடா".

"ஆங்... ஆங்" என்ற ராஜன் திடீரென்று "எந்தம் மய்... இருந்தா எனக்கின்னாடா" வென்று உச்ச ஸ்தாயியில் கத்த, ஜமீல் பாய் எட்டிப் பார்த்தார். கலவரமே இல்லாத சிரித்த முகமாய்,

"என்ன சார்" என்றார்.

"பாய்.. ஏன் இவனுங்களே உள்ள உட்டே".

மேற்கொண்டு ராஜன் ஏதும் கூறும் முன்னரே பீர்பாட்டிலோடு இருவரும் வெளியேறிச் சென்றனர். சலீமுக்கு சற்று உதறல் ஏற்பட்டிருந்தது. சித்தப்பாவிடம் சென்று, இவர்கள் ஏதாவது கூறிவிட்டால்...? அய்யோ... அப்பா ஏதும் சொல்வாரோ மாட்டாரோ சித்தப்பா உண்டு இல்லையென்று ஆக்கிவிடுவார். லேசான கிறக்கத்திலும் பழைய நினைவுகளை அசை போடத்துவங்கியது மனது. பின்னோக்கி பறப்பது போல் ஏதோ ஒரு உலகில் சஞ்சரிக்க ஆரம்பித்தான்.

*1975ஆம் ஆண்டின் துவக்கம் அது.*

"அஞ்சாங் கிளாஸ் படிக்கிற. சைக்கிள் பெடல சரியா மெரிக்க தெரியில" தலையின் மீது டப்டப்பென்று தட்டினார் முஜிப். சலீமுக்கு அழுகை அழுகையாய் வந்தது. தெரியாத்தனமாய் சித்தப்பாவிடம் சைக்கிள் கற்றுத்தரச் சொல்லி மாட்டிக் கொண்டுவிட்டோமே என்று கலங்கினான்.

இவன் சைக்கிள் ஓட்ட கற்றுத்தரச்சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதும் சற்றும் தாமதியாமல் ஒரு வாடகை சைக்கிள் கொண்டுவந்து அவனை அரைப் பெடல், முக்கால் பெடல் என்று போட்டு வாட்டாமல் நேரடியாகவே சீட்டின் மீது அமர்த்தி, ஹேண்டிலை ஒரு கையாலும் இவன் அமர்ந்திருந்த சீட்டை ஒரு கையாலும் பிடித்து தள்ளியபடி,

"பெடலை இப்பிடி மெரி. அப்பிடி மெரி. ஆங், அந்த கால மேல தூக்கும் போது இந்த காலாலே மெரிக்கனும்" என்று சொல்லி கொடுத்தபடி வியர்வை வழிய கூடவே நடை பயின்றார். ஒரு கட்டத்தில் பொறுமையிழந்து தலையில் தட்டும் வரையில் நிலைமை பெரிதாகிப்போக இவனது அழுகை, சிறிது நேரம் பயிற்சியை நிறுத்தியது.

அதன் பின் சைக்கிளை இவனிடம் தந்தவர் "சரி... தள்ளிட்டு வா" என்று கூறிவிட்டு விடுவிடுவென சாலையின் மேடான பகுதிக்குச் சென்று நின்றுகொண்டார். இவன் ஒரு வழியாக அங்கு வந்து சேர்ந்ததும் அவனை சீட்டின் மீதமர்த்திவிட்டு,

"நேரா முன்னாடி பாக்கனும். ஹேண்டிலை இப்படி அப்படி அசைக்கக் கூடாது" என்று கூறியபடியே சைக்கிளை மெதுவாக தள்ளிவிட்டார். இவனும் தடுமாறியபடியே சைக்கிள் பெடலை, சித்தப்பா கூறியது போலவே மிதித்துக்கொண்டு சற்று தூரம் சென்றான். மேடான பகுதியிலிருந்து தாழ்வான பகுதி வரும் வரை சைக்கிள் நேராகச் சென்றது. சமதளம் வந்தவுடன் சைக்கிளை செலுத்துவது கடினமாகப்பட்டது. அப்போது தான் சித்தப்பா தன்கூட சைக்கிளை பிடித்தபடி வரவில்லையென்பதை அறிந்து கொண்டவன் நிலைதடுமாறி கீழே தடாலென்று விழுந்தான். விழுந்தவனின் மீது சைக்கிள் விழ, இடுப்பில் லேசான சிராய்ப்பும் ஹேண்டில் பட்டு மார்புப் பகுதியும் வலியெடுக்க, ஹோவென அழ ஆரம்பித்தான். சித்தப்பா ஓடி வந்தார். சைக்கிளை தூக்கி நிறுத்தினவர் இவனை எழுப்பி,

"ஊஹூம்... இது வேலக்கி ஆவாது. ஓடு... வீட்டுக்கு போயி, அடிபட்டதுக்கு மருந்து வச்சிக்க". சொன்னவர் சைக்கிளை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்.

இவன் வீட்டையடைந்து அடிபட்ட இடத்துக்கு மருந்தையும் வலி மிகுந்த இடத்தை தேய்த்தும் சற்று இளைப்பாறும் நேரத்தில் சித்தப்பா திரும்பி வந்தார்.

"இன்னா சைக்கிள் ஓட்றான் இவன். இந்த வயசுல நான், டிரிபிள்ஸ் போவேன். அவ்ளோ தான். ஒனக்கு சொல்லித்தர முடியாது".

இதை கேட்டதும் இவன் அழ ஆரம்பித்தான். அம்மா உள்ளேயிருந்து எட்டிப் பார்த்து "முஜிப்... ஏன் அவன சத்தாயிக்கிற. அவனே அடிபட்டு அழுதுகினு இருக்கான்.சலீம்... நீ வாடா என் கண்ணு". செல்லமாக குரல் கொடுத்தாள்.

பிறகு அடிபட்டுக்கொண்டே, சைக்கிள் ஓட்டவும் டி.வி.எஸ்.50 மொபெட்டையும் ஹீரோ ஹோண்டாவையும் ஓட்ட கற்றுக் கொடுத்தவர் சாட்சாத் அதே சித்தப்பாதான்.

சலீமுக்கு தலை லேசாக கனத்துபோனது போல் தோன்றியது. இப்போது சித்தப்பாவின் நண்பர்கள் இவனை ஓட்டலில் மது அருந்தும் கோலத்தில் கண்டு அதோடு இவனை மட்டும் குறிப்பாக அடையாளம் கண்டுகொண்டது இவனுக்குள் பதற்றத்தை அதிகரிக்க செய்தது. சித்தப்பாவிடம் இவர்கள் கூறிவிட்டால் என்னவாகும் என்ற படபடப்பும் சேர்ந்து கொள்ள கிளுகிளுக்கும் சஞ்சரிப்பில் மிதந்துகொண்டிருந்தவனுக்கு லேசாக வயிறு கலக்க பெரும் குமட்டலோடு 'உவேக்'கென்று பெருஞ் சத்தத்தோடு உள்ளிருந்ததை வெளியே வாந்தியெடுத்தான். வெங்காயத் துண்டுகள், எண்ணெய்யில் வறுத்தெடுத்த சிக்கன் துண்டுகள், தங்க நிற திரவமென கலக்கலாக தரையில் சிதறியவை ஏற்படுத்தின கவுச்சி நாற்றம் அந்த அறையையே நாறடித்தது. ஜமீல் பாய் எட்டிப் பார்த்தார். சற்றும் சலிப்பேயில்லாத சிரித்த முகம். இது மாறவே மாறாதோ.

"பையன அனுப்பறேன். சுத்தம் பண்ணிடட்டும். வேற எதாவது வேணுமா. லெமன் கொஞ்சம் குடுக்கிறேன்" சென்றுவிட்டார்.

சலீமின் தலையை ராஜன் கெட்டியாகப் பிடித்திருந்தான்.

"ராவாக கொஞ்சம் உள்ள விட்டா எல்லாம் சரியாயிடும்". அவன் கூறிக் கொண்டிருக்கும் போதே 'உவேக்'கென்று அவன் மீது மறுபடியும் வாந்தியெடுத்து மயங்கி சரிந்தான் சலீம்.

தட்... தட்... தட்.

கதவு தட்டப்படும் ஓசையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சித்தப்பா தன்கூட சைக்கிளை பிடித்தபடி வரவில்லையென்பதை அறிந்து கொண்டவன் நிலைதடுமாறி கீழே தடாலென்று விழுந்தான். விழுந்தவனின் மீது சைக்கிள் விழ, இடுப்பில் லேசான சிராய்ப்பும் ஹேண்டில் பட்டு மார்புப் பகுதியும் வலியெடுக்க, ஹோவென அழ ஆரம்பித்தான்.**



"எவ்ளொ நேரமா குழாய தொறந்து வச்சிட்டு அப்படியென்ன பண்றீங்க" என்ற மனைவி ஜமிலாவின் குரலும்தான் சலீமை இவ்வுலகிற்கு மீட்டு வந்தது. வேகமாக குளித்துவிட்டு தொழுகைக்காய் வஸூ செய்துகொண்டு துவாலையால் முகம் துடைத்தவாறு வெளியே வந்தான்.

சித்தப்பாவை காணவில்லை.

"சாச்சா போயிட்டாரா. கொஞ்ச நேரம் இங்கயே இருக்க சொல்லியிருக்க லாம்லே" என்றான் தாடியை துவாலையால் நன்கு கிளர்த்தி துடைத்தபடி.

'அவன் எங்க கேக்கறான். கௌம்பி போயிட்டான்" என்றாள் அம்மா.

எப்படி போனாரோ இந்த நிலைமையில் என்றெண்ணியபடி தனது அறைக்குள் நுழைந்து தொழுகைக்காய் தயாராகி வீட்டிலிருந்து வெளியேறி, பள்ளிவாசலை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

எதிரே மாரியப்பன் வந்தான். இவனை கண்டதும்,

"பாய், உங்க சித்தப்பா ரோட்டோரம் உலுந்து கெடக்குறாரு. எலுப்பினாலும் எள மாட்டேன்றாரு. போயி சீக்கிரமா பாரு" என்றான்.

சலீம் நடையில் வேகம் கூட்டி மாரியப்பன் கூறிய இடத்தை அடைந்தான். சித்தப்பா சாலையோரமாய் கைகளையும் கால்களையும் பரத்தியபடி மல்லாந்து படுத்துக்கிடந்தார். கொளுத்தும் வெயிலில், தார் ரோட்டின் மீது சுயநினைவின்றி கிடக்கும் அவரை பார்த்ததும் கதறி அழ வேண்டுமென்ற உந்துதல் ஏனோ தானாய் உருவானது அவனுள். அவர்களைக் கடந்து சென்ற இருவர்கூட இவர்களை கண்டும் காணாதது போல் சென்றனர். அவர்களுள் ஒருவன்,

"இந்த முஜிப் பாய் கொஞ்ச நாளாவே ஓவரா தண்ணி போட்டுட்டு இப்படி உளுந்து கெடக்கிறாரு. மொத எல்லாம் கொஞ் சமா குடிச்சிபுட்டு அப்படியே சைடாவே போயிடுவாரு..." என்றபடி ஆதங்கப்பட்டான்.

சலீமுக்கு அதிர்ச்சி. சித்தப்பா இன்றுதான் முதன்முதலாய் குடித்திருக்கிறார் என்று நினைத்தவனுக்கு சம்மட்டி அடியாய் இறங்கியது அந்த பேச்சு.

சாலையில் வேகமாக ஒரு கார் இவர்களை கடந்து சென்றது. இவனுக்கு மனது பதைத்தது. மெதுவாக குனிந்து, சித்தப்பாவை ஒருக்களித்து படுக்க வைத்து, அவரது இடது கையை மேலே இழுத்து தனது தோளில் சார்த்தி, அப்படியே முதுகுப்புறம் இரு கைகளையும் கொடுத்து நேராக நிமிர்த்தினான். வாயிலிருந்து ஒழுகிய ஒழுகலின் நெடி அதிகமாய் படுத்தியது. வியர்வையும் வழிந்தபடி இருந்ததால் அவரது சட்டை நனைந்திருந்தது.

சலீம், சித்தப்பாவை தூக்கிக்கொண்டு நிமிர்ந்தான்.

தூரத்தில் பள்ளிவாசலிலிருந்து லுஹர் தொழுகைக்கான பாங்கொலி காற்றில் இசைந்தபடி வந்து இவன் செவிகளில் விழுகிறது. கண்களிலிருந்து தானாக கண்ணீர் தாரையாய் வழிந்து, தாடியை நனைத்தபடி சித்தப்பாவின் வியர்வை நனைத்த சட்டையில் வீழ்ந்து அதோடு அய்க்கியமாகிறது.

இன்ஷா அல்லாஹ்...! சித்தப்பாவும் தன்னைப் போலவே மாற்றப்படுவார். நம்பிக்கையோடு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரிந்த மனிதம்

இமைக்கும் முன்
இமைத்த பின்
இடைப்பட்ட
இடைவெளியில்
வானளாவிய கட்டிடம்
சரிந்து கிடந்தது தரையில்

உயிரழந்தோர் எண்ணிக்கை
உயர... உயர
பதறியது மனித இனம்

வராத குடியிருப்பில்
குடியேறிய
சுடுகாடு

வாங்கிய கூலி
முதல் முறையாய்
அப்படியே இருந்தது
செலவாகிப் போயிருந்தது
மனித உயிர்கள்

கேட்டது
நல்ல ஏரியாவில் வீடு
ஏரியில்லையே

மீட்புப்பணி துரிதம்
நஷ்ட ஈடு
இரங்கல் செய்தி

விழுந்த கட்டிடத்துக்கு
எழுந்த கேள்விகள்

தரமற்ற பொருளா?
கலப்படமா?
முறையற்ற கட்டுமானமா?
இயற்கையின் சீற்றமா?

அறிந்துகொள்ள
விசாரணை கமிஷன்

அவ்வளவுதான்
அடுத்த சில ஆண்டுகளில்
அதுவும் புதையுண்டு போகும்,
மனிதம்?!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்திம ஆறுதல்

சின்னச்சண்டை
சமாதானம்
சிரிப்புச்சிதறல்
யாவும் இல்லா
அரவமற்ற
தனிமைப் பெருங்காடாய்
வீடு

நோய் தின்னும்
முதுமை

நிச்சயமற்ற தன்மையோடு
நீளும் ஆயுள்

வெறுமையால்
நிரம்பிக்கிடக்கும் மனம்

சுற்றிச் சுழன்ற
வாழ்க்கை
சாய்வு நாற்காலியில்
அசைவற்று

இருண்மையோடு
கழிகிறது இரவு பகல்
தூரத்துப் பிள்ளைகளின்
வலி மிகுந்த
நினைவுகள் சுமந்து

அவ்வப்பொழுது
ஆறுதல் படுத்துகிறது
இருக்கம் தளர்த்தி
பூனை நாய் கன்றுக்குட்டிகளோடு கழியும்
பேரப்பிள்ளைகளின்
பிரியங்களூடான
கிராமத்து
அந்திமப்பெருவாழ்வு

## ஆணாதிக்கம்

கல்லடி
சொல்லடிப்பட்டு
பெட்டையென
பெயரெடுத்து
வாழ்கிறது தெருநாய்
பிறப்பை அடையாளப்படுத்தி

வாலை வளைத்து
காலுக்குள் வைத்து
பயம்கொண்டு
பதுங்கி ஒளிந்து ஓட
காமத்திமிர் தணிக்கும்
ஆறேழு ஆண் நாய்கள்
வன்புணர்வால்

திணிக்கப்பட்ட
தாய்மைக்காக
உயிர்வாழ்கிறது
மலம் தின்று
எச்சில் இலைபொறுக்கி
ஊரார் வீட்டுப்
பானை உருட்டி
நடை தளர்ந்து
நாக்குத்தள்ளி
குட்டிகள் ஈன்று
இடுப்பொடிந்து

சாமத்தில் கேட்கிறது
இரவை கிழித்து
உடல்பசி கொண்ட
ஆண் நாய்களிடம்
அகப்பட்டுக்கொண்ட
குட்டிகள் ஈன்றே
கிழப்பருவம் எய்திய
குரைப்புகளற்ற
பெட்டை நாயின்
சன்னமான அழுகுரல்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மடல் திறப்பு

காக்கைச் சிறகினிலே ஜூலை இதழ் தலையங்கத்தில் பேசுவதெல்லம் பொய் செய்வதெல்லாம் குற்றம் நடப்பதெல்லாம் ஒடுக்குமுறை என்று ராஜபக்சவின் குணநலன்களைப் பட்டியலிட்டுள்ளீர்கள் காலம் கட்டாயம் அந்த மனித மிருகத்திற்குப் பாடம் புகட்டும். பிரதமர் மோடியைப் பற்றிய ஏகனின் அரசியல் கட்டுரை மோடியின் நிறை குறைகளை அழுத்தமாகப்பதிவு செய்துள்ளது அருமை. நமக்கு ஜனநாயகப் பகட்டு அதிகம்! ஜனநாயகம் என்ற பெயரில் எல்லா முடிவுகளையும் கேள்விக்குள்ளாக்குவது வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அனைத்தையும் முடக்குவது பல வேளைகளில் சகல ஆயுதங்களையும் உள்நோக்கோடு பயன்படுத்துவது இந்தப் பகட்டே நமது ஜனநாயகத்தை கேள்விக்கும் கேலிக்கும் உள்ளாக்கி இருக்கிறது. என்ற கருத்து சிந்தனையைத் துண்டுகிறது.

**பாவலர் எழுஞாயிறு, சேலம்.**

ஜூலை 2014 இதழில் அரசியல் அலசலில் பாஜக மற்றும் மோதி [மோடி என்பது தவறு]யின் இரண்டு பக்கங்களையும் வாசகர் முன்வெளிச்சம் போட்டுக் காட்டியிருப்பது நிறை குறைகாட்டும் துலாக்கோல் போல இருந்தது. மோதி அவர்களின் தாய்மொழி குஜராத்தி. ஆயினும் நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் புரிந்து கொள்ளும் ஹிந்தியில் அவர் உரையாற்றியதில் என்ன தவறு? தேசத் தந்தை காந்தியும் நாட்டு விடுதலைப் போராட்ட காலத்தில் (அவருக்கும் தாய் மொழி குஜராத்திதான்) ஹிந்தியில் உரையாற்றியே மக்களது மனதில் இடம்பிடித்தார். தமிழ் ஆர்வலர் எனக் கூக்குரலிடும் திராவிடக் கட்சிகளின் சார்பில் எத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளு மன்றத்தில் தமது தாய்மொழியில் உரையாற்றியுள்ளனர்? வருங்காலத்தில் காந்தியின் கொலையைக் கூட (ஆர் எஸ் எஸ்பாஜக) நியாயப்படுத்தக் கூடும் என்ற ஐயம் நூற்றுக்கு நூறு உண்மை. உரலுக்குள் தலையைக்கொடுத்தபின் உலக்கை இடிக்கு அஞ்சி என்ன பயன்?

**க.த.அ. கலைவாணன், வேலூர்**

ஜூலை இதழ் படித்தேன். மங்கையர் செல்வன் கவிதை முக்கியமான ஒன்று சேர்க்கை என்பது உடன்பாடு. பிரிவு என்பது எதிர்மறை. ஆனால், பிரிவில் மகிழ்ச்சியைக் காண்பது இனிமையான முரண். தொடக்கம் முதல் இறுதிவரை கவிதை அடுக்கிக்கொண்டே போகிறது. இறுதியில் பிரிவின் முக்கியத்துவத்தை இயற்கை நிகழ்வில் ஏற்றி அதன் இன்றியமையாமையை கவிதை வலியுறுத்துகிறது.

**வளவ. துரையன், கடலூர்**

மோடியைப் பற்றிய ஏகனின் கட்டுரை, மோடியின் முகமூடியெனும் பிம்பத்தை உடைத்துள்ளது. 'மூடிய பெருங்கனவு' என்று பெயரிட்டது மிகச் சரியானது. மோடி மீதான நம்பிக்கை பெருங் கனவாகத்தான் போகுமென்று ஆட்சியின் நடவடிக்கைகளைப் பார்த்தாலே தெரிகிறது. வரலாற்றை மாற்றியமைக்கும் பி.ஜே.பி.யின் திரிபு வாதங்களை அம்பலப்படுத்திய இரா. எட்வின் கட்டுரையும் பாராட்டத் தக்கது. யாழன் ஆதியின் கட்டுரை வை.கோ.வின் முகத்திரையைக் கிழித்துள்ளது. வெற்று பதவியாசையில் சிக்கியுள்ள இவர் நேர்மை வேடம் பூணுவதைத்தான் சகிக்க முடியவில்லை.

**சூர்யநிலா, சேலம்-9**

யாழன் ஆதி அவர்களின் அரசியல் கட்டுரையில் எழுத்து நேர்மை இல்லை. தோற்றவர்கள் தண்டனைப் பெற்றவர்கள் என்றால் வை.கோவும் தண்டனைப் பெற்றவர் என்கிறார். அப்படியானால் மராட்டியத்தில் அம்பேத்கர் தோற்றாரே? அவரும் தண்டனைப் பெற்றவரா? மாறாதநிலைப்பாட்டைக் கொண்ட அரசியல்வாதி யார்? வை.கோ.வின் மாறாத ஈழநிலைப்பாட்டிற்காகவே அவர் வெற்றி பெற்றிருக்க வேண்டும். அவர் நல்ல அரசியல் வியாபாரியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், நல்ல அரசியல்வாதி என்பதை மறுக்க முடியாது. நகம் வெட்டும் சாக்கில் விரலை வெட்டுவது எதற்காக?

**க. இந்திரசித்து, உடுமலை.**



Owned and published by V.Muthaiah from 17/14, Diwan Rama Road, Purasaivakkam, Chennai - 600 084 and Printed by H.Dhanasekar at Sekar Offset Printers, New No. 50 (Old No. 168/1), Big Street, Chepauk, Chennai - 600 005. Editor : V.Muthaiah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவகண்டச் சிற்பங்கள்

நவகண்டம் தருதல் ஒரு மறவழிபாடு; தனது உயிரையோ உடல் உறுப்பையோ இறைவனுக்குக் காணிக்கையாக அளிக்கும் அன்பின் வெளிப்பாடாக இருந்தது பண்டைய மக்கள் நம்பிக்கை. இந்த நம்பிக்கையை அடையாளப்படுத்தும் இந்தச் சிற்பங்கள் தமிழகத்தில் பரவலாகக் காணக்கிடைக்கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 / 43921
Postal Registration No. TN / CCN / 588 / 2013-2015 WPP No. TN/PMG (CCR)/WPP-354/2014-2015.
ISSN 2348 - 4160 Date of Publication : 25.7.2014

Admission is in progress
class starts from 2nd august

# Mains TNPSC 2014
## NEW ADMISSIONS
FOR
## Group I & Group II
(Interview Posts)

- **Complete Coverage of Syllabus**
- **Complete Material Provided**
- **Time bound Programme**
- **Exclusive Test Series**

# IAS Mains - 2014
**Classes starts from 1st September**

SCHEDULE OF THE PROGRAMME

| MORNING (07:15 AM- 9:45 AM) | EVENING (5:30 PM – 8 PM) |
|---|---|
| GS PAPER-2 (History , Geography, Culture, Social Issues) | GS PAPER-3 (Polity, Constitution, Governance, Social Justice, International Relations) |
| GS PAPER-5 (Ethics, Values, Integrity, Aptitude, Attitude, Moral Philosophers, Ethics in Public Administration, International Relations, etc.,) | GS PAPER-4 (Economic Development, Environment, Disaster Management, Internal Security) |
| GS PAPER-1 (ESSAY) | |

GK LEADERS IAS TRAINERS PVT. LTD.,
3032,'Z'BLOCK, 3RD STREET, 13TH MAIN ROAD, ANNA NAGAR WEST, CHENNAI-40
(ADJACENT TO NATESAN INSTITUTE OF CO-OPERATIVE MANAGEMENT)
CONTACT: 044-26224044, 9600033300
web: www.gkias.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org